
REGD. No. M. 4392



ருசிமிக்க பூரிகளை இந்த முறையில் டால்டாவினால் தயாரியுங்கள்!

கோதுமைமாவு, உப்பு இவைகளை கலந்து சலித்தெடுத்துக்கொள்ளவும். 2 தேக்கரண்டி டால்டாவை 1 கப் மாவில் தேய்க்கவும். கொஞ்சம் கொஞ்சமாக தண்ணீர் சேர்த்து பிசைந்த மா தயாரிக்கவும். மாவை நன்ருக பிசைந்த பிறகு தண்ணீர் தெளித்து ½ மணி நேரம் மூடி தனியாக வைக்கவும். பிறகு சிறிய வட்டங்களாக செய்து பரத்தவும். வாணலியில் டால்டாவை சூடாக்கி, பூரிகள் நன்ருக உப்பி இலேசாக சிவக்கும்வரை பொரிக்கவும். டால்டாவை வடிக்க சுத்தமான காகிதத்தில் வைத்திருக்கவும்.

டால்டா ஒரு சுத்தமான தாவரக்கொழுப்பாகையால் அது அதிக நேரம் சூட்டைத்தாங்குகிறது—எனவே, உணவுகள் ஒழுங்காக பக்குவமாவதற்கு போதுமான சாவகாசம் அளிக்கிறது.

ஊட்டம் நாம் உட்கொள்ளும் ஆகார அளவை மட்டும்தான் பொறுத்திருக்கிறதா?

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே—அல்லது என்று வேண்டுமானாலும்—எழுதுங்கள்!

ஸ்ரீ டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்

தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1



கல்கி



KALKI மார்ச் 12, 1950 4 அண

ஆரோக்கியம் திரும்பப் பெறுதல்!



நோய்க்கோ ஆப்ரேஷனுக்கோ பின்னர் உடம்பு பூர்ண சௌக்கியமடைய, சேதமான தேக ஜீவாணுக்களைப் புனரமைத்தாக வேண்டும். ஆனால், இன்று கிடைக்கக்கூடிய உணவுகளில் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத சத்துக்கள் தான் அநேகமாக இருப்பதில்லையே! ஆதலால் ஏதொரு நோயாளிக்கும் உடம்பு தேறி எடை மீண்டும் விருத்தியாவதற்கு அதிகப்படியான விடமின்கள் அவசியம். அன்றியும், ஆப்ரேஷனுக்கோ அல்லது நிமோனியா போன்ற தொற்று நோய்க்கோயின் விஷம் பரவி இரத்தம் கெடாமலிருக்க இயற்கைப் பாதுகாப்பு இருக்க வேண்டியதும் முக்கியம். விடமின் A ஒன்று மட்டுமே இந்தப் பாதுகாப்பு அளிக்கக்கூடும். ஆகாரத்துடன் அன்றாடம் சேர்ப்பதுளிகள் அடமினையும் சேர்த்துக்கொள்வதாயின் உங்கள் A.D விடமின்கள் தேவை முழுவதும் நிச்சயமாக ஈடு செய்யப்படும். அடமின், ஜீரணக்கருவிகள் எவ்வளவு பலவீனப்பட்டிருப்பினும், யாதொரு கெடுதியும் செய்யாது. பாலிலோ பழரசத்திலோ கலந்து உட்கொண்டால் அதன் நாற்றமும் தெரியாது.



சுத்தமான ஷார்க் லிவர் ஆயில் சத்து.

விடமின் 'A' :— உடல் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் சாதகமானது. ஜலதோஷம், சின்னம்மை, நீர்க்கொள்ளுவான், கூகை நீர்க்கட்டி முதலிய நோய்களைத் தடுத்து— வெட்டுக்காயம் இவற்றின் விஷம் பரவாமல் பாதுகாக்கின்றது.

விடமின் 'D' :— கணச்சூட்டைத் தவிர்க்கிறது. உறுதியான எலும்பு, பற்கள் வளர்ச்சிக்கும் ரக்ஷைக்கும்' இன்றியமையாதது.

எம். ஜீ. பி. ஷார்க் லிவர் ஆயில்

நீங்கள் காட் லிவர் ஆயிலே உபயோகிப்பவர்களாயின்; இல்லை, அடமின் வாங்கச் சக்தியில்லாவிடின், எம்.ஜீ.பி. ஷார்க் லிவர் ஆயில் உங்களுக்கு பிரயோஜனப்படும். காட் லிவர் ஆயில் தரக்கூடிய அதே பூர்ண அளவு A.D விடமின்களைத்தவிர அதிகக் கொழுப்பு நீங்கள் பெறும் பொருட்டு சுத்தமான தாவர எண்ணெய்களும் இதில் உள்ளன.

தயாரிப்பாளர்கள் :—


கவர்மெண்ட் ஆயில் பாக்டரி, கள்ளிக்கோட்டை.

டிபார்ட்மெண்ட் ஆப் இண்டஸ்ட்ரீஸ் & காமெர்ஸ்

கவர்மெண்ட் ஆப் மெட்ராஸ்


தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்


பாரி & கோ., லிட்., மெட்ராஸ்.


Lipton's
Flowery Orange
Pekoe
LIPTON'S
HIMALAYAN BLEND
CHOICE
DARJEELING
TEA

அதிக சரசமான விலையில் விற்பனை

சமீபத்தில் வரவழைக்கப்பட்ட உன்னதமான ஸ்விஸ் கடிகாரங்களை 31-3-50 வரையில் மிகவும் சரசமான விலையில் அளிக்கிறோம். 15 முதல் 17 ஜுவல் உள்ளவை 5 வருஷங்களுக்கும் மற்றவை 3 வருஷங்களுக்கும் உத்திரவாதம் உள்ளவை. கூர்மையான பரிசோதனைக்குப் பின் கெடிகாரங்கள் அனுப்பப்படுகின்றன. பிரதி கடிகாரத்துடன், ஒரு தேர்த்தியான பட்டையும், வெல்வெட் பெட்டியும் எழுத்து மூலம் ஒரு உத்திரவாத சர்டிபிகேட்டும் அனுப்பப்படும். விற்பனை வரி, பாக்கிங் தபால் செலவு இல்லாமல் வி. பி. பி. மூலம் அனுப்பப்படும்.





ஒரே பார்சலில் 2 கெடிகாரங்களுக்கு ஆர்டர் கொடுத்தால், படத்தில் காட்டிய தங்க மூடியுடன் கூடிய பேனாவும், 4 கெடிகாரங்களுக்கு ஆர்டர் கொடுத்தால், படத்தில் காட்டிய கருப்பு ரேடியம் டயல் சென்டர் செகண்டுடன் கூடிய அலாரம் கெடிகாரமும் இனாமாக கொடுக்கப்படும். ரூ. 50 மேற்பட்ட இலங்கை ஆர்டர்கள் ரூ 50-ம் இந்த கெடிகாரத்தின் விலைக்கு உள்ள வித்யாச பணத்தை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலமோ அல்லது மணியார்டர் மூலமோ ஆர்டருடன் அனுப்பவும். ரூ. 50 குறைந்த ஆர்டர்கள் ரூ. 5 அட்வான்ஸுடன் அனுப்பவும்.



கர்வெக்ஸ் (சைஸ் $7\frac{3}{4}$)

821	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	ரூ. 38
822	ரோ. கோ. ஸ்டீல்பாக் 5 ஜுவல்	41
823	முழு ரோல்டு கோல்டு 5 ஜுவல்	44
830	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	42
831	ரோ. கோ ஸ்டீல்பாக் 7 ஜுவல்	47
832	முழு ரோல்டு கோல்டு 7 ஜுவல்	50
871	க்ரோம் ஸ்டீல் பாக் 15 ஜுவல்	55
872	ரோ. கோ. ஸ்டீல் பாக் 15 ஜுவல்	65
873	முழு ரோல்டு கோல்டு 15 ஜுவல்	68

வேறுள்ள கெடிகாரங்கள் டஜனேரு வாங்குவோர்க்கும் நீண்ட ஜாபிதாவும் இதே விலையில் கிடைக்கும்



ரவுண்டு சென்டர் செகண்டு (சைஸ் $10\frac{1}{2}$)

807	க்ரோம் ரஸ்கோப் ஓட்டம்	ரூ. 23
808	ரோ. கோ. ரஸ்கோப் ஓட்டம்	28
809	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	36
810	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	41
862	க்ரோம் கேஸ் 15 ஜுவல்	45
863	ரோ. கோ. ஸ்டீல் பாக் 15 ஜுவல்	55
	வாடர் ப்ரூப். ஷாக்ப்ரூப்	
888	க்ரோம் ஸ்டீல் பாக் 15 ஜுவல்	65
889	ரோ. கோ. ஸ்டீல் பாக் 15 ஜுவல்	75
896	க்ரோம் ஸ்டீல் பாக் 17 ஜுவல்	90
897	ரோ. கோ. ஸ்டீல் பாக் 17 ஜுவல்	100



ரவுண்டு (சைஸ் $10\frac{1}{2}$)

803	க்ரோம் ரஸ்கோப் ஓட்டம்	ரூ. 21
804	ரோ. கோ. ரஸ்கோப் ஓட்டம்	26
805	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	31
806	ரோல்டு கோல்டு 7 ஜுவல்	36
859	க்ரோம் கேஸ் 15 ஜுவல்	40
860	ரோ. கோ. ஸ்டீல் பாக் 15 ஜுவல்	50
920	க்ரோம் கேஸ் 7 ஜுவல் ஸ்பெஷல்	35
927	ரோ.கோ. கேஸ் 7 ஜுவல் ஸ்பெஷல்	40




சிறிய ரவுண்டு சென்டர் செகண்டு (சைஸ் $8\frac{3}{4}$)

817	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	ரூ. 31
818	ரோல்டுகோல்டு கேஸ் 5 ஜுவல்	36
819	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	35
820	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	40
868	க்ரோம் கேஸ் ஸ்டீல் பாக் 15 ஜுவல்	70
869	ரோ. கோ. ஸ்டீல் பாக் 15 ஜுவல்	80
892	வாடர் ப்ரூப் க்ரோம் ஸ்டீல் பாக் 15 ஜுவல்	95
893	வாடர் ப்ரூப் ரோ. கோ. ஸ்டீல் பாக் 15 ஜுவல்	105



சிறிய ரவுண்டு (சைஸ் $8\frac{3}{4}$)


813	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	ரூ. 27
814	ரோல்டு கோல்டு கேஸ் 5 ஜுவல்	32
815	க்ரோம் கேஸ் 7 ஜுவல்	32
816	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	37
865	க்ரோம் ஸ்டீல் பாக் 15 ஜுவல்	65
866	ரோ. கோ. ஸ்டீல்பாக் 15 ஜுவல்	75
867	20 மைக்ரான் ரோ. கோ. 17 ஜுவல்	80




லேடீஸ் (சைஸ் $5\frac{1}{4}$)

849	க்ரோம் கேஸ் 5 ஜுவல்	40
850	ரோல்டு கோல்டு 5 ஜுவல்	45
852	ரோல்டு கோல்டு கேஸ் 7 ஜுவல்	50
903	ரோ. கோ. ஸ்டீல் பாக் 15 ஜுவல்	70
904	முழு ரோ. கோ. கேஸ் 15 ஜுவல்	73
909	முழு 9 காரட் கோ. கேஸ் 15 ஜுவல்	100
910	முழு 18 காரட் கோ. கேஸ் 15 ஜுவல்	120

CAROLINE AGENCIES (INDIA) SEC. 17. P. B. 6764, BOMBAY-22


எப்பொழுதும் யாருக்காகவாவது அல்லது எதற்காகவாவது சேமித்து வைக்கத்தான் வேண்டும்.
முதலீடுங்கள்
நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்களில்
இவை தபாலாபீஸ்களிலும், அதிகாரம் பெற்ற ஏஜெண்டுகளிடமும் (நியமிக்கப்பட்டிருக்கும் இடங்களில்), ஸேவிங்ஸ் பீரோக்களிலும் கிடைக்கும்.
புது டில்லி இந்திய சர்க்கார் நிதி மந்திரி இலாகாவால் வெளியிடப்பட்டது.
AC78TM



அங்கே அவனுக்கு முன் போயிருந்து "சாம்பு! ஜாக்கிரதை பட்டணத்திலே குழாயடியிலே சொட்டுச் சொட்டாக ஜலம் விழக் குளித்திருக்கிறாய். இங்கே சரல் மண் எடுத்து முகத்தில் வீசுவது போல் 'சளீர் சளீர்' என்று அருவி விழுகிறது, ஜாக்கிரதை! பாறை வேறு சருக்குகிறது. உஷார்!" என்று எச்சரிக்கை செய்து வரவேற்றான்.

'அட பாவி! இங்கேயும் நீ வந்து தொலைந்தாயா!' என்று எண்ணினானே தவிர அவன் கூறிய இதமான வார்த்தைகள் ஒன்றும் காதில் ஏறவில்லை. அதற்கடுத்த நாள் ஐந்தருவிக்குப் போனான் சாம்பு. அங்கேயும் வந்தான் அருணாசலம். அதற்கு அடுத்த நாள் புலியருவிக்குப் போனான் அங்கேயும் தோன்றினான் அருணாசலம். இலஞ்சி என்று குற்றாலத்துக்குப் பக்கத்தில் ஒரு முருகப் பெருமான் க்ஷேத்திரம் இருக்கிறது. அங்கே போனான் சாம்பு; அருணாசலம் அங்கேயும் வந்து சேர்ந்தான்.

இப்படிச் சாம்பு எங்கே யெல்லாம் போனானோ அங்கே யெல்லாம் அருணாசலம் சொல்லிவைத்தாற் போல் வந்து கொண்டிருந்தான். அருணாசலத்தினிடமிருந்து தப்ப என்னவெல்லாமோ யுக்திகள் தந்திரங்கள் கையாண்டு பார்த்தான் சாம்பு. ஒன்றும் பலிக்கவில்லை. கடைசியில் அவனுக்கு ஒரே ஒரு வழி தான் புலப்பட்டது. அதாவது அன்றைக்கே சொல்லிக் கொள்ளாமல் ஊருக்குத் திரும்பி விடுவது என்ற வழிதான்.

இன்னும் பதினைந்து நாள் லீவ் பாக்கியிருந்தது. எனினும் அவனுக்கு எப்படியாகிலும் அருணாசலத்திடமிருந்து தப்பினால் போதும் என்று ஆகிவிட்டது. அந்த எண்ணத்தில் பதினைந்து நாள் வீணாகப் போகிறதே என்றுகூட எண்ணவில்லை. ஆகவே, அன்றைய திருவனந்தபுர எக்ஸ்பிரஸிலேயே ஊருக்குத் திரும்பி விடுவது என்று தீர்மானித்தான் சாம்பு.

வண்டி தென்காசி ஸ்டேஷனுக்கு வர ஐந்து நிமிஷம் இருக்கும் போதுதான் சாம்பு டிக்கெட் வாங்கிக் கொண்டு பிளாட்பாரத்துக்கு வந்தான்.

பிளாட்பாரத்தில் ஒரே கூட்டம். சாம்புவுக்கும் அந்தக் கூட்டத்தைக் கண்டபோது ஒரே மலைப்பாக இருந்தது. 'எப்படி இந்தக் கூட்டத்தில் வண்டியில் ஏறி இடம் பிடித்து உட்காரப் போகிறோம்' என்று அதைரியப்பட்டான்.

அதற்குள் வண்டி பிளாட்பாரத்திற்குள் நுழைய ஆரம்பித்தது. ஜனங்கள் ஒரே இரைச்சலுடன் எழுந்து முன்னும் பின்னும் இடித்து மோதி ஓடிக்கொண்டிருந்தார்கள். அப்போது "ஏ சாம்பு! இங்கே வா! இடம் இருக்கிறது!" என்று அதே அருணாசலத்தின் பழகிய குரல் வந்தது. ஆகா! அந்தக் குரலில்தான் இப்போது எவ்வளவு இனிமை! எவ்வளவு சுநாதம்!

அருணாசலம் ஏறியிருந்த பெட்டியில் ஏறச் சாம்பு ரொம்பவும் கஷ்டப்பட்டுப் போய்விட்டான். ஏனெனில் வழியெல்லாம் ஜனங்கள் அடைத்து நின்றுகொண்டிருந்தனர். ஒருமாதிரி சாம்பு உள்ளே வந்து அந்த இடத்தில் உட்கார்ந்தான். சாம்புவின் மனம் ஆறுதலடைந்தது.

அவன் உட்கார்ந்தானோ இல்லையோ, "ஏண்டா, பழி! இந்தத் தென்காசி ஸ்டேஷனிலே இந்தக் கூட்டத்தில் நிற்கிறாயே. இங்கே நின்றால் இடம் எப்படிக் கிடைக்குமாம்? நாளு வருஷம் இங்கே நின்றால்கூட இடம் கிடைக்காதே! இது தெரிந்துதான் நான் முந்தைய ஸ்டேஷன், செங்கோட்டைக்குப் போய் ரயில் ஏறி வருகிறேன். நமக்குத் தெரிஞ்சவா யாராகிலும் தென்காசியில் ஏறுவார்கள் என்றுதான் இடம் போட்டு வைத்தேன். நல்லவேளையாக நீ வந்து சேர்ந்தாய் —பேச்சுத் துணைக்கு ஆச்சு" என்றான் அருணாசலம்.

இப்போது சாம்பு தனக்கு ரயிலில் இடம் கிடைத்துவிட்ட சந்தோஷத்திலிருக்கிறான். இடம் பிடித்துக் கொடுத்த அருணாசலத்திடம் அவனுள்ளத்தில் அளவு கடந்த நன்றியுணர்ச்சிப் பெருகியிருக்கிறது! இந்தச் சுபவேளையில் நாமும் சாம்புவிடம் விடைபெற்றுக் கொள்வோம். ஏனெனில் அடுத்த நிமிஷம் அருணாசலத்தைப் பற்றி என்ன நினைப்பான் என்று சொல்ல முடியாதல்லவா? ஆகவே, "போய் வருகிறோம், சாம்பு! ஜெய் பாரத்!"

ஏ சாம்பு!

எஸ். வி. எஸ்.

ஒரே ஊரில் சேர்ந்தாற் போல் கொஞ்ச நாட்கள் இருந்து விட்டால் ஒரு வித அலுப்பு ஏற்பட்டு விடுகிறது. அதன் விளைவாக ஊரை மறந்து, வீட்டை மறந்து, பெண்டு பிள்ளைகளை மறந்து தினம் பார்த்துப் பழகும் நண்பர்களை மறந்து எங்கேயாகிலும் போய் இருந்து விட்டு வருவோமா என்று தோன்றுவது சகஜம். அவ்விதம்தான் நம்முடைய சாம்புவுக்கும் தோன்றியது. மூன்று வருஷம் சேர்ந்தாற்போல் ஒரே ஊரில் இருந்த அலுப்பின் காரணமாக ஒரு மாச லீவ் போட்டுவிட்டு எங்கேயாகிலும் போய்விட்டு வர உத்தேசித்தான்.

முதலில் உதகமண்டலத்துக்குப் போகலாமா என்று நினைத்தான். பின்னர் அங்கு ஏற்படக்கூடிய செலவுக்கும் தன் பொருளாதார நிலைக்கும் அஜகஜாந்தரம் என்ற நினைவு வரவே, உதக மண்டலத்தைப் பற்றி நினைத்ததே தவறு என்பதை யுணர்ந்தான்.

பின்னர் கோடைக்கானலுக்குப் போகலாமா என்று யோசித்தான். அதுவும் செலவு விஷயத்தில் உதகமண்டலத்துக்கு ஒரு தம்பிதான் என்று தீர்மானித்துக் கைவிட்டான். கடைசியில் திருக்குற்றாலத்துக்குப் போக முடிவு செய்தான்.

திருக்குற்றாலமும் செலவு அதிகமாகக் கூடிய இடமாயினும், அவனுக்குக் குற்றாலத்திலேயே தங்க வேண்டிய அவசியமில்லை. குற்றாலத்திலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள தென்காசியில் அவனுடைய தூரத்து உறவினர் ஒருவர் இருந்தார். அவர் வீட்டில் ஜாகையும் சாப்பாடும் வைத்துக் கொண்டு, தினமும் காலையும் மாலையும் குற்றாலத்துக்கு நடந்தோ பஸ்ஸிலோ போய்விட்டு வர உத்தேசித்தான். குற்றாலம் போக அவன் தீர்மானித்ததற்கு இன்னொரு காரணமுமுண்டு. அதாவது திருக்குற்றாலம் பாடல் பெற்ற ஒரு சிவஸ்தலம் என்பது தான். ஆமாம்; சாம்பு சற்று தெய்வ பக்தி உள்ளவன்தான்!

ஆகக்கூடி, சாம்பு தற்சமயம் இருக்கும் ஊரையும் பக்கலையும் மறந்து, ஒருமாதம் இருந்து விட்டு வர வேண்டும் என்ற நோக்கத்துடன் திருக்குற்றாலம் நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

திருக்குற்றாலத்தில் 'பெரிய அருவி' முத்து மழை பொழிவதைக் கண்ட சாம்பு அப்படியே வைத்த விழி வாங்காமல் பார்த்த வண்ணம் நின்றான். கூடவே தான் ஒரு கற்பனை மிக்க கவியாகப் பிறக்கவில்லையே என்ற ஏக்கமும் ஏற்பட்டது. இவ்விதம் ஆச்சரியத்துடனும் ஏக்கத்துடனும் பார்த்துக் கொண்டிருந்த போதே, "ஏ சாம்பு!" என்ற பழகிய குரல் காதில் விழுந்தது. திரும்பிப் பார்த்தான். அடுத்த தெரு அருணாசலம் துள்ளிக் குதித்துக் கொண்டு சாம்புவை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தான். 'அட பாவமே, இவன் இங்கே எதற்கு வந்து சேர்ந்தான்?' என்றுதான் எண்ணினான் சாம்பு. சாம்புவைக் கண்ட ஆனந்தத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் அருணாசலமோ, "சாம்பு! நீ எப்போ வந்தாய்?" என்று கேட்டான்.

"இப்போதுதான்."

"லீவில் வந்தாயா?"

"ஆமாம்."

"எத்தனை நாள்?"

"ஒரு மாசம்."

"நான் கூட ஒரு மாச லீவில்தான் வந்திருக்கிறேன்" என்று அருணாசலம் கூறியவுடன் சாம்புவுக்குத் 'திக்' என்றது. இருந்தாலும் சமாளித்துக்கொண்டு "அருணாசலம் நான் வரட்டுமா? குளிக்கணும் பார்!" என்று சொல்லிக் கொண்டே நழுவினான் சாம்பு.

• • •

மறுநாள் சாம்பு எண்ணெய்க் கடையில் தலைக்குத் தேய்த்துக் கொள்ள சந்தனாதித் தைலம் வாங்கிக்கொண்டிருந்தான். அந்த இடத்திலேயும் அருணாசலம் தோன்றி விட்டான்.

"பார்த்தாயா சாம்பு! நம்ம ஊரிலே எட்டணாவுக்கு வாங்கக்கூடிய புட்டியை இங்கே கூசாமல் ஒரு ரூபாய் சொல்லுகிறதை! என்ன அக்கிரமம்! பகல் கொள்ளை!" என்றான் அருணாசலம்.

'நம்ம ஊரை மறந்திருக்க இங்கே வந்தால் இவன் ஒருத்தன் எங்கே போனாலும் அங்கே வந்து வந்து கழுத்தறுக்கிறான். அதோடில்லாமல் நம்ம ஊர் விலைவாசியும் இந்த ஊர் விலைவாசியையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தான் கஷ்டப் படறதோடல்லாமல் நம்மை வேறு உபத்திரவப் படுத்துகிறான்' என்று நினைத்தான் சாம்பு.

அதற்கடுத்த நாள் பெரிய அருவிக்குக் குளிக்கப் போனால் அருணாசலத்தின் மீது இடறி விழ நேரும் என்று மலைமேல் சண்பகாதேவி (அருவி)க்குப் போனான்.

மூர்த்தி; டபின் டி. எஸ். புருஷோத்தம நாயுடு; அ. ஜம்புலிங்கம்.

ஸ்ரீ கொ. சு. வெங்கடசுப்ரமணியம், "காந்தி நிலையம்" கொடுமுடி மூலமாக ரூ. 100-க்கு விவரம்:—

ரூ. 5—0—0 கொ. மா. மருடபதி, கொடுமுடி; வி. செங்கோட கவுண்டர், சாஸ்மின், பாசூர்; கொ. சு. வெங்கடசுப்பிரமணியம், "காந்தி நிலையம்" கொடுமுடி; கே. வி. எஸ். பி. அன்டு சன்ஸ், ஜெனரல் மெர்ச்சன்ட்ஸ், ஈரோடு; செல்லக் குமாரசாமி, கொளாநல்லி; எ. கே. பெரியசாமிக் கவுண்டர், மிராசுதார், வடக்குப் புதுப்பாளையம்; வி. சென்னக் கவுண்டர், மிராசுதார், நஞ்சைப் பாளையம்; கே. எம். சின்னுச்சாமி, கொடுமுடி; கே. பி. கோவிந்தசாமிச் செட்டியார், கொடுமுடி; பி. பெரியண்ணக் கவுண்டர், மிராசுதார், தெ. புதுப்பாளையம்; ப. பழனிசாமிக் கவுண்டர், மிராசுதார், தெ. புதுப்பாளையம்; என். பெரியசாமி, மிராசுதார், கொடுமுடி; கே. பி. கனகசபாபதி, கொடுமுடி; பி. பெரியசாமிக் கவுண்டர், மிராசுதார், தெ. புதுப்பாளையம்; வி. சங்கப்பக் கவுண்டர், மிராசுதார், தெ. புதுப்பாளையம்; என். பெரியசாமிக் கவுண்டர், மிராசுதார், தெ. புதுப்பாளையம்; பி. கெ. பெரியசாமி, தெ. புதுப்பாளையம்; ப. சென்னப்பக் கவுண்டர், தெ. புதுப்பாளையம்; பி. சென்னப்பக் கவுண்டர், மிராசுதார், தெற்குப் புதுப்பாளையம்; க. முத்துசாமி, தெ. புதுப்பாளையம், கொடுமுடி.

சென்னை வெங்கடாசல முதலித் தெருவிலுள்ள சுதந்திர வாலிபர் சங்கத்தின் மூலமாக ரூ. 46-க்கு விவரம்:—

ஸ்ரீ டி. ஜி. கோபாலச் செட்டியார், சுதந்திர வாலிபர் சங்கம், சென்னை	11	0	0
ஸ்ரீ பி. எஸ். குப்புசாமி முதலியார், சுதந்திர வாலிபர் சங்கம், சென்னை	10	0	0
ஸ்ரீ கே. லோகநாத முதலியார், சுதந்திர வாலிபர் சங்கம், சென்னை	10	0	0

ரூ. 5—0—0 கே. பழனி செட்டியார், சுதந்திர வாலிபர் சங்கம், சென்னை; கே. ஆர். ஏகாம்பரச் செட்டியார், சுதந்திர வாலிபர் சங்கம், சென்னை; பி. பாண்டிய நாடார், சுதந்திர வாலிபர் சங்கம், சென்னை.

மீரட் கன்டோன்மென்ட் வார்ட், 2-வது பீல்ட் செக்ரிடேரியைச் சேர்ந்த ஸ்ரீ கே. எஸ். ராஜகோபாலன் மூலம் ரூ. 15-க்கு விவரம்:—

ஸ்ரீ கே. எஸ். ராஜகோபாலன், மீரட் கன்டோன்மென்ட்	2	0	0

ரூ. 1—0—0 எம். சோமணி, மீரட் கன்டோன்மென்ட்; என். வேலாயன் நாயர், மீரட் கன்டோன்மென்ட்; கே. குமார பிள்ளை, மீரட் கன்டோன்மென்ட்; கே. சீனிவாசன், மீரட் கன்டோன்மென்ட்; ஆர். ரங்கசாமி, மீரட் கன்டோன்மென்ட்; ஆர். பெருமாள், மீரட் கன்டோன்மென்ட்; கே. கிருஷ்ண பிள்ளை, மீரட் கன்டோன்மென்ட்; ஜோசப் தாமஸ், மீரட் கன்டோன்மென்ட்; வி. வீரராகவன், மீரட் கன்டோன்மென்ட்; பி. சபாரத்னம், மீரட் கன்டோன்மென்ட்; எஸ். முத்துசாமி, மீரட் கன்டோன்மென்ட்; ரங்க நாயுடு, மீரட் கன்டோன்மென்ட்; ஸ்டான்லி பின்டோ, மீரட் கன்டோன்மென்ட். ஆக ரூ. 15 0 0

கோல்மூரி இந்தியன் கேபிள் கம்பெனி, ஸ்ரீ என். ஜெயராமன் மூலமாக ரூ. 61-க்கு விவரம்:—

ரூ. 5—0—0 என். நடராஜன், இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; டி. எஸ். வைத்தியநாதன், டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி; என். என். சுந்தரேசன், டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி.

ஸ்ரீ கே. ராமமூர்த்தி, லோகோமோடிவ் இன்ஜினியரிங் கம்பெனி, கோல்மூரி	4	0	0

ரூ. 3—0—0 வி. பி. எஸ். மணி, டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி; என். ஜெயராமன், இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; ஜி. கெங்காதரன், டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி.

ரூ. 2—0—0 என். எஸ். மகாதேவன், டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி; ஜி. சேதுராஜன், டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி; என். கோபாலன், இந்தியன் கேபிள் கம்பெனி கோல்மூரி; எம். நாராயணசாமி, லோகோமோடிவ் இன்ஜினியரிங் கம்பெனி, கோல்மூரி; எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி, டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி; வி. பி. சாரதி, டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி; ஜி. சங்கர், டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி; கே. என். மேனன், டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி.

ரூ. 1—0—0 என். வெங்கட்ராமன், இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; என். வீரராகவன், இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; ஆர். எஸ். மணி, இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; என். வெங்கடாசலம், இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; எ. என். சிதம்பரம், இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; கே. எம். சக்காரியா, இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; ஆர். எம். தம்பி, இந்தியன், கேபிள் கம்பெனி, கோல்மூரி; வி. நீலகண்டய்யர், இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; கே. ராமசாமி, டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி; பி. என். எஸ். ஆச்சன், இந்தியன் ஸ்டீல் அன்டு வயர் புராடக்ட்ஸ், இந்திரா நகர்; என். வைத்தியநாதன், இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; ஜி. ஆர். சதூர், இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; எ. கே. கோஷ், இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி; எம். ஆர். ஜெகதீசன், டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி; டி. வி. ராமரத்தினம், டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி; பி. எஸ். கண்ணன், டின்பிளேட் கம்பெனி, கோல்மூரி; எஸ். ஆர். சுப்பிரமணியம், இந்தியன் கேபிள் கம்பெனி, கோல்மூரி.

ஆக மொத்தம் நாளது வரை வரவு ரூ. 41,389 7 8

பிப்ரவரி 19உ "கல்கி" இதழில் குறிப்பிட்டிருந்தவர்களைத் தவிர, கீழ்க் கண்ட அன்பர்களும் காந்தி ஞாபகார்த்த ஸ்தாபி நிதிக்கு நன்கொடை வசூலித்து வருகிறார்கள். இவர்களிடம் நன்கொடை செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்:—

1. ஸ்ரீ ஆ. கோவிந்தராஜ முதலியார், தலைவர், ஸ்ரீ சுதந்திர வாலிபர் சங்கம், ராசப்பச் செட்டித் தெரு, (கந்தசாமி கோயில் சமீபம்) சென்னை; 2. ஸ்ரீ கே. எஸ். முனுசாமி, காரியதரிசி, தாலுகா காங்கிரஸ் கமிட்டி, நாமக்கல்; 3 ஸ்ரீ என். ஜயராமன், இன்டியா கேபிள் கம்பெனி லிமிடெட், கோல்மூரி, டாடா நகர்; 4. ஸ்ரீ ஆர். எஸ். விசுவநாத், தேவி விலாஸ், விஜயநகரம்.

ஆர்யபவன் ஹோட்டல், சென்னை 101 0 0

ஸ்ரீ எம். வி. சுப்புராமி ஐயர், வினாயகர் கோவில் தெரு, பார்க் டவுன், சென்னை 50 0 0

ஸ்ரீ எஸ். துரைசாமி முதலியார், மன்னன் பொன்னப்ப முதலித் தெரு, திருவல்லிக்கேணி 25 0 0

ஸ்ரீ பி. எம். ஷண்முக முதலியார், ஆனைகாபுத்தூர் 25 0 0

ஸ்ரீ சி. பி. ராமய்யர், வெங்கடாசல முதலித் தெரு, சாயப்பேட்டை, சென்னை 25 0 0

ஸ்ரீ ஸ்ரீனிவாசன் லைன்ஜி அண்டு சன். கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை 11 0 0

ஸ்ரீ எ. கே. முத்துக்குமாரசாமி செட்டியார், ராசப்ப செட்டித் தெரு, பார்க்டவுன், சென்னை 10 0 0

ஸ்ரீ பி வி. அனந்தராமையர், ராமானுஜகூடம் தெரு, வண்ணாரப்பேட்டை, சென்னை 10 0 0

ஸ்ரீ எம். ஷண்முகம், தங்கசாலைத் தெரு, சென்னை 5 0 0

ஸ்ரீ எம். வி. பட்டேல், கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை 5 0 0

ரூ. 1 0 0 ஸ்ரீமதி எ. எஸ். மீனாட்சி, மதுரை; ஆர். நீலநாராயணா, திருக்காட்டுப்பள்ளி; என். எஸ். சுப்பிரமணியன், மதுரை; எஸ். நடேச முதலியார், வெங்கு பிள்ளைத் தெரு, சென்னை; ஜே. என். சங்கரசாமி, எட்டப்பாளையம் தெரு, சென்னை; எஸ். ஆதிநாராயணன், முதல் லைன் பீச், சென்னை; சா. த. வெங்கடாசலபதி ஐயர், சௌராஷ்டிரபுரம், திண்டுக்கல்; டி. எஸ். ராமச்சாரி, லக்ஷ்மிபுரம், மதுரை; கே. ஆர். நரசிம்மாச்சாரி, லக்ஷ்மிபுரம், மதுரை; எஸ். என். சுப்புசாமி ஐயர், லக்ஷ்மிபுரம், மதுரை; மாணிக்க நரசிம்மய்யர், மீனாட்சிபுரம், மதுரை; வி. ஜே. வெங்கடாசலபதி ஐயர், கான்பாளையம், மதுரை; எ. ஜே. ஆர். சுந்தர்ராஜ், கிருஷ்ணாபுரம், மதுரை; அந்தியா சமத்திரி ஐயர், மதுரை; ஜேங்கா நாதசாமி ஐயர், இஸ்மாயில்புரம், மதுரை; டி. கே. சுப்புராமாச்சாரி, அன்டு பிரதர், காலிப்பட்டி ரோடு, மதுரை; கொண்டா வெ. மன்னார்சாமி ஐயர், கான்பாளையம் மதுரை; ராணி கிருஷ்ணமூர்த்தி, மதுரை; அ. நடேச. நாகேந்திரய்யர், லக்ஷ்மிபுரம், மதுரை. ஜெய்கா வெங்கடாசலபதி ஐயர், இஸ்மாயில்புரம் மதுரை; நம்பி, ராஜகோபாலய்யர் மதுரை; நாககொண்டா, ராமசாமி ஐயர், மதுரை; செம்பு ராமமூர்த்தி, இஸ்மாயில்புரம், மதுரை; வி. கே. வெங்கட்ராம், கான்பாளையம், மதுரை; ஆர். வி. ராமகிருஷ்ணய்யர், கிருஷ்ணாபுரம், மதுரை.

நாமக்கல் நகர காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீ கே. எஸ். முத்துசாமி மூலமாக ரூ. 147க்கு விவரம் :—

ரூ 10-0-0 வி. ராமச்சந்திரன், ராமகிருஷ்ண லாட்ஜ். நாமக்கல்; எம். லக்ஷ்மணன். ஜகந்நாத பிரஸ், கரூர்; ஆர். ராமசாமி செட்டியார், நல்லிப்பாளையம்.

ரூ. 5—0—0 என். ராமசாமி, "கல்கி" ஏஜண்டு, நாமக்கல்; பொாமம செட்டியார், சேடபூர்; நா. கிருஷ்ணசாமிப் பிள்ளை, மளிக் கடை, நாமக்கல்; வி. மாரப்பக் கவுண்டர், கூர்க் கடை, நாமக்கல்; வி. கே. கருப்பையா, பாரதி ஒளிபெருக்கி, நாமக்கல்; எஸ். சீனிவாச ஐயங்கார், தனலக்ஷ்மி ராஜன் மில், நாமக்கல்; ஆறுமுகம் செட்டியார், எண்ணெய்க்கடை, நாமக்கல்; சி. எ. லக்ஷ்மணக் கவுண்டர், கோசாருத்தூர்; பஞ்சாபகேசன், நாமக்கல்; டி. கோதண்டராம செட்டியார் அண்டு சன்ஸ், மளிக்கடை, நாமக்கல்; எம். எம். நடேசன் செட்டியார், நல்லிப்பாளையம்; கே. எஸ். முத்துசாமி, காரியதரிசி, ந. கா. க. நாமக்கல்.

ரூ. 3—0—0 பி. நாராயணசாமி செட்டி, ஜவுளிக்கடை, நாமக்கல்; எஸ். ராமமூர்த்தி நாமக்கல்.

ரூ. 2—0—0 எஸ். எஸ். அப்பாவுப் பிள்ளை (2-8-0) லாலாப்பேட்டை; பி. பெத்து ரெட்டியார், நாமக்கல்; எம். செல்லப்பன், நாமக்கல்; ஸ்ரீ முருகானந்தா மில்ஸ், நாமக்கல்; எம். ராமசாமிக் கவுண்டர், நாமக்கல்; முத்துசாமிப் பிள்ளை, பாத்திரக்கடை; நாமக்கல்; நாமக்கல் கோட்டை போர்டு எலிமெண்டரி ஸ்கூல் உபாத்திகள்; ஆர். அமிர்தலிங்கம், நாமக்கல்; கே. முத்துசாமி ஆச்சாரி, பாத்திரக்கடை, நாமக்கல்; வி. நல்லப்ப செட்டியார், காதப்பள்ளி.

ரூ. 1—0—0 எஸ். சோமு, நாமக்கல்; எம். எஸ். எஸ். வேலுசாமி, நாமக்கல்; எஸ். வி. வீராசாமிப் பிள்ளை, நாமக்கல்; என். சீனிவாசன், நாமக்கல்; என். ஏ. ஷத்தர்கான், நாமக்கல்; டி. என். நாதன், திருச்செங்கோடு; சேர்மென் எட்வர்டு நாமக்கல்; என். கோபாலன், நாமக்கல்; ஆர். மருதநாயகம் பிள்ளை மோகனூர்; ஆர். கருப்பண்ணன், நாமக்கல்; என். ஸ்ரீ. ராகவேந்திரராவ், பட்டாமணியம், நாமக்கல்; ஆர். ராகவேந்திரராவ், கர்ணம், நாமக்கல்; கந்தசாமிக் கவுண்டர், வள்ளிபுரம்; கே. எஸ். கருப்பண்ணன், நாமக்கல்; எஸ். காளியண்ணக் கவுண்டர், மெடிகல் ஹால், நாமக்கல்; வி. நல்லப்பன், நாமக்கல்; எம். என். ராமசாமி செட்டியார், நாமக்கல்; எம். பி. கந்தசாமி மோகனூர்; சி. சங்கரநாத பிள்ளை, நாமக்கல்; பூ. சா. வையாபுரிக்கவுண்டர், நகர காங்கிரஸ் கமிட்டித் தலைவர், நாமக்கல்; ராமலிங்க செட்டியார், நல்லிப்பாளையம்; டி. கே. கருப்பஞ் செட்டியார், நாமக்கல்; ஆர். பாலன், நாமக்கல்; வி. மாரிமுத்துக் கவுண்டர் ஜோதி, நாமக்கல்; பி. சுப்பராயன், பரமத்தி; எம். கே. அருணாசலம், நாமக்கல். டி. என். சுந்தரேச ஐயர், ராசிபுரம்; மணி ஐயர், நாமக்கல்; வி. குழந்தைவேல், திப்பிரமகாதேவி; எம். டி. ராமானுஜம், மோகனூர்.

ஸ்ரீ எம். ஸ்ரீ. நாராயணசாமி, அஸிஸ்டெண்ட் இன்ஜினியர், சென்னை மூலம் ரூ. 50-க்கு விவரம் :—

ஸ்ரீ டி. மார்டின், அஸிஸ்டெண்ட் இன்ஜினியர், சென்னை 10 0 0

ரூ. 5—0—0 சி. வி. சுப்ரமணியம், அஸிஸ்டெண்ட் இன்ஜினியர்; ஆர். கே. ஸ்ரீநிவாசன், அஸிஸ்டெண்ட் இன்ஜினியர்; எஸ். வீரராகவன், ஜூனியர் இன்ஜினியர்; வர்க்கீஸ், ஜூனியர் இன்ஜினியர்.

ரூ. 1—0—0 எ. அற்புதராஜ்; சு. முகம்மது இஸ்மாயில்; எம். சம்பந்தம்; எம். வி. நடராஜன்; ஆர். பீமராவ்; ஏ. கே. சுப்பிரமணியம்; ஸ்ரீ. சீனிவாசன்; ஏ. வி. சுப்பாராவ்; பி. கே. சந்தானகிருஷ்ணன்; ஏ. டி. சி. ராமானுஜாச்சாரி; ஏ. எஸ். மணியன்; எம். எஸ். கணேசன்; எஸ். வசுதேவராவ்; என். இ. கல்யாணசுந்தரம்; ஐ. சுவாமிக்கண்ணு; முகம்மது ஹனீப்; பூ. அ. துரைராஜன்; வி. ராம

அவர்கள் எப்படி அறுவடை செய்வார்கள்? எனினும் ரொம்பவும் சிரமப்பட்டு முழங்கால் தண்ணீரில் கதிரை அறுத்துக் கரையில் கொண்டுபோய் வைக்கிறார்கள். அந்தக் காட்சியைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது. இனியாவது அதிகாரிகள் இச் சமயத்தை எச்சரிக்கையாகக் கொண்டு கவனத்துடன் நடந்து கொள்வார்கள் என்று எண்ணுகிறேன்.

கண்டனூர்
1—3—50

அழகப்பன்

•••

✶ தமிழ் படும் பாடு!

இலங்கையில் பெரும்பாலனவர் சிங்களவராக இருந்தபோதிலும் அவர்களுக்கடுத்தபடி தமிழர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள். ஆகவே சிங்களத்தின் பிரதான நகரமாகிய கொழும்பில் தமிழ் அதிகமாகப் பேசப் பட்டு வந்த போதிலும் தமிழ் மொழியின் அழகிய சொற்கள் எல்லாம் வழக்கில் சிதைந்து காணப்படுகின்றன.

கொழும்பில், டேம் ஸ்டிரீட் என்ற பெயரினைக் கொண்ட ஒரு வீதி இருக்கிறது. இதில் இலவசமாகப் பல் பிடுங்கும் வைத்தியசாலை ஒன்று இருக்கிறது.

இங்கு "பல் பிடுங்கப்படும்" என்று குறிப்பிடுவதை, பால் பிடுங்கப்படும் என்று பலகையின் மூலம் விளம்பரப்படுத்தி இருக்கின்றனர். இப் பிழையினை இன்னும் மாற்ற முற்படவில்லை. சர்க்காரே தமிழினை கிழித்தால், பிறரின் இழிவுக்குக் கேட்கவா வேண்டும்? இது மட்டும் அல்ல, இன்னும் எவ்வளவோ! கணக்கில் அடங்கா!!

இந்த நிலைமையில் கொழும்புக் கோர்ட்டில் எல்லா அலுவல்களையும் தமிழ் மூலம் தான் பார்க்கப்படல் வேண்டும் என்ற ஒரு பிரச்னை இருக்கிறது. இலங்கையின் முக்கிய நகரமாகிய இந்த இடத்தில், வியாபாரம் நடந்து இருப்பதாலும், இன்னும் வேறு துறைகளில் மேம்பட்டு இருப்பதாலும், இங்கு மட்டும் ஆங்கிலத்தின் மூலமாகவே எல்லாவற்றையும் பரிசீலனை செய்யப்படும் என்று சர்க்கார் அறிவுறுத்தினர். நல்ல வேளை தமிழ் இங்கு பிழைத்தது!

கொழும்பு
24—2—50

செ. ரங்கநாதன்

மகாத்மா காந்தி ஸ்தூபி நிதி

ஸ்ரீ ஏ. வி. ஒய். நாராயணன், புதுடில்லி	100	0	0
ஸ்ரீ எஸ். கே. சுப்பையா செட்டியார், நாணய வியாபாரி, சாலை பஜார், திருவனந்தபுரம்	51	0	0
ஸ்ரீ எம். சுப்பிரமணிய கவுடு, நாரேம்பபுரம் வீதி, கரூர்	50	0	0
மெஸர்ஸ் எம். ஆர். சர்வீஸ் சிப்பந்திகளின் நன்கொடை	42	0	0
ஸ்ரீ பி. சண்முகம் பி. ஏ., செக்ரெட்டரி, கோவாப்ரேடிவ் டவர் அண்டு ஜெனரல் இன்ஷூரன்ஸ் சொஸைடி, சென்னை	25	0	0
ஸ்ரீ கே. ஆர். வைத்தியநாத ஐயர், சந்திர பவன், வண்ணியப்பிள்ளைத் தெரு, ஜி. டி. சென்னை	25	0	0
ஸ்ரீ வி. ராமசாமி, மீட்டியரோலாஜிகல் ஆபீஸ், பூனா	20	0	0
ஸ்ரீ சுவாமிநாத ஆத்ரேயன், வனிதா மகால், தஞ்சாவூர்	15	0	0

ரூ. 10—0—0 ஜவஹர் இளைஞர் கழகம், காரைக்கால்; ஸ்ரீ எஸ். ஏ. ராமன் (துஷ்யந்தன்) புதுச்சேரி; ஸ்ரீமதி கே. எஸ். மரகதவல்லி, சர் சி. வி. ராமன் ரோடு, சென்னை; ஸ்ரீ ராமலிங்கம், சென்ட்ரல் ஸ்கூல், புதுச்சேரி. (8 0 0)

ரூ. 5—0—0 கே. பொன்னுசாமி, ஹவில்தார், மிலிட்டரி கண்டோன்மெண்ட்; ஆர். நாராயணன், கரூர்; பி. சி. பலராம ராஜா, ராஜபாளையம்; எம். என். நாகரத்தினம் பிள்ளை, மெயின் ரோடு, ஹட்டன், சிலோன்; வி. ராமசாமி, அவுனிக்கடை வீதி, திருப்பூர்; மு. கிருஷ்ணன், டாட்டா இரும்புத் தொழிற்சாலை, ஜாம்ஷெட்பூர்; ஸ்ரீமதி கண்ணம்மா, சென்னை; ஜனாப் எஸ். துரை, வண்டிப்பேட்டை ராஜு; எஸ். சுந்தரராஜன், மெயின் ரோடு, ஹட்டன், சிலோன்

ரூ. 3—0—0 ச. சொக்கலிங்க ஆச்சாரி, கண்டனூர், ராமநாதபுரம்; எஸ். வி. முருகேசன், காரைக்குடி.

ரூ. 2—0—0 ஜெ. எஸ். வாசன், (2-4-0) அன்சாரி கடை, புதுச்சேரி; எஸ். கிருஷ்ணசாமி ஐயர், மன்னார்குடி; வே. ராமமூர்த்தி, ஜபல்பூர்; எஸ். சுப்பிரமணியம், ஜபல்பூர்; எஸ். வீராசாமி நாயுடு, போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர், கிளனூர்; எம். வி. கே. ராகவன், ஜெனரல் மானேஜர் ஆபீஸ், பி. என். ரயில்வே, கல்கத்தா; ஏ. கிருஷ்ணசாமி, சுதந்திரதேவி பிரஸ், திருவண்ணாமலை; ஆர். கோபாலன், சேஷபுரம், தென்னூர், திருச்சி.

ரூ. 1—0—0 எஸ். கல்யாண பசுபதி, கரூர்; எம். ஜே. செட்டி, ஜபல்பூர்; வி. ஆர். பத்மநாபன், சென்னை; எம். ரங்கநாதன், திருப்பூர்; பி. சாமிநாதன், தாம்பரம்; எஸ். எஸ். நித்தியானந்தம், தாம்பரம்; ஹரிஜன சேவா சங்கம், பேரளூர்; ஏ. வேலு, பண்டாரவளை, சிலோன்; ஏ. பி. கதிர்வேல், பண்டாரவளை, சிலோன்; ஸ்ரீமதி தங்கம், தாம்பரம்; சில்லறை நன்கொடைகள் ரூ. 1.

நாமக்கல் காதிபந்தர் மானேஜர் ஸ்ரீ வி. மாரப்பன் மூலமாக ரூ. 201க்கு விவரம்:—

ஜவஹர் டாக்கீஸ்	101	0	0
ஸ்ரீ எஸ். வி. ராமலிங்கம்	25	0	0
ஸ்ரீ எஸ். ராமசாமி உடையார்	25	0	0
ஸ்ரீ பெரியசாமி ஐயர்	25	0	0
ஸ்ரீ எம். கருப்பண்ணக் கவுண்டர்	15	0	0
ஸ்ரீ ஏ. தர்மலிங்கம்	10	0	0

ஸ்ரீ வி. எஸ். குமாரசாமி, வேலாசாரா பிரசாரக், தண்டையார்பேட்டை, சென்னை, மூலமாக ரூ. 292க்கு விவரம்:—

மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்ததினால், ஜனங்களுக்கு ஏற்பட்ட நன்மைகளை எல்லாம் மறந்து பேசிக் கொண்டிருப்பதால், நல்லது கெட்டது தெரியாதவர்களும் அஸெம்பிளியில் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள் என்று விளங்குகிறது.

மதுவிலக்குத் திட்டத்தினால் சர்க்காருக்கு எவ்வளவு நஷ்டம் வந்தாலும் அதனால் ஜனங்களுக்கு எவ்வளவோ லாபமிருக்கிறது.

மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்கு கொண்டு வந்ததினால் ஏற்பட்ட பல நன்மைகளை நினைத்து, கள் அரக்கனை ஒழித்த தலைவர்களைத் தெய்வமாக வழிபடுகிறார்களே தவிர, நிதி நிலைமையை மோசமாக்கி விட்டார்களென்று யாரும் குறை சொன்னதாகத் தெரியவில்லை.

ஆனால் சர்க்கார் மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்த பிறகு சரியான கண்காணிப்பு செய்யாமலிருக்கிறார்கள் என்பதுதான் வருத்தத்தை அளிக்கிறது.

வேளாசேந்தல்
24—2—50 எஸ். ஆரோக்கியம்

•••

இந்தோ சைனாவும் இந்தியர்களும்

இந்தோ சைனாவின் பணத்தை நம்பி இந்தியாவில் வாழும் இந்தியர்கள் ஒவ்வொருவரும் பணத்திற்குப் படும் கஷ்டங்களை எழுதி முடியாது.

இந்தோ சைனாவிலிருக்கும் இந்தியர்களுக்குச் சுமார் இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை நபர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் தாய் நாட்டுக்குப் பணம் அனுப்ப செய்கோனிலிருக்கும் இந்திய கவுன்சில் ஜெனரலவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார்கள்.

இந்தோ சைனாவை நம்பி இந்தியாவில் வசிக்கும் இந்திய மக்களுக்கு நம் பாரத சர்க்கார் இரண்டு தடவையில் ரூ. 800ஐ வரவழைத்துக்கொள்ள அனுமதி கொடுத்தார்கள். அதுபோல் ரூ. 800 கிடைத்தும் வந்தது. இனிமேல் இந்தியாவிலுள்ளவர்களுக்கு மேற்படி ரூ. 400 வீதம் கொடுக்கப்பட மாட்டாதென்றும், இந்தோ சைனாவிலிருந்து பாங்கு மூலமாக அங்குள்ள இந்தியர்களுக்குக் கொடுப்பதுபோல் மாதம் ரூ. 100 வீதம் கொடுக்கப்படுமென்றும், இந்திய சர்க்கார் தெரிவித்து விட்டார்களாம். ஆனால், அதுபோல் இன்னமும் தாய்நாட்டிலிருப்பவர்களுக்கு ஒரு ரூபாய்கூடக் கொடுக்கப்படவில்லை.

செய்கோனிலுள்ள இந்திய கவுன்சில் ஜெனரல் அவர்கள் இந்தியாவிலுள்ள இந்தியர்களுக்குப் பணம் அனுப்புவதை நிறுத்தி விட்டார்கள். பாங்கு மூலம் மாதம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் அனுப்பிக் கொள்ளப் பேச்சு நடக்கிறது. ஆனால், செய்கோனிலுள்ள இந்தியர்கள் அதில் அக்கறை காட்டி முயற்சி செய்யவில்லை என்று இந்தியாவின் வெளிநாட்டிலாகா உதவி மந்திரி கனம் டாக்டர் பி. வி. காஷ்கார் சொன்னதாக 16—2—50 தினப் பத்திரிகையில் செய்தி வெளி வந்திருக்கிறது.

ஆனால் செய்கோனிலுள்ள இந்தியர்களும் இங்குள்ள இந்தியர்கள்—சங்கத்தின் மூலம் அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து கொண்டுதா னிருக்கிறார்கள். நமது வெளிநாட்டிலாகா உதவி மந்திரி சொல்வதுபோல் ஒன்றும் முயற்சி செய்யாமலில்லை.

பிரஞ்சிந்தியாவிலுள்ள பிரஞ்சிந்தியர்களுக்கு இங்குள்ள பிரஞ்சிந்தியர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் ரூ. 200 பிரஞ்சிந்தியாவுக்கு அனுப்பப் பிரஞ்சு சர்க்கார் அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதன்படி இங்குள்ள ஒவ்வொரு பிரஞ்சிந்தியரும் மாதா மாதம் ரூ. 200 அனுப்பி வருகிறார்கள். ஆனால் நம் பாரதப் புதல்வர்களுக்கு மட்டும் ஒரு மாதத்திற்கு ரூ. 100 கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. 2 மாதத்திற்கு ஒரு தடவைதான் ரூ. 100 கிடைக்கிறது.

ஆகவே, நமது பாரத சர்க்கார் மனமுவந்து இந்தோசைனாவை நம்பி இந்தியாவில் இருக்கும் இந்தியர்களுக்கும், இந்தோ சைனாவில் வசிக்கும் இந்தியர்களுக்கும் இனியாகிலும் மாதந்தோறும் ரூ 100 வீதமாவது கிடைக்கும்படி ஏற்பாடு செய்ய வேணுமாய்க் கோருகிறேன்.

செய்கோன்
28—2—50 செ. இராமநாதன்

•••

காலதாமதம்

இராமநாதபுரம் ஜில்லாவில் கோட்டையூர், கண்டனூர், பாலையப்பட்டி, கல்லாங்குடி முதலிய கிராமங்களில் பிரமாதமான நெல்விளைச்சல் இல்லாது போனாலும், சுமாராக விளைந்திருந்தது. ஆனால் விளைந்த நெல்லை வீட்டுக்குக் கொண்டுவர முடியாமல் போய்விட்டது. இதற்குக் காரணம் அரசாங்க உத்தியோகஸ்தர்களின் காலதாமதம்தான். நன்றாக விளைந்த நிலத்திற்கு அறுவடை செய்ய விவசாய இன்ஸ்பெக்டர் வந்து புள்ளி போடாமல், காரணமின்றிக் காலத்தைக் கடத்திவிட்டார். இதனால் சில தினங்களுக்கு முன் நிகழ்ந்த பெய்த மழையில் அவ்வளவு நெல்லும் உதிர்ந்து நிலத்திலேயே கொட்டிப் போய் விட்டது. விவசாயிகளின் மனம் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்துவிட்டது. இப்போது வயலில் இருக்கும் முழுங்கால் தண்ணீரில்

★ வட்டமேஜைப் பரிசுத் தொகை ரூ. 25-ஐ நமது ஏப். ஏம் ஏ. க்கள் என்ற கடிதம் எழுதிய மதுரை ஸ்ரீ கே. வி. முருகனுக்கும், 'தமிழ் பதிப்பாளர்' என்ற கடிதம் எழுதிய கொழும்பு ஸ்ரீ செ. ரங்கநாதனுக்கும் ரூ. 12—8—0 வீதம் பிரித்து வழங்கப்பட்டது.

வட்ட மேஜை

★ நமது எம். எல். ஏ.க்கள்

நமது சட்டசபை அங்கத்தினர்கள் சிலர் இன்று வரையிலும் தங்கள் தொகுதியையே எட்டிப் பாராமல் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய வோட்டர் மகா ஜனங்களைப் பார்த்தால் ஏதாவது கேட்டுத் தொலைப்பார்களோ அதற்கு என்ன பதில் கூறுவது என்ற அச்சம் தான் காரணமாக இருக்க வேண்டும்.

காங்கிரஸ் கமிட்டிகளுள் ஒரு கூட்டம்கூட நடக்காத கமிட்டிகள் இருந்து கொண்டுதான் இருக்கின்றன. 'ஏன் கூட்டம் நடத்தவில்லை?' என்று கேட்பதற்கும் யாரும் இல்லை. ஏதாவது அவசர காரியமாக ஜில்லாக் கமிட்டிக் கூட்டம் போட்டால், அங்கத்தினர்கள் வருவதே அபூர்வம். சமீபத்தில் நடைபெற்ற மாகாண காங்கிரஸ் கூட்டத்திற்குப் பிரதிநிதிகள் பொறுக்கி அனுப்ப மதுரை ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டியார் கூட்டம் போட்டார்கள். சுமார் பத்துக்கும் குறைவான அங்கத்தினர்களே ஆஜராயிருந்தனர்.

இன்னும் மக்கள் காங்கிரஸை வெறுக்கவில்லை என்பது சர்வ நிச்சயம். அதில் விரும்பத் தகாத நபர்கள் புகுந்துகொண்டிருப்பதைத்தான் வெறுக்கிறார்கள். அவர்களைத் தைரியமாகக் களைந்து விட்டு, மீண்டும் காங்கிரஸைப் புனிதப்படுத்த வேண்டும்.

அமரர் சத்தியமூர்த்தி அடிக்கடி கூறுவார்: ''போலீஸ்காரன் நமக்கு சலாம் செய்ய வேண்டும்'' என்று. அன்றிருந்த அடிமை வாழ்விலேயே அத்தகைய நிலை ஏற்பட வேண்டுமென்று விரும்பினார். ஆனால் இன்று நம் நாடு சுதந்திர நாடு; குடியரசு நாடாகி விட்டது. இதில் நடப்பதென்ன? அதிகாலையில் எழுந்து அதிகாரிகள் வீட்டிற்கு ஏதாவது பொரிசுக்கோ அல்லது வேறு காரியத்துக்கோ செல்வதுதான் பல காங்கிரஸ் வாதிகளின் நித்திய வாழ்க்கைத் திட்டமாக இருக்கிறது. எங்காவது அதிகாரிகள் காங்கிரஸ் வாதிகளின் வீடு தேடிவருகிறார்களா? ஆட்சி செலுத்துவது காங்கிரஸ்! பொறுப்புள்ள காங்கிரஸ் வாதிகள் சுயநலமின்றிப் பொதுநல சேவையைக் கடைப்பிடித்தால் அதிகாரிகள் அவர்களைத் தேடி வந்து ஆலோசனை கேட்க மாட்டார்களா? அது நிகழாதா? அதைத்தானே அன்று சத்திய மூர்த்தி சுட்டிக் காட்டினார்.

நம் தலைவர்கள் தீவிர கவனம் செலுத்த வேண்டிய தருணம் இதுதான். 'இன்னாரை நிறுத்தியதால்தான் காங்கிரஸ் ஜெயித்தது,' என்ற பேச்சு வந்துவிடக் கூடாது. 'காங்கிரஸ் இன்னாரை நிறுத்தியது; அவர் ஜெயித்தார்' என்ற பேச்சு மீண்டும் நாட்டில் ஒலிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

மதுரை
26—2—50 கே. வி. முருகன்

•••

கோத்திரமும் செவ்வாயும்

சென்ற வாரம் 'கல்கி'யில் ''கோத்திரம் என்ன செய்யும்?'' என்ற தலைப்பின் கீழ் உள்ள கடிதத்தைப் பார்த்தேன். எனக்குக் கல்யாணமாகி சுமார் மூன்று வருஷம் ஆகிறது. என் ஜாதகப்படி எனக்குப் பரிபூரண செவ்வாய் தோஷம் உண்டு என்கிறார்கள். ஆனால் நான் செவ்வாய் தோஷமே இல்லாத பெண்ணைத்தான் மன மொத்து விவாகம் செய்து கொண்டேன். இவ்விவாகத்தில் மற்றொரு முக்கிய விசேஷம் என்னவென்றால், எனக்கும் என் மனைவிக்கும் ஒரே கோத்திரம். நான் சகோத்திரத்தில் செவ்வாய் தோஷம் இல்லாத பெண்ணை விவாகம் செய்து கொண்டதில் இது வரையில் யாதொரு கெடுதலும் நேரவில்லை. எனக்கு ஒரு குழந்தையும் பிறந்திருக்கிறது. நாங்கள் யாவரும் சௌக்கியமாய்த்தான் இருக்கிறோம். இவ்விவாகத்திற்கு இரு தரத்தினரும் யாதொரு தடங்கலும் சொல்லவில்லை.

திண்டுக்கல்
28—2—50 ஏ. சுவாமிநாதன்

•••

நீதி நிலைமையும் மது விலக்கும்

நான் ஒரு கிராமவாசி. அதிகப் படிப்புப் படிக்கவில்லை. வாரந்தோறும், 'கல்கி' பத்திரிகைதான் படித்து வருகிறேன்.

19–2–50 'கல்கி' பத்திரிகையில், கவர்னரின் பிரசங்கத்தை யொட்டிச் சட்ட சபையில் நடந்த விவாதத்தில், ''மதுவிலக்குத் திட்டத்தை அவசரப்பட்டு அமுலுக்குக் கொண்டு வந்ததால்தான் சென்னை சர்க்காரின் நிதி நிலைமை மோசமாகியது'' என்று சில அங்கத்தினர்கள் கூறினார்களாம்.

2



வருஷாந்திரப் பரீக்ஷை நடந்தது. அண்ணா பரீக்ஷையில் தேறவில்லை; நான் தேறிவிட்டேன்; அதுவும் வகுப்பில் முதலாவதாகத் தேறிவிட்டேன். எனக்கும் அவருக்கும் இரண்டே இரண்டு வருஷ வித்தியாசம் தானிருந்தது. 'இவ்வளவு விழுந்து விழுந்து படித்தீர்களே, என்ன பலன்? நான் விளையாடிக் கொண்டுதான் இருந்தேன். இருந்தாலும் வகுப்பில் முதலாவதாகத் தேறிவிட்டேன், பாருங்கள்!' என்று அண்ணாவை இடித்துக் கூறினால் என்ன என்று தோன்றிற்று. ஆனால் முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு வருத்தமே உருவாக உட்கார்ந்திருந்த அவரைக் காண எனக்குப் பரிதாபமாயிருந்தது. எரியும் கொள்ளியில் எண்ணெய் விடுவதா? நொந்த புண்ணில் கோல் இடுவதா? என்ன வெட்கக் கேடான காரியம் செய்யத் துணிந்தாய் என்று என் மனம் என்னையே நிந்திக்கத் தொடங்கி விட்டது. ஆனால் என்ன இருந்தாலும் 'நாம் தேறி விட்டோம்!' என்ற கர்வம் தலைக்கேறியது. எனக்கு ஏற்பட்ட அகந்தைக்கு ஓர் அளவில்லை. அண்ணா முன் போல் என் மீது ஆதிக்கம் செலுத்தவில்லை. ஆகவே நான் என் இஷ்டப்படி வேடிக்கை விளையாட்டுகளில் ஈடுபட்டேன். எனக்கு மனதிலே வேண்டிய துணிவு ஏற்பட்டு விட்டது.

அண்ணா என்னை அவமதித்தால், 'ஆமாம், நீங்கள் விழுந்து விழுந்து படித்து என்னத்தைக் கண்டு விட்டீர்கள்? விளையாடின பொழுதிலும் நான் தானே வகுப்பில் முதலாவதாகத் தேறினேன். நான் அப்படித்தான் விளையாடுவேன்?' என்று தைரியமாகச் சொல்லி விடுவது என்ற முடிவுக்கு வந்தேன். அந்த முடிவை வாய்திறந்து அண்ணாவிடம் சொல்ல எனக்குத் தைரியம் இல்லை. இருந்த போதிலும் அண்ணாவிடம் எனக்குச் சிறிதும் பயமில்லை என்பதைக் காட்டிக் கொள்ளும் தோரணையில் நான் நடக்கலானேன். இதை அண்ணா எப்படியோ தெரிந்து கொண்டு விட்டார். ஆளைப் பார்த்தவுடன் 'இவன் இப்பேர்ப்பட்டவன்' என்று அறிந்து கொள்ளும் அபார சக்தி அண்ணாவுக்கு எங்கிருந்து தான் வந்ததோ, தெரியவில்லை! ஒருநாள் காலைப் பொழுது முழுவதையும் கிட்டிப்புள் ஆட்டத்துக்கு அர்ப்பணம் செய்துவிட்டு, சாப்பாட்டு நேரத்துக்குத் திரும்பி வந்தேன். அண்ணா உருவிய கத்தியுடன் யுத்தத்துக்குத் தயாராக நிற்கும் வீரனைப் போல என்னை எதிர்பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தார்.

"இந்தத் தடவை பாஸ் செய்து விட்டோம். அதுவும் வகுப்பில் முதலாவதாகப் பாஸ் செய்து விட்டோம் என்ற கர்வம் உனக்குத் தலைக்கு மேல் ஏறிவிட்டது என்று தோன்றுகிறது. ஆனால் தம்பி! இந்தக் கர்வம் காரணமாகப் பெரிய பெரிய ஆசாமிகள் எல்லோரும் தலைகுப்புற விழுந்து விட்டார்கள். நீ எந்த மூலைக்கு? சரித்திரத்திலே நீ ராவணனின் கதையைப் படித்திருப்பாயே! நீ அவனுடைய வரலாற்றைப் படித்து என்ன படிப்பினை கற்றுக் கொண்டாய்? இல்லை, சும்மா படித்தோம் என்று மட்டும் பெயர் பண்ணி விட்டாயா? பரீக்ஷை பாஸ் பண்ணுவது ஒன்றும் பெரிய காரியம் இல்லை. அறிவு வளர்ச்சி ஏற்படுவது அல்லவா முக்கியமான விஷயம்!

"ராவணன் என்ன, இலேசுப்பட்ட அரசனா? ராவணன் ஒரு குடையின் கீழ் இந்தப் பூமண்டலத்தையே அரசாண்டவன். அப்படிப்பட்ட மகா ராஜாதி ராஜனை ராவணனின் கதி என்ன ஆயிற்று தெரியுமா? அவனுக்கு ஏறியிருந்த தலைக் கர்வம் அவனைப் பூண்டோடு அழித்து விட்டது. அவனுக்கு ஒரு கை தண்ணீர் வாரி யிறைப்பவன் கூட இல்லையென்றால், பார்த்துக் கொள். மனிதன் எந்தக் கெட்ட காரியங்கள் வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் துளியும் கர்வம்கொள்ளக் கூடாது" என்றார் என் அண்ணா. (அடுத்த இதழில் முடியும்)



வீணாக்கிக் கொள்வானேன்?' என்று ஒரு கணம் எண்ணுவேன். எனக்கு முழு முட்டாளாக இருக்கச் சம்மதம். ஆனால் அம்மாதிரி உயிரைப் பிடித்துக் கொண்டு உழைப்பது எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. அதை நினைத்தாலே எனக்குத் தலை சுற்றியது. ஆனால் இரண்டொரு மணி நேரத்துக்கெல்லாம் என்னைச் சூழ்ந்திருக்கும் அவநம்பிக்கை மேகங்கள் அகன்றுவிடும்! என் இதய வானம் நிர்மலமாகி விடும். 'ஒரு நிமிஷத்தைக்கூட வீணாக்கக் கூடாது. கஷ்டப்பட்டுப் படிக்க வேண்டும்' என்று மனதுக்குள் திட சங்கற்பம் செய்து கொள்ளுவேன். உடனே சட்டுப் புட்டென்று 'ஒரு டயம் டேபிள்' தயார் செய்து கொள்வேன். முதலில் ஒரு திட்டம் போட்டுக் கொள்ளாமல் ஒரு காரியத்தை எப்படி ஆரம்பிக்க முடியும்?

நான் தயாரிக்கும் கால அட்டவணையில் முதல் காரியமாக விளையாட்டுக்கே இடம் கொடுக்க மாட்டேன். காலையில் எழுந்திருப்பது; பல் துலக்கிச் சிற்றுண்டி அருந்தி விட்டு ஆறு மணிக்குப் படிக்க உட்காருவது. ஆறிலிருந்து எட்டு மணிவரை ஆங்கிலம்; எட்டிலிருந்து ஒன்பது வரை கணக்கு, ஒன்பதிலிருந்து ஒன்பதரை வரை சரித்திரம். பிறகு சாப்பாடு, உடனே பள்ளிக்கூடத்துக்குப் புறப்படுதல். சாயந்திரம் மூன்றரை மணிக்குப் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும் அரை மணி நேரம் இளைப்பாறுவது; நாலிலிருந்து ஐந்து வரை பூகோளம். ஐந்திலிருந்து ஆறு வரை இலக்கணம். அதற்குப் பின் அரை மணி நேரம் ஹாஸ்டலுக்கு எதிர்த்தாற் போலவே உலாவுவது. ஆறரையிலிருந்து ஏழு வரை ஆங்கில வியாசம். அதற்குப் பின் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, எட்டிலிருந்து ஒன்பது வரை மொழி பெயர்ப்பு; ஒன்பதிலிருந்து பத்து வரை தமிழ், பத்திலிருந்து பதினொன்று வரை மற்ற பாடங்கள், அதற்குப் பின் படுக்கைக்குச் செல்லுவது'—இவ்வாறு மூச்சு விடக்கூட நேரம் இல்லாமல் கால அட்டவணை தயார் செய்து கொள்ளுவேன்.

ஆனால் கால அட்டவணை தயார் செய்து கொள்வது ஒரு பெரிய விஷயமல்ல; அதை அநுஷ்டானத்தில் கொண்டுவருவது அல்லவா பெரிய விஷயம்! முதல்நாள் 'சக்லாம் பாதாம்' கூட்டிக் கொள்ளும் பொழுதே கால அட்டவணையைக் காற்றில் பறக்க விட்டுவிடுவேன். பச்சைப் பசேல் என்றிருக்கும் மைதானத்துப் பசும் புல்வெளி, மெதுவாக வீசும் தென்றல் காற்று, எழும்பிக் குதித்து வரவேற்கும் புட்பால், உப்புக் கோடு ஆட்டத்திலே பாய்ச்சல் காட்டுதல், வாலிபால் 'கும்' மென்று உயர எழும்பிக் குதிக்கும் காட்சி—இவை எல்லாம் என்னை உள்ளே உட்கார்ந்திருக்க விடுவதில்லை. வலுக்கட்டாயமாகப் பிடித்து இழுத்துக்கொண்டு போய் மைதானத்தில் நிறுத்திவிடும். அப்புறம் எல்லாவற்றையும் மறந்து விளையாட்டில் லயித்துவிடுவேன். பிராணனை வாங்கும் அந்த டயம் டேபிள், கண்களைக் குத்தும் அந்தப் பாட புஸ்தகங்கள் எல்லாவற்றையுமே மறந்து விடுவேன். அப்புறம் அண்ணா புத்தி புகட்டுவதும் திட்டுவதும் கிரமமாக நடக்க வேண்டிய காரியந்தானே? நான் அண்ணாவின் நிழலைக் கண்டாலே ஓடி ஒளிவேன். அவருடைய கண்களில் அகப்படாமல் இருப்பதற்காக ஆனைப்பட்ட பாடு படுவேன். அவருக்குத் தெரியாமல் பூனை போல அறைக்குள் நுழைவேன். அவர் பார்வை என்மேல் விழுந்துவிட்டால் எனக்கு உயிரே போய்விட்டது போலாகி விடும். எப்பொழுதும் என் தலைமீது ஒரு கூரிய கத்தி வட்டமிட்டுக் கொண்டிருப்பது போலவே பிரமை ஏற்படும். இருந்தாலும் கஷ்ட நிஷ்டூரங்களுக்கும் மரணத்துக்கும் இடையே இருந்து கொண்டும், மனிதன் ஆசையிலும் மாயையிலும் கட்டுண்டு எப்படியாவது வாழ விரும்புகிறான் அல்லவா! அது போலவே, நான் அண்ணாவின் வசவுகளையும் திட்டுகளையும் பொறுத்துக் கொள்ளக்கூடத் தயாராயிருந்தேன். ஆனால் விளையாட்டையும் வேடிக்கைகளையும் என்னால் விடவே முடியவில்லை.

யைத்தான் கேட்பார். பதிலுக்கு மௌனம் சாதிப்பதைத் தவிர நான் வேறு என்ன செய்ய முடியும்? வாசலில் விளையாடிக் கொண்டிருந்தேன் என்ற வார்த்தைகள் என் வாயிலிருந்து வெளி வருவதில்லை. மௌனம் சம்மதி லட்சணம் அல்லவா? நான் வாய் அடைத்து நிற்பதைக் கண்டு அண்ணா என் குற்றத்தை ஒப்புக் கொண்டு விட்டதாக எண்ணி என்னை அன்புடனும் கோபத்துடனும் கடிந்து கொள்ள ஆரம்பித்து விடுவார்.

"இம்மாதிரி இங்கிலீஷ் படித்தால் ஆயுள் முழுவதும் படித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். ஒரு அக்ஷரம் கூட வராது. ஆங்கிலம் படிப்பது வேடிக்கை யல்ல. காத்தான், சாத்தான் யார் நினைத் தாலும் படித்துப் பண்டிதனாகிவிட முடியாது. இரவு பகல் என்று பாராமல் உழைக்க வேண்டும். உழைத்து உழைத்து ரத்தம் சிந்த வேண்டும்; படித்துப் படித்துக் கண் வீங்க வேண்டும். அவ்வளவு கஷ்டப் பட்டால்தான் ஏதோ பெயரளவுக்கு இந்த ஆங்கிலப் படிப்பு வரும். அதுவும் என்ன? எங்கள் அகத்துக்காரரும் கச்சேரிக்குப் போகிறார் என்று சொல்கிறார்களே, அந்தக் கதையைப் போலத்தான்! பெரிய பெரிய ஆங்கில பாஷா பண்டிதர்களால்கூடச் சேர்ந்தாற்போல் நாலு வார்த்தை சரியாகத் தப்பிதமின்றி ஆங்கிலத்தில் எழுத முடியாது. எழுதவே குதிரைக் கொம்பாயிருக்கும் பொழுது பேச எங்கே வரப்போகிறது? நான் எவ்வளவு பாடுபட்டுப் படிக்கிறேன், பார்! என்னைப் பார்த்தாவது நீ கற்றுக் கொள்ள வேண்டாமா? என்னைப் பார்த்தும் நீ படிப்பினை பெறவில்லையென்றால், அதை உன்னுடைய கண்களின் குற்றம், மூளையின் கோளாறு என்றுதான் சொல்ல வேண்டும்.

இவ்வளவு ஆட்டங்களும் பாட்டங்களும் நடக்கின்றனவே! எப்பொழுதாவது நீ என்னை அங்கெல்லாம் போனதைப் பார்த்திருக்கிறாயா? தினம் கிரிக்கெட், ஹாக்கி என்று எத்தனையோ பேச்சுகள் நடக்கின்றனவே! நான் அந்தப் பக்கம் காலடி எடுத்து வைத்திருக்கிறேனா? எப்பொழுது பார்த் தாலும் நான் படித்துக் கொண்டுதானே இருக்கிறேன்! அதுமட்டும் அல்ல. அவ்வளவு படித்தும் நான் ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு வருஷம் அல்ல; இரண்டு வருஷம் அல்ல; மூன்று வருஷங்கள் கூட உட்கார்ந் திருக்கிறேன். இப்படி வேடிக்கையிலும் விளையாட்டிலும் பொழுதைப் போக்கிவிட்டு நீ பரீக்ஷையில் எப்படித் தேற முடியும் என்று எண்ணியிருக்கிறாய்? இரவு பகல் எந்நேர மும் படிக்கும் நானே ஒவ்வொரு வகுப் பிலும் இரண்டு மூன்று வருஷங்கள் கிடக்க வேண்டியிருக்கிறதென்றால், நீ ஆயுள் முழு வதும் ஒரே வகுப்பில் கிடக்க வேண்டியது தான்! இப்படியே விளையாடி ஆயுளைக் கழிக்க வேண்டும் என்று நினைத்தால் நீ வீட் டுக்குப் போய், ஊர்ப் பையன்களுடன் 'கிட்டிப்புள்' அடிப்பதும், மாடு மேய்ப்பதும் தான் நல்லது. அப்பா கஷ்டப்பட்டுச் சம்பாதித்த காசை ஏன் வீணாகக் கரியாக்கு கிறாய்?" என்பார்.

நான் அவருடைய அவமதிக்கும் சொற்களைக் கேட்டுக் கண்ணீர் உகுப்பேன். அதைத் தவிர நான் வேறென்ன பதில் சொல்ல முடியும்? நான் செய்தது என்னவோ குற்றம்தான். இருந்தாலும் நிந்தனைச் சொற்களைச் சகிப்பதென்றால் யாருக்குத் தான் மனம் வரும்? அண்ணா புத்தி புகட்டுவதில் கெட்டிக் காரர். ஒவ்வொரு வார்த்தையும் வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போலச் சொல்லுவார். அதைக் கேட்டு என் உள்ளமே பிளந்துவிடும். கொஞ்ச நஞ்ச மிருக்கும் துணிச்சலும் தூள் தூளாகி விடும். அண்ணாவைப் போல் கஷ்டப்பட்டுக் கல்வி பயிலும் திறமையோ பொறு மையோ எனக்கு இல்லை. நான் நம்பிக்கை இழந்து, 'வீட்டுக் குப் போய் விட்டால் என்ன? நம் சக்திக்கு அப்பாற்பட்ட விஷ யத்தில் இறங்கி வாழ்க்கையை



முத்தண்ணா



ஆசிரியர்:
பிரேம்சந்த்

மொழிபெயர்ப்பு:
அக்ஷயம்

என் அண்ணா என்னைவிட ஐந்து வயது பெரியவர். ஆனால் படிப்பில் மட்டும் என்னைவிட மூன்று வகுப்பு மட்டும்தான் அதிகம். நான் படிக்க ஆரம்பித்த வயதில் தான் அவரும் படிக்க ஆரம்பித்தார். ஆனால் படிப்புப் போன்ற மகத்துவம் வாய்ந்த விஷயத்தில் அவர் அவசரக் குடுக்கையாகக் காரியங்கள் செய்ய விரும்பவில்லை. அவர் கல்வி மாளிகையின் அஸ்திவாரத்தை நன்றாகக் கெட்டித்துப் பலமுள்ளதாக ஆக்க விரும்பினார். அஸ்திவாரம் பலமுள்ளதாக இருந்தால்தானே அழகான எட்டு அடுக்கு மாளிகையோ, பத்து அடுக்கு மாளிகையோ தன் இஷ்டப்படி எழுப்ப முடியும்? ஆகவே அவர் ஒரு வருஷத்து வேலையை இரண்டு அல்லது மூன்று வருஷத்தில்தான் முடித்து வந்தார். அஸ்திவாரமே ஆட்டம் கொடுப்பதாக இருந்தால் உறுதியான கட்டிடம் எப்படி எழுப்ப முடியும்?

நான் வயதில் சிறியவன். அவர் பெரியவர். எனக்கு வயது ஒன்பது. அவருக்குப் பதினான்கு. எனக்குப் புத்தி புகட்டவோ, கவனித்துக் கொள்ளவோ அவருக்குப் பூரண உரிமை உண்டல்லவா? அவர் இடும் கட்டளையைச் சட்டமாகக் கருதிக் கீழ்ப்படிவதுதானே வயதில் சிறியவனான எனக்கு அழகு!

அவர் இயல்பாகவே படிப்பதில் கருத்துள்ளவர். எப்பொழுது பார்த்தாலும் அவரைப் புத்தகமும் கையுமாகத்தான் பார்க்கலாம். சில சமயம் மூளைக்கு ஓய்வு கொடுப்பதற்காகக் காப்பி நோட்டின் 'மார்ஜினி'ல் பறவை, நாய், பூனை முதலிய சித்திரங்கள் வரைந்திருப்பார். சில சமயம் ஒரே பெயரையோ அல்லது ஒரே வாக்கியத்தையோ, பத்துத் தடவை, இருபது தடவை திருப்பித் திருப்பி எழுதி யிருப்பார். சிற்சில சமயம் சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஏதாவது கிறுக்கி வைத்திருப்பார். நான் அவற்றையெல்லாம் ஒன்று கூட்டிப் புரிந்து கொள்வதற்காக மூளையைப் போட்டு உடைத்துக் கொள்வேன். மூளையை உடைத்துக் கொள்ளுவதுதான் மிச்சமாகுமே யொழிய, என் மூளைக்கு ஒன்றும் எட்டாது. அவரைக் கேட்கலாம் என்றாலோ, துணிவு உண்டாகவில்லை. எப்படித் துணிவு உண்டாகும்? அவரோ ஒன்பதாவது வகுப்பில் படித்து வந்தார். நானோ ஐந்தாவது வகுப்பில் படித்து வந்தேன். அவர் எழுதியிருப்பதைச் சிறியவனான நான் புரிந்து கொள்ள முயலுவது என்றால், அது அதிகப்பிரசங்கித்தனமாக அல்லவா ஆகும்!

என் மனம் படிப்பில் நாட்டம் கொள்வதேயில்லை. ஒரு மணி நேரம் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்காருவது என்றால் எனக்கு உயிரே போவது போலிருக்கும். சமயம் பார்த்து 'டிமிக்கி' கொடுத்து விட்டு ஹாஸ்டலிலிருந்து வெளியேறி மைதானத்துக்கு ஓடி விடுவேன். அங்கே சென்று கல் எறிந்து விளையாடுவேன். காகிதக் கப்பல் செய்து பறக்க விட்டு வேடிக்கை பார்ப்பேன். விளையாட்டுத் தோழன் கிடைத்து விட்டால் அப்புறம் கேட்பானேன்? பம்பரம் சுற்றுவோம். வளையம் விடுவோம். மதில் சுவர்மீது ஏறிக் கீழே குதிப்போம். வாசற் கதவில் ஏறிக் கதவை இங்கும் அங்கும் சாத்தி மோட்டார் கார் விடும் ஆனந்தத்தை அனுபவிப்போம்.

இம்மாதிரி ஏதாவது விளையாட்டில் மூழ்கி மனம் மகிழ்வோம். ஆனால் ஹாஸ்டலுக்குள் திரும்பிக் காலடி எடுத்து வைத்ததும் அண்ணாவின் ரௌத்திராகாரமான உருவத்தைக் கண்டு என் உயிர் உலர்ந்துவிடும். எடுத்ததும் முதல் கேள்வியாக, "எங்கே போயிருந்தாய்?" என்று கேட்பார். எப்பொழுதும் இதே தொனியில் இதே கேள்வி

அவரை மறக்க முடியவில்லையே! நான் என்ன செய்கிறது? அவர் தாராளமாகச் ஸியாமளாவைக் கல்யாணம் செய்து கொள்ளட்டும். ஆனால், நான் யாரையும் கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லை. மன்னித்துவிடுங்கள்" என்றாள் அம்புஜம், அழுகை பீறிக்கொண்டுவர.

அப்பொழுது ஒரு உருவம் வராந்தாவிலிருந்து உள்ளே வந்து அவர்களுக்குப் பின்னால் நின்றது. எல்லோரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர். வந்தது வேறு யாருமில்லை. ரங்கசாமியேதான்!

"அம்புஜம்! உன் மன உறுதி எனக்குத் தெரியாமல் போயிற்று. என்னை மன்னிக்கவேண்டும்" என்றான் ரங்கசாமி.

"நீ மேஜைமேல் ஸியாமளாவின் படத்தை வைத்துக் கொண்டிருந்தது வாஸ்தவமா, இல்லையா? அவளைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவதாக என்னிடம் சொல்லவில்லையா?" என்றான் அனந்தன் ஆத்திரத்துடன்.

"அம்புஜம்! நீ கிராமத்திலிருந்து இங்கே வந்த பிறகு உன் கடிதங்களில் அனந்தனைப் பற்றிக் குறிப்பிட்டு அவர் மிகவும் நல்லவர் என்றும் உங்களிடம் அன்பு பாராட்டுவதாகவும் எழுதினாய். சட்டென்று என் மனதில் ஒரு சந்தேகம் உதித்தது, நீ பெரிய இடத்துச் சம்பந்தம் செய்துகொள்ள ஆசைப்படுகிறாய் என்று. ஆகையால் நானும் ஸியாமளாவைப் பற்றி உனக்கு அடிக்கடி எழுத ஆரம்பித்தேன். உண்மையில் எங்கள் முதலாளிக்குப் பெண்ணே கிடையாது. இவர் என்னைப் பார்ப்பதற்காகச் சென்னைக்கு வந்தபோது, நான் இவர் பெட்டியைத் திறக்க நேரிட்டது. அதில், உன் கையெழுத்தில் என் விலாசம் எழுதப் பட்டிருந்த ஒரு சீட்டைப் பார்த்தேன். ஆகவே, இவர் அனந்தனுகத் தான் இருக்க வேண்டுமென்று உடனே நிர்மாணித்தேன். ஆயினும், இவர் நிஜப் பெயரைச் சொல்லாமல் மறைத்தது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. அதிலிருந்து என் நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காகவே அவர் வந்திருப்பதாக ஊகித்தேன். உடனே, பக்கத்திலிருந்த ஒரு போட்டோ ஸ்டுடியோவிலிருந்து ஒரு பெண்ணின் படத்தை வாங்கி வந்து, ஸியாமளாவின் படம் என்று பொய் சொன்னேன். அதைப் பற்றி இவர் கேட்பார் என்றும், நான் சொல்வதையெல்லாம் உன்னிடம் சொல்லுவார் என்றும் எதிர்பார்த்துத்தான் இவர் ஏறி வந்த வண்டியிலேயே நானும் வந்தேன். நான் உனக்கு எழுதிய கதையையும் இவர் சொல்வதையும் நம்பி என்னை வெறுத்து விடுகிறாயா? பெரிய இடத்துச் சம்பந்தம் செய்து கொள்ளும் எண்ணத்துடன் இந்தக் காரணங்களை உபயோகித்துக் கொள்வாயா என்று பார்க்க ஆசைப்பட்டேன். ஆனால் அது எவ்வளவு பெரிய தவறு என்பது இப்போது எனக்குத் தெரிகிறது. உன் அன்பின் சக்தியை நான் அறியாமல் உன்னையும் பரிசோதித்தேனே, நான் எவ்வளவு பெரிய முட்டாள்!" என்றான் ரங்கசாமி.

கூடத்தில் 'கப்சிப்'பென்று மௌனம் குடி கொண்டது. "அத்தை! நான் ஒரு வாரம் லீவில் வந்திருக்கிறேன். பெரிய குளத்திலேயே முகூர்த்தத்தை வைத்துக் கொள்ளலாமா?" என்றான் ரங்கசாமி.

"முடியாது. பெரியகுளத்தில் இந்தக் கல்யாணம் நடக்கிறதா என்று பார்த்துவிடுகிறேன்" என்றான் அனந்தன்.

எல்லோரும் திடுக்கிட்டு அவனைப் பார்த்தனர். "ஆமாம்; இந்தக் கல்யாணம் மதுரையில் இந்த வீட்டில்தான் நடக்க வேண்டும்" என்றான் அனந்தன்.

முதலாளி நாராயணனின் பெண் சியாமளா. நல்ல புத்திசாலி. நல்ல அழகியும் கூட. நேற்று இரவு கூட அவர்கள் வீட்டில் எனக்கு விருந்து வைத்தார்கள். நல்ல மாப்பிள்ளை கிடைப்பதாக இருந்தால் ஏன் வலை போடமாட்டார்கள்? என் அத்தை பெண் அம்புஜம் என்று ஒருத்தி ஊரில் இருக்கிறாள். தன்னைக் கல்யாணம் பண்ணக் கொள்ளச் சொல்லி அடிக்கடி எழுதி என் பிராணனை வாங்குகிறாள். ஏழைப் பட்டிக்காட்டுப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு என்ன லாபம் செய்கிறது? நான் முன்னுக்கு வர வேண்டியதைப் பற்றி நினைக்க வேண்டாமா? அவள் கடிதங்களைப் படிக்கும் போதெல்லாம் எனக்குச் சிரிப்புச் சிரிப்பாக வருகிறது" என்றான்.

அனந்தனுக்குத் தலை சுற்றி மயக்கம் வருவதைப் போலிருந்தது. அவன் தலையில் இடி மேல் இடி விழுந்ததைப் போல் இருந்தது. அங்கேயோ அம்புஜம் இரவும் பகலும் ரங்கசாமியை நினைத்து உருகிக் கொண்டிருக்கிறாள். இங்கேயோ ரங்கசாமி சியாமளாவைக் கனவு கண்டு கொண்டிருக்கிறான். அது மட்டுமில்லை; அம்புஜத்தை இவ்வளவு கேவலமாக நினைக்கிறான். இப்படிப்பட்ட துரோகியை அம்புஜம் மனதாலும் நினைப்பது எவ்வளவு முட்டாள்தனம்?

அனந்தன் தன் நிஜப் பெயரைச் சொல்லாமல் இருந்தது கூட நல்லதாய்ப் போயிற்று. இல்லாவிட்டால், அவன் கதை இவ்வளவு சுலபமாகக் கண்டுபிடித்திருக்க முடியாதல்லவா?

இதற்குப் பிறகு ரங்கசாமியுடன் அதிகமாகப் பேசுவதற்குக் கூட அனந்தனுக்கு இஷ்டமில்லை. இப்பேர்பட்ட மனிதனுக்கு இருநூறு ரூபாயைக் கொடுக்க நினைத்தோமே என்று தன்னைத்தானே சபித்துக் கொண்டான். அன்று அவன் வேலையும் முடிந்து விட்டபடியால் அன்றிரவே மதுரைக்குப் பயணமாகி விட்டான்.

வீட்டுக்கு வந்ததும் வராததுமாக, விசாலம் ஆவலுடன் அவன் எதிரில் வந்து நின்றாள். கதவு ஓரத்தில் அம்புஜம் நின்று கொண்டு அவன் வாயிலிருந்து வரப்போகும் வார்த்தையை எதிர் பார்த்து நின்றாள்.

"ரங்கசாமியைப் பார்த்தீர்களா?" என்று கேட்டாள் விசாலம், ஆவலை அடக்க முடியாமல். "அவனைப் பற்றிக் கேட்காதீர்கள். அவன் சுத்த அயோக்கியன்" என்றான் அனந்தன். "ஏன்?" என்று திகிலுடன் கேட்டாள் அம்புஜம். அம்புஜம் அனந்தனுடன் தானாகப் பேசியது இதுதான் முதல் தடவை.

"நீ இரவும் பகலும் ஓயாமல் பூஜித்து வரும் ரங்கசாமி என்ன செய்கிறான் தெரியுமா? அவன் கம்பெனி முதலாளியின் பெண் யாரோ சியாமளாவாம். அவள் புகைப்படத்தை அவன் மேஜை மேல் என் கண்ணால் பார்த்தேன். உனக்குத் துரோகம் செய்ய நினைக்கும் ரங்கசாமியை அடியோடு மறந்து விடு" என்றான் அனந்தன் ஆத்திரத்துடன். அம்புஜம் விம்மி அழ ஆரம்பித்து விட்டாள்.

"அந்தத் தடியன் சில நாளாக அம்புஜத்துக்கு எழுதுகிற கடுதாசியிலெல்லாம் சியாமளா என்கிற பெண்ணைப் பற்றி எழுதிக் கொண்டு வருகிறான். அவள் பி. ஏ. படித்தவளாம். புத்திசாலியாம். வேடிக்கை வேடிக்கையாகப் பேசுவாளாம். இதையெல்லாம் அம்புஜம் படித்துக் கண்ணீர் விட்டாள். போகட்டும், அவன் இஷ்டப்படியே பெரிய இடமாகப் பார்த்துக் கல்யாணம் செய்து கொள்ளட்டுமே, யார் வேண்டாமென்றார்கள்? ஆனால் இத்தனை நாள் எங்களைப் பைத்தியமாக அடிக்க வேண்டியதில்லை, பாருங்கோ" என்றாள் விசாலம் கோபத்துடன். அப்போது அவள் தாயார் வீட்டில் இல்லாமலிருந்ததால், அனந்தன் தைரியமாகச் சொன்னான்:

"பாட்டி! ஏன் கவலைப்படுகிறீர்கள்? ரங்கசாமிதான் உலகத்தைத் தாங்கிக் கொண்டிருக்கிறானா? அவன் தயவில்லாமல் அம்புஜம் சந்தோஷமாக இருக்க முடியாதா? இதோ பாருங்கோ! விமலா போய் இரண்டு வருஷமாச்சு. அம்புஜத்தைப் போன்ற குடித்தனப்பாங்கு உள்ள ஒரு பெண்ணைத்தான் இத்தனை நாளாக நான் தேடிக்கொண்டிருந்தேன். நீங்கள் ஏழை என்பதனால் எனக்கு இளப்பமில்லை. எனக்குக் குணம்தான் பெரிசு. எனக்குக் கெட்ட பழக்கங்கள் ஒன்றுமில்லை. மாதம் எழுநூறு ரூபாய் சம்பாதிக்கிறேன்" என்று உணர்ச்சியுடன் அனந்தன் சொல்லிக் கொண்டு போனான்.

அம்புஜம் அழுகையை நிறுத்தி அவன் முன்னால் வந்து நின்று கொண்டாள். அவள் இவ்வளவு தைரியமாகப் பேசுவாள் என்பது அனந்தனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவள் சொன்னாள்:

"நீங்கள் இவ்வளவு தூரம் அன்பு காண்பிப்பதற்கு என்ன பதில் சொல்கிறதென்றே தெரியவில்லை. ஆனால் மனசைச் சீக்கிரத்தில் மாற்றிக்கொள்ளப் புருஷர்களுக்கு முடிகிறது. சொன்ன சொல்லை மறந்துவிட முடிகிறது. ஆனால் என்னால் முடியவில்லை. பெரிய இடத்துச் சம்பந்தத்துக்கு ரங்கசாமி ஆசைப்பட்டு என்னை மறக்கலாம். ஆனால் பெரிய இடத்துச் சம்பந்தத்துக்கு ஆசைப்பட்டு என்னால்

வேண்டியது தன் கடமை என்று நினைத்தான். சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தான்.

"பாட்டி! நான் அவனைப் பார்க்க வருகிறேன் என்று ரங்கசாமிக்கு நீங்கள் முன் கூட்டியே எழுத வேண்டாம். ஏனென்றால் அதற்குக் காரணம் இருக்கிறது" என்று எச்சரித்து வைத்தான். "சரி, அப்படியே ஆகட்டும். ஆனால் என் மருமானைப் பார்க்காமல் மட்டும் வந்து விடாதீர்கள். இதோ அவன் விலாசத்தைக் கொடுக்கிறேன்" என்று அந்த அம்மாள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அம்புஜம் ரங்கசாமியின் விலாசம் எழுதிய சீட்டை அவன் அருகில் வைத்தான்.

தன் வரவை முதலிலேயே ரங்கசாமிக்குத் தெரிவிக்க வேண்டாம் என்று அனந்தன் கூறியதற்குக் காரணம் இதுதான். அனந்தனுக்குப் பல நண்பர்கள் சென்னையில் இருந்தும், வாடகைப் போர்ஷனுக்காக யாரையும் பார்ப்பதற்கு அவனுக்கு நேரம் இருக்காது.

ஆகையால் ரங்கசாமிக்குத் தன்னாலான உதவியைச் செய்ய அவன் ஒரு குறுக்கு வழி கண்டு பிடித்தான். ரங்கசாமி தங்கியிருக்கும் அசோகா லாட்ஜில், அவன் அறைக்கு அடுத்தாற் போலவே ஒரு அறையை எடுத்துக் கொண்டு தங்க வேண்டியது. தான் யாரென்று சொல்லாமலே அவனிடம் பேச்சுக் கொடுத்து, சீக்கிரம் அவன் கல்யாணம் செய்து கொள்ள வேண்டிய அவசியத்தை வற்புறுத்த வேண்டியது. கடைசியில் அவன் சென்னையை விட்டுப் புறப்படு முன் இருநூறு ரூபாயை ரங்கசாமி கையில் சிக்கும்படி எப்படியாவது போட்டுவிட வேண்டியது. தான் யார் என்பதைச் சொல்லி, இருநூறு ரூபாய் கொடுத்தால் ஒரு வேளை தன் சுய கௌரவத்தைக் கருதி அவன் வாங்க மறுத்தாலும் மறுத்துவிடலாமல்லவா? தான் கண்டெடுத்த ரூபாயைக் கொண்டு ரங்காமி தான் மயிலாப்பூரில் பார்த்து வைத்திருக்கும் போர்ஷனுக்கு அட்வான்ஸ் கொடுத்துவிடுவான். அம்புஜத்தின் கல்யாணம் சீக்கிரம் நடப்பதற்காக அனந்தன் இருநூறு ரூபாயைத் தியாகம் செய்யக்கூடாதா? அவன் கல்யாணத்தைத் தடைப்படுத்திக் கொண்டிருப்பது அந்த இருநூறு ரூபாய்கள்தானே? இந்தத் தீர்மானத்துடன் அனந்தன் சென்னைக்குப் புறப்பட்டான்.

3

சென்னையில் அனந்தன் வழக்கமாகத் தங்கும் சிநேகிதர்கள் வீடுகளில் தங்காமல் அசோகா லாட்ஜில் தங்கினான். எட்டாம் நம்பர் அறை அதிர்ஷ்ட வசமாக அவனுக்குக் கிடைத்தது. அறைக்குள் சென்று சாமான்களைப் போட்டுவிட்டு, ஏழாம் நம்பரின் கதவைத் தட்டினான். வசீகரமான தோற்றமுள்ள வாலிபன் ஒருவன் கதவைத் திறந்தான். அம்புஜத்துக்கு ஏற்ற புருஷன்தான் என்று அனந்தன் உள்ளம் எண்ணமிட்டது. "ஸார், என் பெட்டிச் சாவி கெட்டுப்போய் விட்டது. உங்கள் சாவிக் கொத்தைக் கொஞ்சம் கொடுக்க முடியுமா?" என்று கேட்டான் அனந்தன். உண்மையில், பெட்டிச் சாவி அவன் பையில் பத்திரமாக இருந்தது. "என்னிடம் சாவிக் கொத்து இல்லை. ஆனால் உங்கள் பெட்டியை நானே திறந்து கொடுக்கிறேன்" என்று கூறி விட்டு எட்டாம் நம்பர் அறைக்கு வந்தான் அந்த வாலிபன். கீழே இருந்த அனந்தனின் பெட்டியை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாகச் சாய்த்து ஒரு குத்து விட்டான். 'டபீர்' என்று பெட்டி திறந்து கொண்டது. உள்ளேயிருந்த கடிதங்கள் சில சிதறிக் கீழே விழுந்தன.

"ரொம்ப வந்தனம் ஸார்! உங்கள் பெயர் என்னவோ?" என்றான் அனந்தன்.

"என் பெயர் ரங்கசாமி. நான் நாராயண மோட்டார் ஒர்க்ஸில் வேலை செய்கிறேன். உங்கள் பெயர்?" என்று விசாரித்தான் ரங்கசாமி.

அனந்தன் தன் பெயரை மறைத்து, "வாசுதேவன். கோயமுத்தூரிலிருந்து 'பிஸினெஸ்' சம்பந்தமாக வந்திருக்கிறேன்" என்று பொய் சொன்னான்.

அன்று தன் அலுவல்களையெல்லாம் முடித்துக் கொண்டு ரங்கசாமி அறைக்குத் திரும்பி வந்தான். வந்ததும் எட்டாம் நம்பர் அறைதான் அவன் கவனத்தைக் கவர்ந்தது. "மிஸ்டர் ரங்கசாமி!" என்று கூப்பிட்டுக் கொண்டே அவன் உள்ளே நுழைந்தான். "வாருங்கள் ஸார்!" என்று ரங்கசாமி அழைத்தது அவன் காதில் விழவில்லை. ஏனெனில், அவன் மேஜையில் இருந்த அழகிய பெண்மணியின் புகைப் படம் அவனைத் திடுக்கிட்டு நிற்கச் செய்தது. அனந்தன் தன் திகைப்பை மறைத்துக் கொண்டு, ஏதோ ஊர் விவகாரங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தான். பிறகு, "உங்களுக்குக் கல்யாணமாகிவிட்டது என்று நினைக்கிறேன்" என்று அர்த்தபுஷ்டியுடன் மேஜைமீதிருந்த படத்தைப் பார்த்தான். ரங்கசாமி புன்சிரிப்புடன், "இல்லை ஸார்! எனக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. இது எங்கள் கம்பெனி

வீட்டில் இல்லை, எங்கேயோ கற்பனை உலகில் சஞ்சரித்துக் கொண்டிருக்கிறது என்று உணர்ந்துகொண்டான் அனந்தன்.

அன்று காலை அனந்தன் தபால்களைப் பிரித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒன்று, அவனைச் சென்னைக்கு உடனே புறப்பட்டு வரச் சொல்லி மேலதிகாரியிடமிருந்து வந்திருந்த உத்தரவு. இன்னொரு கடிதத்தைப் பிரிப்பதற்காகக் கையில் எடுத்ததும் தற்செயலாக விலாசத்தைப் பார்த்தான். அதில் செள. அம்புஜம் என்று விலாசமிடப் பட்டிருந்தது. கடிதம் அனுப்பியவரின் பெயரும் விலாசமும் கவரின் ஒரு மூலையில் காணப்பட்டது. "கே. ரங்கசாமி, ரூம் நம்பர் 7, அசோகா லாட்ஜ், மவுண்ட்ரோடு, சென்னை" என்று கொட்டை எழுத்தில் கவரின் மூலையில் எழுதியிருந்தது. அந்தக் கடிதத்தை உள்ளேயிருந்த அம்புஜத்திடம் அனுப்பி வைத்தான்.

சிறிது நேரத்துக்கெல்லாம் அனந்தன் சாப்பிடும்போது, விசாலத்திடம் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான்.

"பாட்டி! இன்னிக்கி ராத்திரி ரயிலுக்குப் பட்டணம் போறேன். அங்கே யாராவது உங்க மனுஷாளுக்கு சமாசாரம் இருந்தால் சொல்லுங்கோ!" என்றான்.

"என் தமையன் பிள்ளை ரங்கசாமி பட்டணத்திலே ஒரு மோட்டார் கம்பெனியிலே வேலை செய்து கொண்டிருக்கான். அவனைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று அம்புஜம் பிடிவாதம் பிடிக்கிறாள். வேலையானவுடனே கல்யாணம் பண்ணிக் கொள்கிறதாகச் சொல்லி விட்டு எங்க ஊரிலேருந்து அவன் பட்டணம் போய் மூன்று வருஷமாச்சு. போன வருஷம்தான் அவனுக்கு வேலை கிடைச்சதாம்—ஆனால் சம்பளமில்லாத வேலை. ஒர்க்ஷாப்பிலே வேலை கத்துக் கொள்கிற போது சம்பளம் கொடுக்க மாட்டார்களாம். சம்பளம் கிடைத்தவுடனே கல்யாணம் பண்ணிக் கொள்வதாகச் சொல்லி அம்புஜத்துக்கு கடிதாக எழுதினான். இப்போ சம்பளம் போட்டு மூன்று மாதமாச்சாம். மாதம் 80 ரூபாய் சம்பளம் வாங்குகிறானாம். ஆனால் ஒரு வீடு குடியிருப்பதற்குக் கிடைத்த பிறகு தான் கல்யாணம் செய்து கொள்வதாகச் சொல்கிறான். பட்டணத்திலே வீடே கிடைக்கிறதில்லையாம். போன வாரம் மயிலாப்பூரிலே ஒரு இடம் பார்த்தானாம். இருநூறு ரூபாய் அட்வான்ஸ் கொடுத்தால்தான் அந்த இடம் வாடகைக்குக் கிடைக்குமாம். இதற்கு என்ன செய்கிறது என்று தெரியவில்லை என்று எழுதினான்" என்று கூறி வருத்தப்பட்டாள் விசாலம்.

"இதற்குத்தானா பாட்டி கவலைப்படுகிறீர்கள்? எனக்குத் தெரிந்த சிநேகிதர்கள் எத்தனையோ பேர்கள் பட்டணத்தில் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக நான் ஒரு 'போர்ஷன்' ஏற்பாடு செய்து விடச் சொல்கிறேன். உங்கள் மருமான் ரங்கசாமியைப் பார்த்துப் பேசி விட்டு வருகிறேன். இந்தச் சித்திரையில் கல்யாணத்தை முடித்து விடச் சொல்கிறேன்" என்றான் அனந்தன். தூண் மறைவிலிருந்து அவனை அளவு கடந்த நன்றியறிதலுடன் பார்த்தாள் அம்புஜம்.

உண்மையில், அனந்தன் மனதிலுள்ள பொறாமை, அசூயை எல்லாம் மறைந்து விட்டது. "அம்புஜமும் ரங்கசாமியும் ஒருவரை யொருவர் சிறு வயதிலிருந்தே காதலித்து வந்தவர்கள்; அம்புஜத்தின் காதலன் அவளது சொந்த மாமா பிள்ளை. ஒன்றுக்கொன்று பிணைப்புள்ள இந்த உறவு மிகவும் இயற்கையானது. என்றுமே அழியாதது. இதில் தலையிடுவதற்கோ, உறவைக் கெடுப்பதற்கோ தனக்கு எவ்வித உரிமையுமில்லை. அப்படிச் செய்வது விவேகமான காரியமுமல்ல" என்று உணர்ந்து கொண்டான் அனந்தன். அடிக்கடி ரங்கசாமியை நினைத்து உருகும் அம்புஜத்தின் கல்யாணத்தைச் சீக்கிரம் நடத்தி வைக்க



பிக்கையாக மலர்ந்தது. "ஏன் நிர்மலாவின் ஸ்தானத்தில் அம்புஜத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது? அம்புஜம் ஏழையாக இருந்தால் என்ன? கௌரவமான குடும்பத்துப் பெண்தானே?" என்று சமாதானம் செய்து கொண்டான். விசாலத்திடம் மெதுவாகப் பேச்சுக் கொடுத்து, அவள் விருப்பத்தைக் கேட்கத் தீர்மானித்தான். ஆனால், என்ன காரணத்தினாலோ அவனுக்குத் தைரியம் ஏற்படவில்லை.

2

அன்று, அனந்தன் ஏதோ கடிதம் எழுதுவதற்காக உட்கார்ந்தவன், "அம்மா! கடிதம் எழுதுகிற தாள் ஒன்றைக்கூடக் காணுமே! யாராவது எடுத்தார்களா?" என்று கேட்டான். "ஆமாம். இந்தக் குட்டி அம்புஜம்தான் உன் மேஜையில் உட்கார்ந்து ரொம்ப காரியமாக ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். இன்னிக்கி மட்டுமா? நாலு நாளைக்கு ஒரு தடவை பக்கம் பக்கமாய்க் கடிதாசு எழுதறது. அவளே தபால் பெட்டியிலே கொண்டு போய்ப் போட்டுவிட்டு வரா" என்றாள் அவன் தாயார். அனந்தன் உள்ளத்தில் ஆயிரம் கேள்விகள் தோன்றின. அம்புஜத்துக்குத்தான் கல்யாணம் ஆகவில்லை. சகோதரர்களும் இல்லை. அப்படியானால் யாருக்குக் கடிதம் எழுதுகிறாள்?

அனந்தன் பின்கட்டுப் பக்கம் சென்றான். அங்கு அம்புஜம் கொல்லைத் தாழ்வாரத்தில் நின்றுகொண்டு ஒரு கடிதத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் நீர் பெருக்கெடுத்தது. சட்டென்று திரும்பியவள் அனந்தனைப் பார்த்ததும் தூக்கிவாரிப் போட்டவளாய்க் கண்ணைத் துடைத்துக் கொண்டு உள்ளே வந்து விட்டாள். அனந்தனுக்கு விஷயம் பளிச்சிட்டது. அவள் கடிதம் எழுதியது யாருக்கு என்பதைக் கண்டு பிடித்து விட்டான். அதாவது, இந்தக் கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கிறதோ, அதே ஆசாமிக்குத்தான் பதில் எழுதியிருக்கிறாள் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், இந்தக் கடிதம் யாரிடமிருந்து வந்திருக்கிறது என்பது மட்டும் அவனுக்குத் தெரியவில்லை!

அனந்தன் மனதில் வேதனை தலைகாட்டியது. பெண்களை இவ்வாறு ரகசியமாகக் கண்ணீர் விடச் செய்யும் சக்தி காதலன் எழுதும் கடிதங்களுக்கு மட்டும்தான் உண்டு என்பது அவனுக்குத் தெரியும். அப்படியானால் அந்தக் காதலன் யார்? இவ்வளவு அழகான பெண்ணின் காதலைப் பெறும் பாக்கியசாலி எதற்காக இவளை அழும்படி செய்யவேண்டும் என்பதுதான் அவனுக்குப் புரியவில்லை. அந்தக் காதலன் மீது அவனுக்குக் கோபம் ஏற்பட்டதுடன், பொறாமையும் அருவையும் ஏற்பட்டது.



இதற்குப் பிறகு அம்புஜம் அவன் பக்கமே தலைகாட்டுவதில்லை. தாழ்வாரத்தில் அவள் கண்ணீரும் கம்பலையுமாக நின்றதை அனந்தன் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவள் ரொம்பவும் லஜ்ஜையடைந்திருக்க வேண்டும். ஆனால், இந்தக் கடிதம் வந்த பிறகு அம்புஜம் குஷியாக இல்லை. அவள் 'களீர்' சிரிப்பும் மின்னல் நடையும் மாயமாய் மறைந்தன. அவள் வீட்டிலேயே இல்லையோ என்றுகூட சில சமயம் நினைப்பான். ஆனால் இரண்டு மூன்று தடவை கையிலுள்ள பாத்திரங்களை அம்புஜம் கீழே போட்டதிலிருந்து, அவள் வீட்டில் இருந்தும் அவள் மனம்

பெரிய இடத்துச் சம்பந்தம்

வி.எஸ்.ஆர்.

அனந்த நாராயணன் அன்று காலை செய்திப் பத்திரிகையைச் சிரத்தையுடன் படித்துக் கொண்டிருந்தான். உள்ளே யாரோ வரும் காலடிச் சத்தத்தைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தான். பார்த்தவன் திடுக்கிட்டுப் போனான். உள்ளே வந்து கொண்டிருந்தது......நிர்மலாவா? சே, சே, இருக்காது. அவன் அருமை நிர்மலா மறைந்துதான் இரண்டு வருஷங்களாகி விட்டனவே! அவள் புனர் ஜன்மம் எடுத்து வந்து விட்டாளா? அல்லது அவன் காண்பது கனவா?

உள்ளே வேகமாக வந்து கொண்டிருந்த பெண், அனந்தனைப் பார்த்ததும் ஒரு கணம் தயங்கி நின்று, சட்டென்று ஒரு புறமாக ஒதுங்கிச் சமையற் கட்டுக்குள் போய் விட்டாள். திகைப்புடன் திரும்பிப் பார்த்தான் அனந்தன்.

"வாடி, அம்புஜம்! கூடமாட ஒத்தாசையாக இருப்பேன்னு வரச் சொன்னால், இத்தனை நாழியா வருகிறதற்கு? இந்தா...இந்த வாழைக்காயைக் கறிக்கு நறுக்கி வை!" என்று சமையற்காரி விசாலத்தின் குரல் கேட்டது. சட்டென்று விஷயம் புலப்பட்டது அனந்தனுக்கு. அன்று அவன் தகப்பனாரின் சிராத்தம். சமையல் வேலைக்குத் தனக்கு உதவி செய்வதற்காக, புதிதாக வந்திருக்கும் சமையற்கார அம்மாள் விசாலம் தன் பெண் அம்புஜத்தையும் வரச் சொல்லி யிருக்கிறாள்.

வியப்பினால் கட்டுண்டு உட்கார்ந்திருந்தான் அனந்தன். அவன் மதுரையில் ஓர் உயர்தர அதிகாரி. வாலிபத்திலேயே பெரிய பரீட்சைகளில் தேறி உயர்ந்த உத்தியோகம் பார்த்து வந்தான். பெரிய இடத்துப் பெண் நிர்மலாவையும் கல்யாணம் செய்து கொண்டான். ஆனால் இரண்டு வருஷங்களுக்கு முன் அவனைத் துக்கத்தில் ஆழ்த்திவிட்டு நிர்மலா பிரசவ அறையில் இறந்து போனாள். இன்று அம்புஜத்தைப் பார்த்ததும் அவன் மனம் குழப்பியது. "அப்படியே நிர்மலாவை உரித்து வைத்திருக்கிறதே! அதே முகம், மூக்கு, கண் எல்லாம்! கை வீச்சும் நடையும் கூட அப்படியே இருக்கிறதே!" என்று பிரமித்துப் போனான்.

இந்த சமயத்தில் அனந்தனின் தாயார் அங்கே வந்து, "பார்த்தாயடா அனந்தா! இந்தப் பெண் நிர்மலா மாதிரியே இருக்கிறாளே!" என்று ஆச்சரியப்பட்டாள். உள்ளூறக் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்த போதிலும் அதை அதிகமாகப் பாராட்டாதவன் போல், "உலகத்தில் ஒருவரைப் போலவே தோற்றமுள்ளவர்கள் ஏழு பேர் இருப்பார்கள் என்று எங்கேயோ படித்தேன், அம்மா!" என்றான். அதைத் தொடர்ந்து, "இவர்களுக்கு எந்த ஊர் அம்மா?" என்று விசாரித்தான். அப்பொழுதுதான் சமையற்கார அம்மாளின் யோக க்ஷேமத்தில் அவனுக்கு அக்கறை தோன்ற ஆரம்பித்தது.

"பெரியகுளத்தில் விசாலத்தின் அகமுடையான் உயிரோடிருந்த போது பள்ளிக்கூட வாத்தியாராக இருந்தாராம். நன்றாக இருந்த குடும்பம் இப்பொழுது கஷ்டப்படுகிறது. வேறு குழந்தை குட்டிகள் இல்லை. இப்போ வந்ததே, அந்த ஒரே ஒரு பெண்தானாம். அதற்கும் கல்யாணத்தைப் பண்ணி விட்டால், விசாலத்தின் கஷ்டம் விட்டது. பெண்ணுக்குக் கூடமாட ஒத்தாசையாகப் போய் இருந்து விட்டாலும் போச்சு!" என்று கூறினாள் அனந்தனின் தாயார்.

இந்த சம்பவம் நடந்த பிறகு அடிக்கடி அம்புஜம் அவர்கள் வீட்டுக்கு வர ஆரம்பித்தாள். "அம்புஜம் நல்ல சமர்த்து! கண் பார்த்ததைக் கை செய்கிறது" என்று அடிக்கடி அனந்தனிடம் கூறிச் சிலாகித்து வந்தாள் அவன் தாயார்.

அம்புஜத்தைப் பார்த்ததி லிருந்து அனந்தனின் உள்ளத்தில் புயல் வீசியது. அவள் அதிகமாக அவன் எதிரில் வருவதில்லைதான். அவ்வப்பொழுது சமையலறையிலிருந்து வந்த 'கல கல' வென்ற வளையல்களின் சத்தம், தாழ்ந்த குரலில் தன் தாயாருடனும் விசாலத்துடனும் அவள் பேசும் பேச்சு, அவனையும் மீறிக் கொண்டு வந்த 'களுக்' கென்ற சிரிப்பொலி—இவை அவன் காதில் விழாமலிருக்குமா? 'கட கட' வென்று சக்கரம் சப்திக்க இவ்வளவு வேகமாகக் கொல்லைக் கிணற்றில் ஜலம் இழுப்பது இளமை தவழும் அம்புஜத்தைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

அம்புஜம் வீட்டில் நடமாடிய ஒவ்வொரு நிமிஷமும் நிர்மலாவை அவன் ஞாபகமூட்டினாள். நாளாக ஆக, அவன் மனதில் முளைத்தெழுந்த சிறு ஆசை நம்

தக்கு வெளியே நின்று ஸ்ரீ மாதவமேனன் கார் மீது கல் வீசித் தாக்கினர். இதில் ஒரு பெரிய வெட்கக் கேடு என்னவென்றால் கல் வீசுவதற்காக வந்திருந்த கம்யூனிஸ்டுகளெல்லாம் இந்தியர்கள்தான். அவர்களிடையில் இலங்கையர்கள் தென்படவில்லை. இந்தக் கயவாளித்தனத்துக்கு ஸ்ரீ மாதவமேனன் சுடச்சுட பதில் கொடுத்தார்.

“அரிவாளும் செம்மட்டியும் மனிதனுக்கு மிகவும் அவசியமானவை யென்று மகாத்மாவே சொல்லியிருக்கிறார். நெல் அறுக்கவும் ஆணி அடிக்கவும் உபயோகிக்கும் ஆயுதங்களைக் கழுத்தை அறுக்கவும் மண்டையை உடைக்கவுமா உபயோகிப்பது? நான் எந்தக் கொள்கையின் பிரதிநிதியாயிருக்கிறேனோ அந்தக் கொள்கையைப் பலாத்காரத்தினாலும் கோஷங்களினாலும் நசுக்கிவிட முடியாது என்று சென்னை மந்திரி காருக்காகச் சூடு கொடுத்தார்.

ஸ்ரீ மாதவமேனன் தம்பதிகள் இலங்கையின் சரித்திர, கலாசார, மத முக்கியத்துவமுடைய இடங்களிலெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்து பார்த்தனர்.

குடியரசாக்கக் கோரிக்கை

இந்தியாவையும் பர்மாவையும் போல இலங்கையையும் ஒரு குடியரசாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை மெதுவாகப் பலமடைந்து வருகிறது. தேசிய காங்கிரஸின் கூட்ட மொன்றில் இலங்கையை உடனே குடியரசாகப் பிரகடனம் செய்ய வேண்டு மென்றும் இலங்கையில் ராணுவ, கடற்படை, விமானப்படைத் தளங்களை பிரிட்டனுக்குக் கொடுத்து பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் செய்து கொண்டிருக்கும் உடன்படிக்கைகளை உடனே ரத்து செய்ய வேண்டுமென்றும் இரண்டு தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்தத் தீர்மானங்களை அரசாங்கம் லட்சியம் செய்யப் போவதில்லையென்றாலும் பொது ஜனங்களிடையில் இது மாதிரி ஓர் இயக்கம் ஆரம்பமாகி வலுவடைவது குறிப்பிடத் தக்கது.

ஸ்ரீ சுந்தரம் தம்பதிகள்

பிரிட்டிஷ் ஒலி பரப்பு நிலையத்தில் “தமிழ் ஓசை” என்ற நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து ஒலி பரப்புவதற்காக இலங்கை அரசாங்கம் இரவல் கொடுத்திருந்த ஸ்ரீ சிவபாத சுந்தரம் தமது மனைவியுடனும் சீமையில் பிறந்த தமது குழந்தையுடனும் இவ்வாரம் இலங்கைக்குத் திரும்பி வந்து சேர்ந்தார். ரேடியோ சிலோனில் அவர் பதவி வகிக்கப்போகும் புதிய பதவி என்னவென்பது இன்னும் நிச்சயமாகத் தெரியவில்லையென்றாலும் ரேடியோ சிலோன் தமிழ் நிகழ்ச்சிகள் இனி வெகுதூரம் அபிவிருத்தியடையுமென்று சுலபமாக எதிர்பார்க்கலாம்.

குதிரைப் பந்தயம் பற்றிக் கொள்கை

இலங்கையில் குதிரைப் பந்தயங்கள் நடப்பதையும் வெளி தேச குதிரைப் பந்தயச் செய்திகள் பிரசுரமாவதையும் தடை செய்ய வேண்டு மென்றும் வெளிநாடுகளிலிருந்து மதுவகைகள் இறக்குமதியாவதையும் விற்பனையாவதையும் தடை செய்ய வேண்டு மென்றும் செனட்டர் ஸிரில் டி சொய்சா என்பவர் ஒரு தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார். அதைப்பற்றி அடுத்த ஓரிரண்டு வாரங்களில் சர்க்கார் பார்லிமெண்டரிக் கட்சியில் ஆலோசனை நடக்கும் பொழுது அரசாங்கத்தின் கொள்கையை விளக்கிப் பிரதம மந்திரி சேனநாயக ஒரு முக்கியமான அறிக்கையை வெளியிடுவாரென்று எதிர்பார்க்கப் படுகிறது. இதற்கிடையில் அரசாங்கச் சாராய உற்பத்திச் சாலையிலிருந்து இன்னும் உயர்ந்த மாதிரிச் சாராயத்தை உற்பத்தியாக்க ஒரு நிபுணரை அமர்த்தி ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருவதும் இங்குக் குறிப்பிடத் தகுந்தது.

இலங்கைக் கடிதம்

நம்பிக்கை தகர்ந்தது

ரஜனி

கொழும்பு, பிப்ரவரி 23

இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு காமன்வெல்த் மகா நாட்டுக்காக இங்கு வரப்போகிறாரென்ற செய்தி வெளியானவுடன் இந்தியர் பிரச்னையில் நிச்சயம் ஒரு சமரச உடன்பாடு ஏற்படுமென்ற நம்பிக்கை சில வட்டாரங்களில் நிலவியது. அடுத்தபடியாக லண்டனிலுள்ள இலங்கை ஹை கமிஷனர் ஸர் ஆலிவர் குணதிலகா இங்கு வந்து இந்தியர் பிரச்னையைப் பற்றிப் பல தலைவர்களுடனும் பேசி விட்டுச் சமரச உடன்பாடு சில மணி நேரத்துக்குள் பூர்த்தியடைந்து விடுமென்று நினைக்கும்படி அறிக்கைகளை வெளியிட்டுச் சென்றார். பிரஜா உரிமைச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்ய நகல் தயாராகிவிட்டதாயும், சில தினங்களுக்குள் அது பார்லிமெண்டுக்கு வந்து விடுமென்றும் கூறப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் சர்க்காரைப் பகைத்துக் கொள்ளாதிருக்க இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர்களும் மிகுந்த எச்சரிக்கையுடனிருந்தார்கள். இந்தச் நல்லெண்ணச் சூழ்நிலையைப் பிரதம மந்திரி கட்டாயம் பயன்படுத்திக் கொள்ளுவாரென்ற நம்பிக்கைக்குச் சென்ற வாரம் ஒரு குரூரமான அதிர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

இலங்கையரல்லாதார்களின் ஓட்டுரிமையைப் பறிக்கும் சட்டத்தை விரைவில் அமுல் நடத்த ஆவலுடனிருப்பதாகப் பிரதம மந்திரி சேனநாயகா பார்லிமெண்டில் மறைமுகமாகத் தெரிவித்திருப்பது இந்திய வட்டாரங்களில் அதிர்ச்சி விளைவித்திருக்கிறது. இலங்கையரல்லாதார்களுக்குப் பிரதிநிதிகளாக அரசாங்கம் தனக்கு இஷ்டமானவர்களை நியமிக்க ஒரு அரசியல் சட்டத்திருத்த மசோதாவைப் பிரதம மந்திரி போன வாரம் பார்லிமெண்டில் கொண்டு வந்தார். அதற்கு என்ன அவசரமென்பதற்குக் காரணம் கூறுகையில், இலங்கையரல்லாதார்களின் ஓட்டுரிமையையும் தேர்தல் மூலமாக அவர்கள் தங்களுடைய சொந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையையும் பறிக்கும் ஒரு சட்டம் ஏற்கெனவே பார்லிமெண்டில் நிறைவேறியிருப்பதாயும், அதை விரைவில் அமுல் நடத்த வேண்டியிருப்பதினால்தான் நியமனத்தின் மூலம் அவர்களுக்கு பிரதிநிதித்துவமளிக்கும் மசோதாவை நிறைவேற்றுவது அவசரமாயிருக்கிறதென்றும் பிரதம மந்திரி தெரிவித்தார். உலகில் நியமன ஸ்தானங்களை உதறிவிட்டுத் தேர்தல்களின் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முற்போக்கான சூழ்நிலையில் இலங்கையின் பிற்போக்கு சிலருக்கு ஆச்சரியமாயிருக்கலாம். ஆனால் இந்தப் பிற்போக்கில் மறைந்திருக்கும் அரசியல் இலட்சியங்களைக் கவனிக்கும் பொழுது பழைய சேனநாயகா இன்னும் பழைய போக்கிலேயே காரியங்களை நடத்திக் கொண்டு போகிறாரே தவிர, அவரிடம் எவ்வித மனமாறுதலும் ஏற்படவில்லையென்பது தெளிவாகிறது.

ஸ்ரீ மாதவமேனன் விஷயம்

இவ்விஷயத்தில் இங்கு வந்திருக்கும் சென்னை கல்வி, சட்ட மந்திரி ஸ்ரீ மாதவமேனன் நடந்து கொண்ட முறையைப் பாராட்ட வேண்டும். அவரிடம் பல பத்திரிகைக் காரர்கள் சென்று இலங்கை இந்தியர் பிரச்னையைப் பற்றி அபிப்பிராயம் கேட்ட பொழுது "அதை இனித்தான் ஆராயப் போகிறேன். என் அபிப்பிராயங்களை இந்திய மத்திய சர்க்காருக்குத் தெரிவிப்பேன். அவசியமான நடவடிக்கைகளை அவர்கள் எடுத்துச் சொல்லுவார்கள்" என்று சுருக்கமாகச் சொல்லி முடித்து விட்டார். மற்றவர்களைப் போல அவர் உபதேச காண்டத்தில் இறங்கவில்லை.

ஸ்ரீ மாதவமேனன் கொழும்பு நகர மண்டபத்தில் பாரதசேவா மண்டல ஆண்டு விழாக் கூட்டத்தில் பேசுவதற்கு வந்த பொழுது ஒரு அசம்பாவிதமான சம்பவம் நடந்தது. சேலம் மத்திய சிறைச்சாலையில் கம்யூனிஸ்டுக் கைதிகள் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை ஆட்சேபிப்பதற்காகச் சில கம்யூனிஸ்டுகள் நகர மண்டபத்



தெரியாது!

பிரதிவாதியின் வக்கீல் ஒரு சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்து கொண்டிருந்தார்.

வக்கீல்:—வாதியும் பிரதிவாதியும் சண்டை போட்டுக் கொண்டதைப் பார்த்தேன் என்று சொல்லுகிறீரே, நீர் ஏன் வாதிக்கு உதவி செய்யவில்லை?

சாட்சி:—அது எப்படி முடியும்? யார் வாதி, யார் பிரதிவாதி என்று எனக்கு அப்பொழுது எப்படித் தெரியும்?

★

பத்திரிகையில் வந்தது!

பத்திரிகை படித்துக் கொண்டிருந்த கிட்டு, "அப்பா, அப்பா!" என்று கத்திக் கொண்டு உள்ளே ஓடினான்.

அப்பா:—என்னடா, என்ன?

கிட்டு:—என்னைப் பத்திரிகையில் போட்டிருக்கிறார்கள்; அப்பா!

அப்பா:—என்ன உளறுகிறாய்?

கிட்டு:—இல்லை, அப்பா! நிஜமாகத்தான் போட்டிருக்கிறார்கள். போனவருஷம் ரயிலில் 87,34,307 பேர் பிரயாணம் செய்தார்கள் என்று பேப்பரில் போட்டிருக்கிறது. போன வருஷம் நானும் ரயிலில் பிரயாணம் செய்தேன் அல்லவா?

★

மறந்த விஷயம்!

கணவன் மிகவும் கோபமாயிருந்தான். மனைவியைப் பார்த்து ஒரு உறுமல் உறுமினான். அங்கவஸ்திரத்தைக் கழுத்தில் ஒரு மாட்டு மாட்டிக் கொண்டு, திடும் திடும் என்று காலை வைத்துக்கொண்டு வெளியேறினான்.

மனைவி கைதட்டிக் கூப்பிட்டாள்.

புருஷன் (திரும்பிப் பார்த்து):—ஏன்?

மனைவி:—மறந்தே போய் விட்டீர்களே! கதவைப் படார் என்று அடித்துச் சாத்திக் கொண்டு போகவில்லையே!

தீரர்!

செல்வராஜ் நுழைந்தபோது சபையிலிருந்த எல்லோரும் மரியாதை செய்தனர். ஊருக்குப் புதிதாயிருந்தவர் ஒருவர் தம் பக்கத்திலிருந்தவரைக் கூப்பிட்டு "இவர் யார்?" என்று கேட்டார்.

"இவர்தான் போன வருஷம் சர்க்கஸ் நடந்தபோது ஒரு தீரச்செயல் செய்தார்!"

"அது என்ன?"

"சர்க்கஸில் திடீரென்று ஒரு புலி தன் இரும்புக் கூண்டிலிருந்து தப்பித்துக் கொண்டு ஓடிவிட்டது. எல்லோரும் பயந்து கொண்டு அங்கும் இங்குமாக ஓடினார்கள். இவர் மட்டும் தைரியமாகப் போய், அந்தப் புலியின் கூண்டுக்குள் புகுந்து, கதவையும் சாத்திக் கொண்டு விட்டார்!"

★

பிறந்த நாள்!

பிச்சைக்காரன்:—ஐயா, ஒரு காலணா இருந்தால் கொடுங்கள்.


அவர்:—எதற்கு அப்பா, உனக்கு காலணா?

பிச்சைக்காரன்:—இன்றைக்கு என் பிறந்த நாள்! ஹோட்டலுக்குப் போய் ஒரு பாதாம் அல்வா வாங்கிச் சாப்பிடவேணுங்க!

★

வேண்டாம்!

சாப்பிடுபவர் (பரிமாறுபவரைப் பார்த்து):- நான் சாப்பாட்டுக்கு ஆர்டர் கொடுத்து ஒரு மணி ஆகிறதே! பசியினால் துடித்து



நான் இன்று முழுவதும் இங்கேயே காத்துக் கிடக்க வேண்டியதுதானா?

பரிமாறுபவர்:—வேண்டாம், வேண்டாம் ஸார்! ஒன்பது மணிக்கெல்லாம் நாங்கள் ஹோட்டலை மூடிவிடுவோம்!

மறுநாள் பத்திரிகையில் இந்தச் செய்தி பிரமாதப் பட்டது. மருதாசலம் சர்க்கார் விருந்தாளியாகப் போய்விட்டார். வஞ்சிக் கொடிக்கு இதெல்லாம் சரியாகப் புரியவில்லை. தான் செய்தது சரியா என்பதே அவளுக்குப் புலப்படவில்லை. காரணமில்லாமல் ஒரு பெரிய மனிதனைக் காட்டிக் கொடுத்தோமே, இதனால் என்ன நன்மை? அவளுக்குத் தூண்டுகோலா யிருந்த அந்த நாகலிங்கம் யார்? அவன் ஏன் இதெல்லாம் செய்ய வேண்டும்? அவன் நல்லவன்தானா? அவனை நம்பலாமா? இனிமேல் என்ன செய்ய வேண்டும்? இப்படிக் கணக்கற்ற கேள்விகள் அவள் முன் எழுந்து வந்து நடனமாடின. அவனை நினைக்கும்போதே அவள் மனதில் நம்பிக்கை பிறந்தது. ஏன்? அவன் நல்லவனாகத்தான் இருக்க வேண்டும் என்ற எண்ணம் வேரூன்றியது.

அப்போது மறுபடியும் அவன் வந்தான். அவனைக் கண்டதும் வஞ்சிக்கு என்னமோ தன் குறைகளை யெல்லாம் சொல்லி ஆறுதல் கேட்க வேண்டும் போலிருந்தது. அவள் கண்களில் நீர் துளித்தது.

நாகலிங்கம் மெதுவாக அவளிடம் வந்து நின்றான். வழக்கம்போல அவன் கண்களில்] இரக்கமும் கம்பீரமும் தோன்றி மறைந்தன.

வஞ்சிக்கொடி அவனை நிமிர்ந்து நோக்கினாள். "உண்மையாகச் சொல்லுங்கள். நீங்கள் கொள்ளை யடிப்பவரா?"

நாகலிங்கம் சிரித்தான்.

"ஆமாம், வஞ்சி. நான் கொள்ளைக்காரன். என் அப்பன் பெரிய கொள்ளைக்காரன். நாங்கள் சமூக விரோதிகள். தேசத் துரோகிகள். நாட்டில் பஞ்சம் ஏற்படக் காரணமா யிருக்கின்றவர்கள்!"

வஞ்சி சந்தேகத்துடன் கேட்டாள்: "உங்கள் தகப்பனார் கொள்ளைக்காரர் என்கிறீர்களே! அவர் இப்பொழுது எங்கே யிருக்கிறார்?"

"சிறையிலேதான், வஞ்சி!"

"என்ன, சிறையிலா?"

"ஆமாம். நீதான் அவர் சிறையில் நுழைவதற்கு வழி திறந்து வைத்தாய்."

"எனக்குப் புரியவில்லையே!"

"வஞ்சி, நீ உலகம் அறியாதவள். நான் ஒரு கொள்ளைக்காரன். என் தகப்பனார்தான் மருதாசலம்!"



பற்றிப் போலீசுக்குத் தெரிவிக்க முடியாமல் திகைத்தனர். கடைசியில் என் பேரில் போலீஸ் இலாகாவுக்கு மொட்டைப் புகார் எழுதிப் போட்டு என்னைப் பிடிக்கும்படி செய்தனர். இவை யெல்லாம் நடந்தவை. இனிமேல் மகனே, நீதான் என் வாரிசு.

"இப்பொழுது உனக்கு இதெல்லாம் புதிதாக இருந்தாலும் காலம் உன் கண்ணைத் திறந்து விடும். உலகம் உனக்கு அனுபவத்தைக் கொடுக்கும். தைரியத்தை விடாமல் இரு. உன் தகப்பனைச் சிறைக்கு அனுப்பக் காரணமாயிருந்தவர்களை முடிந்தால் நீ பழி வாங்கு!"

வஞ்சிக் கொடி கனவிலிருந்து விழித்தெழுந்தவள் போலப் பார்த்தாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. மெல்ல, "அப்பா!" என்றாள். திருமால் தேவன் வாயில் கை வைத்து வாசற் கதவைக் காட்டினான். நேரமாகி விட்டது! வஞ்சிக் கொடி காவற்காரனுடன் வெளியே போக வேண்டும். தயங்கித் தயங்கி அவள் நடந்தாள். சிறைச்சாலைக் கதவுகள் மீண்டும் அடைக்கப்பட்டன.

ஒன்றும் புரியாத குழப்ப நிலையில் வெளியே வந்த வஞ்சிக் கொடி வாசலில் நின்ற இளைஞனைக் கண்டதும் திகைப்புடன் சற்றுத் தயங்கி நின்றாள்.

அந்த இளைஞன் மெதுவாக அவள் பெயரைச் சொல்லி அழைத்ததும் அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் சைகை காட்டி அவளை அழைத்துச் சென்றான். மயக்க நிலையில் அவள் நடந்தாள். எங்கே போகிறோம், ஏன் போகிறோம் என்பதெல்லாம் அவளுக்கு அப்போது தெரியாது. இதை யெல்லாம் யோசிக்கவும் அவகாசமில்லை.

சற்றுத் தூரத்தில் இருந்த ஒரு மரத்தின் அடியில் அந்த வாலிபன் உட்கார்ந்தான். அவளும் அங்கே உட்கார்ந்தாள்.

"நீ திருமால் தேவன் மகள்தானே!" என்ருன் அவன்.

"ஆமாம்."

"கவலைப்படாதே, நான் அவருடைய நண்பர்களில் ஒருவன். சொல்லப்போனல் அவர் வியாபாரத்தில் கூட்டாளி."

வஞ்சி அவனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தாள். பால்வடியும் அந்த அழகனின் முகம் ஒரு கொள்ளைக்காரனுடையதைப்போல் இல்லை. இரக்கமும் கம்பீரமும் பொருந்திய அந்த வாலிபனின் கண்களில் களங்கமில்லை.

வஞ்சியின் முகக் குறியிலிருந்து அவன் சந்தேகம் வெளிப்பட்டது. அவன் அலட்சியமாகச் சிரித்து விட்டு மறுபடியும் பேசத் தொடங்கினன்:

"நீ என்ன வேண்டுமானலும் நினைத்துக் கொள். ஆனல் வஞ்சி, உன் தகப்பனர் இப்படிச் சிறைக்குப்போக நேர்ந்ததற்குக் காரணமாக இருந்தவர்களை மட்டும் பழி வாங்காமல் விட என் மனசு இடம் கொடுக்கவில்லை. அவர் தங்கள் படகுகளை வழிப்பறி செய்வதை சர்க்காருக்கு நேரில் தெரிவிக்க முடியாத அந்த வியாபாரிகளின் சூழ்ச்சியின் காரணமாகத்தான் உன் தகப்பனர் சிறை புகுந்தார். இதில் முக்கிய பங்கு அந்த மருதாசலத்தினுடையதுதான். நீ மட்டும் எனக்கு ஒரு உதவி செய். நான் நேரில் சென்று போலீஸுக்கு எதையும் தெரிவிக்க முடியாது. எப்படியாவது ஒரு நாளைக்கு இந்த மருதாசலத்தின் படகுகள் திருட்டுத்தனமாக வெளியேறும்போது நான் வந்து உன்னிடம் தெரிவித்து விடுகிறேன். வழக்கம்போல நாம் கொள்ளையடிக்க வேண்டாம். ஆனல் அந்தப் படகுகளைச் சர்க்காரிடம் காட்டிக் கொடுத்து விடவேண்டும். எனக்காக நீதான் இவைகளைச் செய்ய முடியும். இதனல் உன் தகப்பனருக்கும் நீ உபகாரம் செய்ததாயிருக்கும். சிறையிலிருந்தாலும் அவர் மனம் ஆறுதலடையும். எனக்காக இல்லாவிட்டாலும் அவருக்காகவாவது நீ இதைச் செய்யத்தான் வேண்டும். பிறகு வருகிறேன். நீ எங்கும் தனியாக வெளியே போகாதே. நல்ல செய்தி கொண்டு வருவேன். போகட்டுமா?"

அவள் பதில் சொல்ல எழுந்திருப்பதற்கு முன் அவன் போய் விட்டான். வஞ்சிக்கொடிக்கு இந்த உலகமே சுழன்றது. நடுக் காட்டில் கண்ணைக் கட்டி விட்டது போலிருந்தது.

* * *

மூன்று நாட்கள்தான் ஆகியிருக்கும். மீண்டும் அவன் அவள் வீட்டுக்கே வந்தான்.

"வஞ்சி!"

"ம்........."

"சரி, நேராகப் போ. போலீசாரிடம் படகுகள் போவதற்குத் தயாராக இருப்பதாகச் சொல். இடத்தைச் சொல்கிறேன். குறிப்பாகச் சொல். தூத்துக்குடியிலிருந்து கடல் வழியே கீழ் நோக்கிப் போனல் தெரியும் முதல் திட்டு. அங்கே மருதாசலமும் இப்போது போயிருக்கிருர். கையும் களவுமாகப் பிடிக்கலாம் என்று சொல். தயங்காதே. உன் தகப்பனரை நினைத்துக் கொள். வேகமாகப் போ. போலீசார் அங்கே கிளம்பி விட்டதும் நீ நேராக இங்கேயே வந்து விடு. நான் வருகிறேன்."

"இருக்கட்டும், உங்கள் பெயர்......" வஞ்சி கொஞ்சம் துணிவுடனேயே கேட்டு விட்டாள்.

அவனும்கூட இந்தக் கேள்வியால் திடுக்கிட்டான். பிறகு, "என் பெயர் நாகலிங்கம்! ஆனல் யாரிடமும் என் பெயரைச் சொல்லாதே..." என்று சொல்லி விட்டு அப்பால் நடந்தான்.

வஞ்சிக் கொடி சற்று நேரம் அங்கேயே நின்ருள். இவையெல்லாம் கனவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்ளவே அவளுக்குக் கொஞ்சம் நாழிகை வேண்டியிருந்தது. பிறகு அசட்டுத் துணிவுடன் வந்தது வரட்டும் என்ற நினைவில் போலீசுக்குத் தகவல் கொடுத்து விட்டு வந்தாள். முதலில் அவர்கள் நம்பவில்லை. பிறகு ஒரு பெண் இதை ஆதாரமில்லாமல் கொண்டுவர மாட்டாள் என்ற நம்பிக்கையுடன் கிளம்பி விட்டார்கள்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

வாஸ்தவம்!

●

பஸ் கண்டக்டர் (ஒரு பிரயாணியைப் பார்த்து):—ஸார், இந்த இரண்டணு செல்லாதுங்க! இந்தாங்க!

பிரயாணி (அந்தக் காசைக் கையில் வாங்கிப் பார்த்து):—என்ன அப்பா, இந்தக் காசு செல்லாது என்கிருயே! நன்ருய்ப் பாரு! 1940-ம் வருஷம் போட்ட காசு இது. இது செல்லாது என்ருல் இத்தனை வருஷத்துக்குள் கண்டு பிடித்திருக்க மாட்டார்களா?

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

முயற்சி ஒரு விதமாக வெற்றி பெற்றது. தகப்பனைப் பார்க்க ஒரு அபலைப் பெண்ணுக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுத்து விட்டார் சிறை அதிகாரி. கன்னத்தில் கை வைத்துச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த திருமால் தேவனைக் கண்டதும் வஞ்சிக் கொடிக்கு என்னமோ செய்தது. அவள் மனசில் எழுந்த கோபமெல்லாம் மறைந்து தகப்பனுரிடமுள்ள பாசம்தான் எஞ்சி நின்றது. அவளையறியாமலே, "அப்பா!" என்று விக்கியபடியே அவன் மடியில் சாய்ந்தாள்.

எதிர்பாராமல் மகளைக் கண்ட அதிர்ச்சி நீங்கியதும் திருமால் தேவன் அவளை மார்போடு அணைத்துக் கொண்டான். பாசத்துடன் அவள் தலையைத் தடவிக் கொடுத்தான். அவள் சிறு குழந்தையாயிருந்த போது தன் மடிமீது அயர்ந்து தூங்கிய நாட்கள் அவன் நினைவுக்கு வந்தன. மண்டியிட்டுக் கீழே உட்கார்ந்திருந்த அவள் தலையைத் தன் மடி மீது சாய்த்துக் கொண்டான்.

"வஞ்சி, கவலைப்படாதேயம்மா. நான் சொல்வதைக் கவனமாகக் கேள். நீ ஒரு கொள்ளைக்காரன் மகள். ஆனால் அது உன் குற்றமல்ல. இப்பொழுது இனிமேல் நீ என்ன செய்ய வேண்டுமென்பதை மட்டும் சொல்லி விடுகிறேன். நான் அரை குறையாக விட்ட வேலைகளை நீதான் முடிக்க வேண்டும்."

எல்லையற்ற வியப்புடன் தகப்பன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள் வஞ்சிக் கொடி. அவள் வாய் திறக்கவில்லை.

"உன் வியப்பு எனக்குத் தெரிகிறது, குழந்தாய்! ஆனால் நீ அதை முடிக்கத்தான் வேண்டும். உன் தகப்பன் கேட்கும் வரம் இது. விதி என்னை வஞ்சித்து விட்டது. உலகம் என்னை ஏமாற்றி விட்டது. இப்பொழுது விதியை எதிர்த்து நீ போராட வேண்டும், உலகத்தை நீ ஏமாற்ற வேண்டும். வஞ்சகம் நிறைந்தது இந்த உலகம், இதில் ஏழைகளுக்கும் நல்லவர்களுக்கும் இடம் கிடையாது.

"மகளே, என் கதையைக் கேள். பிறகு நான் கூறுகின்றபடி செய். நான் கொள்ளையடித்தேன்; ஆனால் ஏழைகளிடமிருந்து இல்லை. நான் யாரிடமிருந்து இந்தப் பொருள்களைக் கொண்டு வந்தேனோ அவர்களுக்கு அதனால் கஷ்டமே கிடையாது. இது ஒரு புதிர். ஆனால் உண்மை இந்தப் பொருள்களைப் பறி கொடுத்த மகான்கள் என்னைப்போல் கொள்ளைக்காரர்கள்தான், அம்மா! ஆனால் அவர்கள் பெயர் பிரமுக வியாபாரிகள்.

"நாட்டில் உணவுப் பொருள் நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. எதனால் தெரியுமா? இந்தப் புண்ணியவான்கள் செய்யும் 'கடல் வியாபாரம்'தான் காரணம்.

"ஏராளமான சரக்குகளைச் சேர்த்து இவர்கள் தங்கள் படகுகளைக் கொண்டு கடல் மார்க்கமாக இலங்கைக்கு எடுத்துப் போகின்றனர். இது சட்ட விரோதமானது. ஆனால் அவர்கள் பணம் இவ்வழியில் அவர்களுக்குத் துணை நிற்கிறது. கள்ளத் தனமாகக் கடத்தப்படும் இந்தப் பொருள்களுக்கு அவர்கள் இலங்கை வர்த்தகர்களிடமிருந்து நான்கு பங்கு விலை வாங்கி விடுகிறார்கள். தூத்துக்குடியை அடுத்த கடற்கரைப் பிரதேசங்கள் அனைத்தும் இவர்கள் சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டதுதான். இந்தப் பாழும் வயிற்றுப் பிழைப்புக்காக இவர்களிடம் எத்தனையோ படகோட்டிகளும் மீன் பிடிப்பவர்களும் அடிமைகளாகப் போய் விடுகிறார்கள்.

"நான் சில வருஷங்களுக்கு முன்பு நாடோடியாக அலைந்து கொண்டிருந்தேன். தேசம் தேசமென்று கஞ்சிக்கும் வகையில்லாமல் நாட்டிற்காகப் பாடுபட்டேன். ஆனால் என் உழைப்புக்கு ஊதியம் கிடைக்க வில்லை. ஏச்சுக்கும் பேச்சுக்கும் இரையானேன். அப்பொழுது எனக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடாது போனாலும் இப்போது வாழ்கிறேன் என்று தெரிந்ததும் ஐயோ என்று பொருமையால் அலறிய இந்த உலகத்தை நம்பாதே. வஞ்சி, உன் மாசற்ற கண்களும், பாபக்கறை படியாத நெஞ்சமும் கடினமாகத்தான் வேண்டும். இன்னும் கேள். நான் என்னுடன் சில 'சரியான கைகளை'ச் சேர்த்துக் கொண்டு ஒரு வியாபாரம் ஆரம்பித்தேன். அதுவும் கடல் வியாபாரம்தான்.

"இலங்கையை நோக்கிப் போகும் இந்தத் திருட்டுப் படகுகளை வழி மறித்துக் கொள்ளையடித்தேன், மகளே. இது திருட்டல்ல. ஆனால் நேர்மைக்கும் நீதிக்கும் எதிரானதுதான். வாழ வகையற்றவன் என்ற பெயரோடு நான் இருக்க விரும்பவில்லை. தேசத்தின் சுபிட்சத்துக்குக் கேடு விளைவிக்கும் இந்த வியாபாரிகளிடமிருந்து அவர்கள் கொள்ளை லாபத்தில் நான் பங்கு எடுத்துக் கொண்டேன். இப்படிக் கொண்டு வந்த சரக்குகள்தான் என்னிடமிருந்து கைப் பற்றப்பட்டன. இவைகளுக்கு நான் எப்படியம்மா கணக்குக் கொடுக்க முடியும்? இவை திருடப் பட்டதற்கும் சாட்சி கிடையாது. கொள்ளை கொடுத்தவர்களும் தங்கள் திருட்டு வெளிப்படாமலிருக்க வேண்டி இந்த வழிப்பறியைப்

வஞ்சிக் கொடி

துஷ்யந்தன்

"என் குற்றத்தை மறைக்க நான் விரும்பவில்லை. என்னிடம் அபரிமித மான உணவுப் பொருள்களும், ஜவுளியும் இருந்தது உண்மை. அவைகளை நான் எங்கிருந்து கொண்டு வந்தேன் என்பதை மட்டும் வெளியிட மறுக்கிறேன். ஆகவே எனக்குக் கொடுக்க வேண்டிய தண்டனை எதுவானாலும் கொடுக்கலாம்."

திருமால் தேவன் கொடுத்த இந்த வாக்கு மூலம் எல்லோரையும் திகைக்க வைத்தது. சுமார் நாற்பத்தையாயிரம் ரூபாய் மதிப்புள்ள சரக்குகளுக்கு அவன் கணக்குக் கொடுக்கவில்லை. வாங்கியதற்கு விலைப்பட்டியலும் கிடையாது. தனக்காக அவன் எந்த வக்கீலையும் நியமிக்கவில்லை. இந்த விசித்திரமான வழக்கைக் கண்டு கோர்ட்டாரே அயர்ந்து போய் விட்டனர்.

திருமால் தேவன் மறுபடியும் தொடர்ந்தான்: "சட்டத்துக்கு விரோதமாக நான் சேமித்து வைத்து விட்டேன் என்று குற்றம் சாட்டுகிறீர்கள்; என்னைப்பற்றி நீங்கள் தெரிந்துகொண்டதை விட இன்னமும் தெரிந்து கொள்ள வேண்டியது எவ்வளவோ இருக்கிறது. நீதிக்குப் புறம்பான காரியங்கள் உலகத்தில் நடந்துகொண்டேதானிருக்கின்றன. உங்களுக்கு வியப்பாயிருக்கலாம். உண்மையைச் சொல்கிறேன். இந்தப் பொருள்கள் யாவும் நான் கொள்ளையடித்தவை. இத்துடன் என் குற்றத்தை ஒப்புக்கொண்டு விடுகிறேன். நான் தண்டனைக்குச் சித்தமாயிருக்கிறேன்."



இந்த வார்த்தைகள் பெரிய பரபரப்பை உண்டாக்கியதில் ஆச்சரியமில்லை. திருமால் தேவன் மகள் வஞ்சிக் கொடி கீழே விழுந்தாள். தகப்பன் தான் ஒரு 'கொள்ளைக்காரன்' என்று பகிரங்கமாக ஒப்புக்கொண்டால் ஒரு பெண்ணுக்கு எப்படியிருக்கும்!

"கொள்ளைக்காரன், கொள்ளைக்காரன்!" என்ற வார்த்தைகள் கோர்ட் முழுதும் எதிரொலித்தன. சிலர் நம்பவில்லை. எப்படியிருக்க முடியும்?

இவ்வளவு பெரிய தொகைக்குப் பொருள்கள் காணமற் போனதாகவோ திருட்டுப் போனதாகவோ யாரும் சமீபத்தில் அறிவிக்கவில்லை. போலீசுக்கும் தெரியாது!

பறிகொடுத்தவர்கள் யாரும் இல்லாமல் எப்படிப் பொருள்கள் கொள்ளை போயிருக்க முடியும்? எல்லோருக்கும் இது ஆச்சரியமாகவே இருந்தது.

ஆனால் திருமால் தேவன் அதற்கு மேல் ஒன்றும் கூற மறுத்து விட்ட படியால் சட்டம் அவனை ஏழு வருடக் கடுங்காவல் தண்டனைக்கு உட்படுத்திவிட்டது. ஆயிரமாயிரம் வழக்குகளைக் கண்டும் கேட்டும் பழகி விட்டவர்கள் இதை மற்றொரு வழக்காகக் கேட்டு வைத்தார்கள். அத்துடன் திருமால் தேவனையும் மறந்து விட்டார்கள்.

* * *

கோர்ட்டில் கீழே விழுந்த வஞ்சிக் கொடி சுய உணர்வு பெற்றதும் "கொள்ளைக்காரன்—கொள்ளைக்காரன்" என்று வாய்க்குள் சொல்லிக் கொண்டாள். திருமால் தேவன் மகள் என்றுதன்னை நினைப்பதற்குக் கூட அவள் வெட்கப்பட்டாள். உலகமே அவளைப் பார்த்துத் திருடன் மகள் என்று சிரிப்பது போலத் தோன்றியது அவளுக்கு. இதே ஏக்கத்தில் இரண்டு நாட்கள் ஓடிவிட்டன.

மூன்றும் நாள் அவள் ஒரு முடிவுக்கு வந்தாள். ஒரு முறை அப்பாவை நேரில் கண்டு பேசி விட்டு வருவதென்று புறப்பட்டாள்.



வேறொன்றும் கூற தேவையில்லை
சிறந்த பிஸ்கோத்து
பிரிட்டானியா
AIBMA


துண்டுகள் வெண்மையாக சலவை செய்யப் பட்டுள்ளன...
துண்டுகள் பிரகாசமாக சலவை செய்யப் பட்டுள்ளன...
SUNLIGHT SOAP
ஸன்லைட் சோப்பில் தான்
துணிகளை அடித்துத் துவைக்காமலே வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்கிறது!

S. 124-50 TM

படித்துப் பார்!

திருவாசகம்

பக்திச் சுவை ததும்பும் அருமைத் தமிழ் நூல்களில் திருவாசகமும் ஒன்று. எளிய சொல்லில் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் தனிப்பெரும் சிறப்பு வாய்ந்தது அந்நூல். சிறப்பு வாய்ந்த இத் தமிழ் நூலுக்கு இதுவரை ஒரு திருத்தமான பதிப்பு இல்லாதிருந்தது ஒரு பெருங் குறையாகும். தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் அருந் தொண்டாற்றி வரும் தருமபுர மடாலயத்தார் இந்தக் குறையை இப்போது போக்கி விட்டார்கள். சாதாரணக் கல்வி யறிவு உள்ளவர்களும் கூட எளிதில் படித்துப் பொருள் விளங்கிக் கொள்ளக்கூடிய முறையில் அவ்வளவு சிறப்பாக இதை வெளியிட்டிருப்பது பாராட்டத் தக்கதாகும். ஒவ்வொரு செய்யுளும் சீர்பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பக்கத்துக் கீழேயும் குறிப்புரை கொடுக்கப்பட்டிருக்கிறது. இறுதியில் ஆராய்ச்சியாளருக்கு உதவியாக இருக்கக்கூடிய முறையில் அரும்பத அகராதி கொடுக்கப்பட்டிருக்கிறது. ராஜாஜி அவர்கள் இந்தப் புத்தகத்துக்கு எழுதிய மதிப்புரையில் திருவாசகத்தின் பெருமையைச் சுருக்கமாக விளக்கி யிருக்கிறார்கள். ரசிகமணி ஸ்ரீ டி. கே. சி. தாம் எழுதிய பாராட்டுரையில் இப்புத்தகத்தை மகிழ்ச்சியுடன் வரவேற்றிருக்கிறார்கள். அச்சும் பைண்டும் முதல்தரமாக அமைந்திருக்கிறது. நானூறுக்கு மேற்பட்ட பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்துக்கு விலை ரூ. 2–8–0 என்று வைத்திருப்பது தருமபுர ஆதீனத்தாருக்குத் தமிழ்த் தொண்டின் மீதுள்ள ஆர்வத்தையே காட்டுகிறது. விலாசம்: மானேஜர், தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயவரம்.

Benediction

சரித்திரப் புகழ்பெற்ற நம் இந்தியக் குடியரசுத் திருநாளன்று, பிரஸிடெண்ட் ராஜேந்திரப் பிரசாதின் கழுத்தில் எத்தனையோ மலர் மாலைகள் விழுந்து அவரை மூச்சுத் திணற அடித்திருக்கும். ஆனால், தென்னாட்டில் பிரபலமாக விளங்கும் திருவாவடுதுறை ஆதீனத்தார் தொகுத்து ராஜேன் பாபுவுக்குச் சூட்டியிருக்கும் ஆசிப் பாமாலை அம்மலர் மாலைகளையெல்லாம் விடச் சிறப்பாக விளங்கும் என்பதில் சந்தேகமே இல்லை. தேவாரம், பரிபாடல், பதிற்றுப் பத்து, புறநானூறு, திருக்குறள், கம்பராமாயணம் முதலிய பழந்தமிழ் நூல்களிலிருந்து சிறந்த கவிகள் பலவற்றைப் பொறுக்கியெடுத்து, ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு கவியை வெளியிட்டு அதற்கு அடியில் குறிப்பும் வெளியிட்டுள்ளார்கள். தமிழ் தெரியாதவர்கள் படித்து மகிழுவதற்காக ஒவ்வொரு கவியையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். பெரும்பாலான கவிகள் அரசியலைப் பற்றியும் நிர்வாகத்தைப் பற்றியும்கூறுகின்றனவாகும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பே தமிழகத்தில் எத்தகைய அரசியல் நடந்து வந்தது, அரசாட்சியைப் பற்றியும் நிர்வாகத்தைப் பற்றியும் தமிழர்கள் கொண்டிருந்த கருத்து என்ன?— என்பதை இக்கவிகள் மூலம் அறியும்போது பேராச்சரியம் உண்டாகிறது நமக்கு. உதாரணமாக "தகுதி கேள் இனி மிகுதியாள..." என்று ஆரம்பமாகும் புறநானூற்றுச் செய்யுளைக் குறிப்பிடவேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டியது அரசனுடைய முக்கிய கடமைகளில் ஒன்று என்றும், ஆனால் அதற்காக அவன் மழையையே நம்பிக்கொண்டிருக்கக் கூடாதென்றும், அணை—குளம் முதலிய பல வகைகளிலும் நீரைத் தேக்கி வைக்க வேண்டுமென்றும் அச்செய்யுள் கூறுகிறது. இன்றைய நிலைமைக்குக்கூட இது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது! தெய்வத்தமிழில் மலர்ந்த இவ்வருமைப் பூக்களைத் தொகுத்து, அழகிய ஆசிமாலையாக வெளியிட்டுதவிய திருவாவடுதுறை ஆதீனத்தாரைப் பெரிதும் பாராட்டுகிறோம்.

காந்திஜி (திருவுருவப் படம்)

மாந்தருக்குள் ஒரு தெய்வமாக விளங்கிய காந்தி மகாத்மா இந்த தேசத்திற்கு ஆற்றியிருக்கும் அருந்தொண்டை நினைத்துப் பார்க்கும்போது, அந்தப் புண்ணிய புருஷருக்கு ஒரு ஞாபகச் சின்னமா, இரண்டு ஞாபகச் சின்னங்களா—ஆயிரமாயிரம் ஞாபகச் சின்னங்கள் கூட அமைத்துப் போற்றலாம். ரூபாய் மூன்று செலவில் ஒவ்வொரு வீட்டிலும் காந்தி மகானின் ஞாபகத்தை நிலை நிறுத்துவதற்குச் சென்னை யுனைடெட் ஆர்ட்ஸார் ஒரு வழி கண்டு பிடித்திருக்கிறார்கள். 25" X 20" அளவில் காந்திஜியின் திருவுருவத்தை போட்டோ ஆப்செட்டில் அழகாக வெளியிட்டிருக்கிறார்கள். பண்டித ஜவாஹர்லால்ஜி சமீபத்தில் சென்னைக்கு வந்திருந்தபோது இப் படத்தின் பெரிய வர்ணச் சித்திரம் ஒன்றைத் தம்முடன் கொண்டு சென்றாராம். டில்லியில் உள்ள

அ. இ. கா. கமிட்டிக் காரியாலயத்திலும் இப்படம் மாட்டப் பட்டிருக்கிறதாம். விலாசம்: யுனைடெட் ஆர்ட்ஸ், லஸ் கார்னர், மயிலாப்பூர், சென்னை—4.

Souvenir of the Commonwealth touring team in India

சமீபத்தில் இந்தியாவுக்கும் காமன் வெல்த் கோஷ்டிக்கு மிடையே நடந்த கிரிக்கெட் போட்டியைப் பற்றிய விவரங்கள் இதில் அடங்கியிருக்கின்றன. மேற்படி போட்டியில் கலந்து கொண்ட பிரபல ஆட்டக்காரர்களின் படங்களும் இதில் வெளியாகி யிருக்கின்றன. விலை ரூ. 1.

The Madras Directory 1949—50

ஏறக்குறைய 1000 பக்கங்கள் கொண்ட இந்தப் புத்தகத்தில் இம்மாகாணத்தில் உள்ள தொழிற்சாலைகள், சொசைடிகள், நாணய மாற்று, தந்தி தபால் விவரங்கள், வெளிநாட்டில் உள்ள முக்கிய வியாபாரக் கம்பெனிகள் முதலியவற்றைப் பற்றிய விவரங்கள் தொகுத்துக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. வர்த்தகர்களுக்கு மிக்க உதவியாயிருக்கக் கூடிய புத்தகம். விலை ரூ. 10. விலாசம்: ஸ்ரீ வி. பாலகிருஷ்ணன். 117, அரண்மனைக்காரத் தெரு, சென்னை.

பாஸ்கர ஹிந்துஸ்தானி (முதல் வாசகம்)

ஆசிரியர் உதவி இல்லாமலேயே ஹிந்துஸ்தானியைக் கற்றுக் கொள்ளக் கூடிய முறையில் எழுதப்பட்ட புத்தகம். ஹிந்தி இலக்கணத்தில் உள்ள சில சிக்கலான விதிகளைத் தெளிவாக்குவதற்காக ஆசிரியர் கையாண்டிருக்கும் முறை பாராட்டத்தக்கது. விலை அணா 8. எழுதியவர்: பி. எம். ராமஸ்வாமி; பிரகாசம்: ஹிந்துஸ்தானி பிரசாரப் பதிப்பகம், செவ்வாய்ப் பேட்டை, சேலம்.

அதிகாரியின் திகைப்பு

ஹிட்லர் சர்வாதிகார ஆட்சி நடத்திக் கொண்டிருந்தபோது, கோயரிங் ஒரு நாள் தம் காரில் ஒரு கிராமத்தின் வழியே போய்க்கொண்டிருந்தார். வழியில் ஒரு வயலில் அழகும் திடசாலியுமான பெண் ஒருத்தி வேலை செய்வதைக் கண்டார். அவர் மூளை தீவிரமாக வேலை செய்தது. அவளைத் தம் அதிகாரிகளில் ஒருவருக்கு மணம் செய்துவைத்தால், அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளைகள் மிக்க பலசாலிகளாய் இருப்பார்கள், நாட்டிற்குப் பயன்படுவார்கள் என்று நினைத்தார். உடனே அவளைக் கூப்பிட்டார். அவள் வந்ததும் தாம் யாரென்பதை விளக்கிவிட்டு, அவள் ஊர், பெயர் யாவற்றையும் விசாரித்தார். பிறகு ஒரு கடிதம் எழுதி அவளிடம் கொடுத்து. "நீ இக்கடிதத்தை எடுத்துக் கொண்டு நாளைக்கு இராணுவ ஆபீஸிற்குப் போ!" என்று ஆணையிட்டார். அப் பெண் வீட்டிற்கு வந்தாள். வீட்டில் பாட்டி ஒருத்தி அவளுக்குத் துணையாக இருந்தாள். பாட்டியிடம் அப் பெண், "எனக்கு அங்கே போக ரொம்ப வெட்கமாயிருக்கிறது. அங்கு ஆண்பிள்ளைகள் நிறைய இருப்பார்கள். ஆகையால் நீ இதை எடுத்துக் கொண்டு இராணுவ ஆபீஸிற்குப் போ!" என்றாள். இருவரும் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள். ஆகையால் கடிதத்தில் உள்ளதை அறியவில்லை.

பாட்டி அக்கடிதத்தை எடுத்துக் கொண்டு இராணுவ ஆபீஸிற்குச் சென்றாள். கடிதத்தின் மேல் எந்த ஆபீஸரின் பெயர் எழுதப்பட்டிருந்ததோ, அந்த ஆபீஸரிடம் அவளை அழைத்துக் கொண்டு சென்றனர். கடிதத்தைப் படித்த ஆபீஸர் தம் முன்னால் நிற்பவளைப் பார்த்தார். சுமார் எழுபது வயது சென்ற அக் கிழவியைக் கண்டு மிரள மிரள விழித்தார். அக்கடிதத்தில் எழுதியிருந்ததாவது:

இதைக் கொண்டு வருபவளை நீர் தாமதமின்றியே மணம் செய்து கொள்ளவும். நாட்டின் நன்மைக்காகவே நான் இதைச் சொல்லுகிறேன். உத்தரவுக்குக் கீழ்ப்படியவும்.

இப்படிக்கு,

ஹெர்மன் கோயரிங்.

சொல்லும் பொழுது யசோதராவின் கண்கள் பிஜருப்தன் மீது லயித்திருந்தன.

சிறிது நேரத்துக் கெல்லாம் யசோதரா தன் பார்வையை சுவேதாங்கன் பக்கம் திருப்பினாள். சுவேதாங்கனின் முகம் களையிழந்து வெளுத்துக் காணப்பட்டது. சுவேதாங்கனுடைய முகத்தைப் பார்த்த மாத்திரத்திலேயே ஒன்று அவன் மிகவும் மனம் சோர்ந்து போயிருக்கவேண்டும் அல்லது அவனுடைய உடல்நிலை சரியில்லாமல் இருக்க வேண்டும் என்பது தெளிவாக விளங்கியது.

யசோதரா சுவேதாங்கனை அணுகி அவன் கையைப் பிடித்துக் கொண்டு, "ஸ்வாமி! உங்களுக்கு உடம்பு சரியா யில்லையா, என்ன? என்னவோ போலிருக்கிறீர்களே!" என்று கேட்டாள். அடுத்த கணமே சுவேதாங்கனின் நாடியைப் பிடித்துப் பரிசோதிக்கலானாள். பிறகு, "இல்லை உங்களுக்கு உடம்புக்கு ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் உங்கள் முகம் இவ்வளவு சோபையிழந்து வெளுத்துக் காணப்படுகிறதே, ஏன்?" என்று கேட்டாள்.

"யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்ததால் சுவேதாங்கனுக்கு இன்று வரை மூச்சு விடக்கூட நேரம் இல்லை. சிறிதும் களைப்பாறுமல் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாய் இருந்து விட்டான். ஒரு வேளை அதனால் களைத்துப்போய்க் களையிழந்து காணப்படுகிறானே, என்னவோ!" என்றான் பிஜருப்தன். பிறகு சுவேதாங்கனைப் பார்த்து, "சுவேதாங்கா! இன்று மத்தியானம் முழுவதும் நீ நன்றாகத் தூங்கு. அப்பொழுதுதான் உன் உடம்பு சரியாகும். சுறுசுறுப்பும் ஏற்படும்" என்றான்.

யசோதரா சுவேதாங்கனின் கையைப் பிடித்துக் கொண்டு நின்றாள். சிறிது சிறிதாகச் சுவேதாங்கனின் வெளிறிய முகத் தோற்றம் மாறியது; பழைய நிலைமைக்கு வந்தது. அவன், "இல்லை, இல்லை! எனக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லை. கொஞ்சம் களைத்துப் போய் விட்டேன். அதனால்தான் அப்படித் தோன்றுகிறது. கொஞ்சம் களைப்பாறினால் எல்லாம் தானுகச் சரியாகிவிடும்" என்றான்.

"வாருங்கள், சிற்றுண்டி அருந்துவோம்" என்று சொல்லி எழுந்தார் பிருத்யுன்றுயர்.

உடனே எல்லோரும் தங்களுக்கென்று போடப்பட்ட ஆசனத்தில் அமர்ந்து லோகாபிராமமாகப் பேசியவாறே சிற்றுண்டி அருந்தலாயினர். (தொடரும்)

கூடாகக் கண்டாள். பீஜகுப்தனுடைய அறிவாற்றலையும் மேதையையும் தகர்க்க முடியாத தர்க்கம் புரியும் திறமையையும் கண்டு யசோதரா பிரமித்துப் போய் விட்டாள். பீஜகுப்தனிடம் தனக்கு ஏற்பட்டிருந்த சிரத்தை சிறிது சிறிதாகப் பக்தியின் உருக் கொள்ளுவதுபோல அவளுக்குத் தோன்றியது. அவள் சிறிது நேரம் மௌனமாக பீஜகுப்தன் சொன்ன விஷயங்களைப் பற்றிச் சிந்தித்தாள். பிறகு, "ஸ்வாமி! ஒரு விஷயம். நான் கேட்கும் கேள்வி உங்களுக்குச் சற்று அதிகப் பிரசங்கித்தனமாகப் படலாம். இருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் என்னை மன்னித்தருள வேண்டும். ஆமாம், தாங்கள் இதெல்லாம் எங்கே எப்பொழுது படித்தீர்கள்?" என்று ஆவலுடன் கேட்டாள்.

அவள் கேட்ட கேள்வி உண்மையிலேயே அதிசயமான கேள்விதான். ஆனால் பீஜகுப்தன் அதை அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. "யசோதரா தேவி! உலகம் என்னும் பள்ளியிலே, அநுபவம் என்னும் கல்வி முறையைக் கொண்டு சூழ்நிலையாகிய உபாத்தியாயர் எனக்கு இவற்றையெல்லாம் கற்பித்தார்!" என்று உருவகப்படுத்திக் கூறினான். அடுத்தகணமே, "அம்மணி! சிற்றுண்டிக்கு நேரமாகிவிட்டாற் போலிருக்கிறது. மதிப்புக்குரிய மிருத்யுஞ்ஜயர் நமக்காக ஒருவேளை காத்திருப்பார். நாம் புறப்பட்டுப் போவது நல்லதல்லவா?" என்று சொல்லி மாளிகையை நோக்கி நடந்தான். யசோதராவும் திரும்பி பீஜகுப்தனுடன் கூடவே சென்றாள்.

பீஜகுப்தன் மகிழ்ச்சியுடன் இல்லை என்பதை அவனுடைய முகத் தோற்றம் தெளிவாக எடுத்துக் காட்டியது. அதை உணர்ந்த யசோதரா, "ஸ்வாமி! தாங்கள் என் என்னவோ போலிருக்கிறீர்கள்? தங்கள் முகத்தைப் பார்த்தால் தாங்கள் ஏதோ வருத்தமுற்றிருப்பதாகத் தோன்றுகிறதே! தங்களுடைய வருத்தத்துக்கு என்ன காரணம் என்று தயவுசெய்து சொல்லுவீர்களா?" என்று கேட்டாள்.

பீஜகுப்தன் ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டு, "உண்மைதான், யசோதரா தேவி! நான் வருத்தமுற்றுத்தான் இருக்கிறேன். ஆனால் என்னுடைய வருத்தத்தின் காரணத்தைக் கேட்டுத் தாங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? நீங்கள் என் வருத்தத்தின் காரணத்தை அறிந்து கொள்ளாமல் இருப்பதே தான் நல்லது" என்றான்.

"என்ன, அந்தக் காரணம் அவ்வளவு இரகசியமானதா? யாரிடமுமே சொல்லக் கூடியதில்லையா?" என்று ஆவலுடன் கேட்டாள் யசோதரா.

"இல்லை, இல்லை! என்னுடைய வாழ்க்கையில் எந்த விஷயத்துக்குமே ஒளிவு மறைவு கிடையாது. எதையுமே நான் இரகசியம் என்று ஒளித்து மறைத்து வைத்ததில்லை. அதிசயமான விஷயங்களாக இருந்தால் அல்லவா ஒளிவு மறைவு வேண்டும்? ஒரு விஷயத்தை இரகசியமாக ஒளித்து மறைத்து வைப்பது என்றால் அது அச்சத்துக்கு அறிகுறி. மனிதன் அச்சமுற்றால், அது அவன் குற்றவாளி என்பதற்கு அடையாளம். நான் செய்யும் செயல்கள் அனைத்தையும் நான் உசிதமானவை என்றே எண்ணுகிறேன். ஆகவே அவற்றை மூடி மறைத்து வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் எனக்கு ஏற்படுவதில்லை. இருந்தாலும் என் துயரத்தின் காரணத்தை உங்களுக்கு நான் சொல்ல விரும்பாததற்கு ஒரு காரணம் இருக்கிறது. என் மனத்துயரை எடுத்துச் சொல்லி நான் பிறருடைய மனதைப் புண்படுத்துவானேன்? என்ன, நான் சொல்வது நியாயம்தானே?" என்றான் பீஜகுப்தன்.

யசோதரா அதற்குமேல் ஒன்றும் கேட்கவில்லை. அவள் மௌனமாகவே பீஜகுப்தனுடன் நடந்தாள். 'பீஜகுப்தன் வருத்தமுற்றிருக்கும் விஷயத்தின் காரணத்தைக் கிளறிக் கேட்டு நாம் இன்னும் அதிகமான மனவருத்தத்துக்கு அவனை ஆளாக்கிவிட்டோமோ?' என்ற எண்ணம் அவளுடைய உள்ளத்தை வாட்டியது. சிறிது நேரத்துக்கெல்லாம் இருவரும் மாளிகையை அடைந்தனர். மதிப்புக்குரிய மிருத்யுஞ்ஜயரும் சுவேதாங்கனும் இருவரையும் எதிர்பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தனர். சிற்றுண்டிக்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தும் முன்பே முடிந்திருந்தது. யசோதரா ஓடிப்போய் மிருத்யுஞ்ஜயரின் கழுத்தைக் கட்டிக் கொண்டு, "அப்பா! இன்று பீஜகுப்த மன்னர் எனக்கு எவ்வளவு விஷயங்கள் சொன்னார், தெரியுமா? அதைக் கேட்டு அக்ஞான சாகரத்தில் மூழ்கியிருந்த என்னுடைய கண்கள் திறந்து கொண்டன. என்னுடைய பழைய கொள்கைகளும் கோட்பாடுகளும் ஆதாரமற்றவை என்று அவர் நிரூபித்து விட்டார். பீஜகுப்த மன்னர் மகா மேதாவி என்பதை இன்றுதான் நான் உணர்ந்தேன்" என்றாள். அதைச்

நேரம் வரை பேசாமல் மௌனம் சாதித்தான். பிறகு, "யசோதரா தேவி! இயற்கையின் சூழ்நிலையிலேயே வளர்ந்து வாழும் மனிதர்கள் மிகவும் பாக்கிய சாலிகள் என்பது உங்கள் நினைப்புப்போலும். ஆனால் ஒரு விஷயத்தை மட்டும் நீங்கள் நினைவு வைத்துக் கொள்ள வேண்டும். மனிதன் தன்னுடைய ஸ்திதியில் ஒரு பொழுதுமே திருப்தி கொள்ளுவதில்லை. நீங்கள் அரண்மனையில் பிறந்து வளர்ந்திருக்கிறீர்கள். ஆகவே உங்களுக்கு இந்த அரண்மனை வாழ்வில் ஒரு இன்பம் இருப்பதாகத் தோன்றவில்லை. அரண்மனை வாழ்வு உங்களுக்கு ஒரு வாழ்வாகவேகூடத் தோன்றவில்லை. அதில் உள்ள சௌந்தரியமும், சௌகரியமும் சுகமும் உங்களுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. அரண்மனை வாழ்வு உங்களுக்குச் சலித்துவிட்டது; அலுத்து விட்டது. அது மட்டும் அல்ல; இந்த அரண்மனை வாழ்வை விட்டொழித்து விட்டு எங்கேயாவது கண்காணாத இடத்தில் சென்று அமைதியாகக் காலம் கழிக்க மாட்டோமா என்ற எண்ணம் உங்கள் உள்ளத்தில் எழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

"இயற்கையுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட இந்தக் குடிசைகளிலேதான் இன்பம் இருப்பதாகத் தாங்கள் கருதுகிறீர்கள். 'கிராமங்களில் உள்ள திறந்த வெளியிலே, நாமும் கால் நடைகளோடு கால் நடைகளாகச் சேர்ந்து கொண்டு இயற்கையின் எழிலைப் பருகிய வண்ணம் ஆனந்தமாக இன்ப வாழ்வு வாழ மாட்டோமா?' என்ற இன்பக் கற்பனையிலே லயித்து உங்கள் உள்ளத்தையே கூடப் பறிகொடுத்து விடுகிறீர்கள். தாங்கள் அப்படி நினைப்பது நியாயம்தான். இயல்புங்கூட.

"ஆனால் கொஞ்சம் இந்தக் கிராம வாசிகளைக் கேட்டுப்பாருங்கள். அவர்கள் என்ன சொல்லுவார்கள், தெரியுமா? 'சுகம் என்று ஒன்று இருந்தால் அது அரண்மனை வாழ்விலேதான் இருக்கிறது. கை பிடிக்கக் கால் பிடிக்க என்று நம்மை எத்தனை வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் சூழ்ந்திருப்பார்கள்! அறுசுவை உண்டிக்கு அங்கே என்ன குறைச்சல்? ஆகா! அரண்மனை வாழ்வில்தான் எத்தனை இன்பம்! அரண்மனை வாழ்வுக்கு ஈடாகாது எந்த வாழ்வும்!' என்று சொல்லிச் 'சுள்' கொட்டுவார்கள். கண்களை மூடிக் கொண்டு அந்த இன்பக் கற்பனையிலே ஆழ்ந்து லயித்துக்கூடப் போய் விடுவார்கள். அது போகட்டும், இந்த அரண்மனைகளை நிர்மாணித்த நம் பாட்டனாரோ முப்பாட்டனாரோ ஒரு காலத்தில் கட்டாயம் கிராமவாசிகளாகத்தான் இருந்திருப்பார்கள். அவர்கள் கிராமங்களை விட்டு நகரங்களை நிர்மாணித்தார்களே, எதற்காக? இயற்கையில் உள்ள அவலட்சணத்தையும் அசௌகரியங்களையும் செயற்கையின் உதவியைக் கொண்டு போக்கிக் கொள்ள முடியும் என்ற ஒரே நோக்கத்தில்தானே அவர்கள் அப்படிச் செய்திருக்க வேண்டும்? இந்த உத்தியான வனத்தின் அழகிலே மனதைப் பறிகொடுத்து மகிழ்ந்திருக்கிறீர்களே, இதுவும் செயற்கைதான் என்பதைத் தாங்கள் மறந்துவிடக் கூடாது.

"இயற்கையைக் காண வேண்டும் என்றால் காடுகளுக்குத்தான் போகவேண்டும். அங்கே ரத்தவெறி பிடித்த சிங்கங்கள் ரத்த தாகத்தைத் தணித்துக் கொள்ளுவதற்காக நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு இரை தேடிய வண்ணம் அலைந்து திரிகின்றன. அடர்த்தியாக வளர்ந்திருக்கும் புதர்களிலே நஞ்சு தோய்ந்த பெரும் பெரும் நாகங்கள் காரணமின்றி மனிதர்களைக் கடித்துக் கால தேவனின் கையில் ஒப்படைப்பதற்காகக் காத்துக் கிடக்கின்றன. இந்தச் செயற்கை வாய்க்கால்களை விட்டுத் தள்ளுங்கள். இயற்கையின் எழிலான காட்டாறுகளைப் பாருங்கள். முதலைகளைப் போன்ற மாபெரும் கொடிய ஜந்துக்கள் மனித உணவை உண்ணும் ஆசையில், 'யாராவது தன் பக்கம் வரமாட்டார்களா? நாம் அவர்களைப் பிடித்து விழுங்க மாட்டோமா?' என்று தண்ணீரில் மறைந்து தவம் கிடக்கின்றன. இன்பமும் எழிலும் இயற்கையில் இருக்கிறதா, அல்லது செயற்கையில் இருக்கிறதா என்பதை அப்பொழுதுதான் தாங்கள் கண்கூடாகக் காண முடியும்" என்றான்.

பிஜகுப்தன் மேலே மேலே சொல்லிக் கொண்டே போனான். யசோதரா வியப்புடன் வாயைத் திறந்தவாறு அவன் சொல்வதையே கேட்டுக் கொண்டிருந்தாள். இது வரை அவள் பிஜகுப்தனை நற்குணங்கள் படைத்த உன்னத புருஷனாக மட்டும்தான் எண்ணியிருந்தாள். அவனுடைய பேச்சைக் கேட்டதும், அவன் நற்குணங்கள் படைத்த உன்னத புருஷன் மட்டும் அல்ல; உயர்ந்த மூளையும் படைத்தவன் என்பதைக் கண்

தன் ஒருவனை ஒருவன் அடித்துக் கொன்று சாவதில்லை. ஆனால் மிருகங்களும் பறவைகளும் இயற்கை அளிக்கும் உணவைத்தான் நம்பி வாழுகின்றன. பூமியில் உள்ள புழுப் பூச்சிகளைத் தின்று பறவைகள் தங்கள் வயிற்றை நிரப்பிக் கொள்கின்றன. மிருகங்களில் எத்தனையோ ஒன்றை ஒன்று அடித்துக் கொன்று தின்கின்றன. இந்தப் புறாக்களின் ஜன்ம விரோதியான பருந்துகள் இவற்றின்மீது பாய்கின்றனவே, அப்பொழுது இவற்றின் கதிகெட்ட நிலைமையைப் பார்க்க வேண்டும்! 'இந்தப் புறாக்களும் எவ்வளவு கவலைப்பட்டு உழலுகின்றன? எத்தனை தர்ம சங்கடமான நிலைமையில் சிக்கிச் சிரமப்படுகின்றன?' என்பதைப் புறாவாகப் பிறந்து பார்த்தால்தான் உணர முடியும்! ஏதோ வாயில் வந்ததைச் சொல்லிவிட்டால் ஆயிற்று?" என்றான்.

யசோதராவுக்கு வியப்பு மேலிட்டது. அவள் பீஜகுப்தனையே வைத்த கண் வாங்காமல் பார்க்கலானாள். பீஜகுப்தன் சிறிது



அதைக் கேட்டு யசோதரா பிரமித்து விட்டான். அவனுடைய மாளிகையில் ஒரு அழகிய உத்தியான வனம் இருந்தது. அங்கே அவன் இயற்கையின் எழிலைக் கண்டிருந்தான்; பருகி மகிழ்ந்திருந்தான். அதன் எழிலில் தன் உள்ளத்தையே பறி கொடுத்தும் இருந்தான். ஆனால் இன்றுபீஜுருப்தனுடைய தகர்க்க முடியாத தர்க்கங்களைக் கேட்டதும், 'இத்தனை நாள் நாம் வீண் பிரமையில் அல்லவா உழன்றிருக்கிறோம் போலிருக்கிறது!' என்று எண்ணினான். சற்றுத் தூரத்தில் ஒரு செயற்கை நீர்வீழ்ச்சி இருந்தது. அந்த நீர் வீழ்ச்சியிலிருந்து கிளம்பி ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலில், புறாக்களின் கும்பல் இறக்கைகளை அடித்துக் குளித்துக் கொண்டிருந்தது. அதைக் கண்ட யசோதரா அந்தப் பக்கம் சென்றான். பீஜுருப்தனும் அவனுடன் கூடவே சென்றான். மந்திர வசப்பட்டவன்போல யசோதரா அந்தக் கண் நிறைந்த காட்சியைக் கண்டு களித்துக் கொண்டிருந்தான். அவன் மென்மையான குரலில், "ஆகா! இந்தப் புறாக்களின் இன்ப வாழ்க்கையை என்னவென்று சொல்லுவது? இந்தப் புறாக்கள் ஒன்றுக்கொன்று எவ்வளவு ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருக்கின்றன? இவற்றினிடம் மனிதர்களிடத்தில் காணப்படும் பொறாமை, புகைச்சல், வெறுப்பு, விருப்பு, தீய நோக்கங்கள் போன்ற கெட்ட குணங்கள் மருந்துக்குக்கூட இருப்பதாகத் தெரியவில்லை. 'நமக்கும் இறக்கை முளைக்கக்கூடாதா? நாமும் இந்தப் புறாக்களின் கும்பலோடு கும்பலாகப் போய் ஆனந்த வாழ்க்கை வாழக்கூடாதா?' என்றுதான் தோன்றுகிறது" என்றான்.



யசோதராவின் ஞான ஸ்வபாவத்தைக் கண்ணுற்ற பீஜுருப்தன் 'கடகட' வென்று நகைத்தான். "யசோதரா தேவி! நீங்கள் மட்டும் புறாவாகப் பிறந்திருந்தால் 'மனிதனாகப் பிறக்காமற் போனேனே!' என்றுதான் எண்ணி வருந்துவீர்கள். இது உலகத்தின் இயல்பு. இந்தப் புறாக்கள் ஆனந்தமாகக் கவலையற்று வாழுகின்றன. இவற்றுக்குச் சத்துருக்களே கிடையாது என்று நினைத்தால் நீங்கள் வீண் பிரமையில் உழலுகிறீர்கள் என்றுதான் நான் சொல்லுவேன். அபிலாஷை பூர்த்தியுறுவதைத்தான் நாம் சுகம் என்று சொல்லுகிறோம். அபிலாஷை பூர்த்தியுற்று விட்டால் அதை நாம் சுகம் என்கிறோம். இந்தப் புறாக்களின் ஆசைகள் அனைத்தும் பூர்த்தியுற்று விடுகின்றன என்று தாங்கள் எண்ணுகிறீர்களா? முதலாவதாக 'இவற்றுக்கு ஆசையோ அபிலாஷையோ ஏற்படுவது உண்டா?' என்று நான் கேட்கிறேன். இந்தக் கேள்விக்குச் சரியான பதில் கண்டு பிடிப்பது கடினம்.

"ஆனால் இந்த மிருகங்களையும் பறவைகளையும்விட மனிதன் எவ்வளவோ மடங்கு மேலானவன் என்பதை ஐயந்திரிபுக்கு இடமின்றிச் சொல்லலாம். ஏனெனில் மனிதனுடைய உள்ளத்திலே ஆசைகள் எழுவது உண்டு. மனிதன் தன் உள்ளத்தில் எழும் அந்த ஆசைகளைப் பூர்த்தி செய்துகொண்டு சுகம் அடைகிறான். மனிதன் ஒரு கர்த்தா; கடமைகளைச் செய்ய வேண்டியவன். பிறந்து கையைக் கட்டிக்கொண்டு எவ்வித வேலையும் இன்றிச் சோம்பேறி வாழ்க்கை வாழ்ந்து சாவதற்காக அவன் சிருஷ்டிக்கப்படவில்லை. கடமைகளைக் கருத்துடன் செய்வதற்காகவே அவன் படைக்கப்பட்டிருக்கிறான். மிருகங்களும் பறவைகளும் உணவுக்காக எவ்வாறெல்லாம் சண்டையிட்டுக் கொண்டு சாகின்றன, தெரியுமா?

"ஆனால் மனிதன் தன் உணவுக்காக என்ன செய்கிறான் என்பதை நாம் இங்கே கவனிக்க வேண்டும். அவன் தன் உணவுக்காக வேண்டி நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கிறான். உழுது பயிரிட்டுத் தனக்கு வேண்டிய உணவை உற்பத்தி செய்து கொள்கிறான். உணவுக்காக மனி


கட்டிப் பிச்சைக் குழலினால் அவற்றின் மீது தண்ணீரை அடித்துக் கோடை காலங்களில் தன் அறையை எப்பொழுதும் 'குளு குளு' வென்று இருக்குமாறு செய்துகொண்டு விடுகிறான். அப்புறம் கோடை வெப்பத்தினால் அவனுக்கு எந்த விதமான சிரமும் இழைக்க முடிவதில்லை. மனிதன் தன்னுடைய செயற்கைச் சாமர்த்தியத்தின் மூலம் கடுங் கோடையிலும் இளவேனிற் காலத்தின் இன்பத்தை நுகருகிறான் என்றால் அவனுடைய செயற்கையின் பெருமையை என்னவென்பது? இயற்கை மனிதனின் சௌகரியத்தைப் பார்ப்பதில்லை. அதனால்தான் அதை அபூர்ணமானது என்று சொல்லவேண்டியிருக்கிறது" என்றான் பீஜகுப்தன்.

"ஆகா, இதோ பாருங்கள்! இந்தப் புஷ்பங்கள்தான் எவ்வளவு அழகானவை! எவ்வளவு மென்மையானவை! மனதை மயக்கும் மணம் இவற்றுக்கு எங்கிருந்துதான் வந்ததோ, தெரியவில்லை! அதோ காது கொடுத்துக் கேளுங்கள்! எங்கிருந்தோ கண்களுக்குப் புலனாகாத இடத்திலிருந்து மிதந்து வரும் இன்னிசையின் இனியநாதம் காதுக்கு எவ்வளவு இனிமையாயிருக்கிறது! மனதை மயக்கி எங்கெங்கெல்லாமோ இனந்தெரியாத இடங்களுக்கெல்லாம் அல்லவா இழுத்துச் செல்லுகிறது, இந்தத் தெய்வீக சங்கீதம்! குயிலின் குரலில்தான் என்ன இனிமை! என்ன குழைவு! குயிலின் குரலிலே கருணைப் பிரவாகம் அல்லவா பெருக்கெடுத்து ஓடுகிறது!" என்றாள் யசோதரா.

"என்ன சொன்னீர்கள்? இந்தப் புஷ்பங்கள் அழகாயிருக்கின்றனவா? மென்மையாக இருக்கின்றனவா? ஆம், ஆம்! நீங்கள் சொல்லுவது உண்மைதான். இந்தப் புஷ்பங்கள் அழகாகவும் மென்மையாகவும் இருக்கின்றன என்பது என்னவோ உண்மைதான். ஆனால் இவற்றுடன் முட்களும்கூட இருக்கின்றனவே! அதைத் தாங்கள் கவனிக்கவில்லையா? அதுமட்டுமா? எத்தனையோ கோடானு கோடி சின்னஞ் சிறு சிறுயிர்கள் இந்தப் புஷ்பங்களுக்குள்ளே குடி புகுந்திருக்கின்றன. அவற்றைக் கணக்கு எடுத்துச் சொல்லுவது என்பது இலேசான காரியம் இல்லை. இவற்றின் மென்மையையும் மணத்தையும் பற்றி ஒரு வார்த்தை! அவை நிரந்தரமானவையல்ல; வெகு சீக்கிரமே கசங்கிவிடக் கூடியவை. அப்படியிருக்கும்பொழுது அந்த மணம் இருந்துதான் என்ன பிரயோஜனம்? தனிமையில் இவை தம் தம் சுயமணத்தை வீணாகப் பாழ்படுத்திக் கொண்டு விடுகின்றன. இவற்றினால் யாருக்கும் எந்த விதமான பிரயோஜனமும் ஏற்படுவதில்லை.

"இந்தப் பட்சி ஜாலங்கள் பாடும் இன்னிசையிலே, அவற்றின் குரல்கள் காதுக்கு இனிமையாக ஒலிக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. அவற்றின் இன்னிசை வழக்கில் உள்ள மொழி ஒன்றில் இல்லாததால் பாவ பூர்ணமாக இல்லை. இனிய சங்கீதத்துக்கு வேண்டிய ஆரோகண அவரோஹணங்களும் பட்சி ஜாலங்களின் பாட்டில் இருப்பதில்லை. அம்மாதிரி பாவப் பிரதானமோ, ஆரோஹண அவரோஹணமோ இல்லாத சங்கீதம் என்ன சங்கீதம்? அது போகட்டும். பட்சி ஜாலங்கள் இசைக்கும் இன்னிசையிலே ஸப்த ஸ்வரங்களும் ஒன்று போலவேதான் ஒலிக்கின்றன. ஆகவேதான் பட்சி ஜாலங்களின் இன்னிசையைக் காட்டிலும் மனிதன் பாடும் சங்கீதம் எத்தனையோ படி உயர்ந்ததாகத் தோன்றுகிறது. குயில் பாடும் பாட்டிலே பஞ்சம ஸ்வரம் மட்டும்தான் கேட்கிறது. ஆகவே அதை அதிக நேரம் கேட்க முடிவதில்லை. மனம் சலித்துவிடுகிறது. குயில் என்ன பாடுகிறது என்பது யாருக்கு என்ன தெரியும்? பொருள் புரியாத பாட்டு என்ன பாட்டு? ஒருவேளை குயில் தன் மனம்போக்கில் ஒருவிதப் பொருளும் இன்றியே பாடுகிறதோ, என்னவோ? யார் கண்டது?" என்றான்.





இருபத்துநான்காம் அத்தியாயம்

ஆனந்த வாழ்க்கை

யசோதரா இயற்கையின் எழிலைப் பற்றி அன்றுதான் முதல் தடவையாக அம்மாதிரிப் புதிய வாதம் ஒன்றைக் கேட்டாள். பீஜகுப்தன் அதைச் சொன்ன முறை முற்றிலும் புது விதமாக இருந்தது; மனதைக் கவரக்கூடிய வகையிலும் அமைந்திருந்தது. அவனுடைய தர்க்கம் அழகாயிருந்தது. அத்துடன் அது எதிர்வாதம் புரிந்து வெற்றிகொள்ள முடியாத வகையிலும் அமைந்திருந்தது. ஆகவேதான் அவள் வியப்புடன், "இயற்கை அபூர்ணமானதா?" என்னும் கேள்வியைக் கேட்டாள்.

"ஆம், இயற்கை அபூர்ணமானதுதான்! இயற்கை அபூர்ணமாயிருப்பதனால்தான் மனிதன் செயற்கையைச் சரண் அடைந்தான். பசும்புல் மென்மையானதுதான்; அழகானதும்தான். ஆனால் அதில் ஒருவித ஈரப் பசை இருக்கிறது. புழுப்பூச்சிகள் வாசம் செய்கின்றன. ஆகையினால்தான் மனிதன் 'மெத்'தென்று மென்மையாக இருக்கும் பஞ்சினை மெத்தைகளைத் தயார் செய்து கொண்டான். அவற்றில் ஈரப் பசை இருப்பதில்லை. புழுப் பூச்சிகள் வாசம்செய்வதில்லை. அத்துடன் அவை பசும் புல்லைவிட எவ்வளவோ மடங்கு அதிக மென்மையானவையாகவும்கூட இருக்கின்றன. இயற்கையின் எழில் மிக்க இடங்கள் என்று சொல்லுகிறீர்களே, இந்த இடங்களின் அவலட்சணத்தைக் குளிர் காலத்தில் பார்க்கவேண்டும். அப்பப்பா! என்ன கோரம்! என்ன பயங்கரம்! எங்கு பார்த்தாலும் மூடுபனி ஒரே மயமாக மூடியிருக்கும். சகிக்க முடியாத சாரல் காற்று வேறு வீசும். எண்சாண் உடலை ஒரு சாணாகக் குறுக்கிச் சுருட்டி மடக்கிக் கொண்டு படுத்தாலும் இந்தப் பாழும் குளிர் விடாது. கடும் கோடைகாலமாயிருந்து விட்டாலோ கேட்க வேண்டியதில்லை. அனலைக் கக்கும் வெக்கைக் காற்று வீசும். உடலை வறட்டி வதக்கி எடுத்துவிடும்.

"இயற்கையின் இம்மாதிரியான அசௌகரியங்களிலிருந்து தப்புவதற்காகத்தான் மனிதன் மாளிகைகளை நிர்மாணித்துக் கொண்டான்; வீடுகளைக் கட்டிக் கொண்டான். அந்த மாளிகைகளுக்குள் வடக்குத் திக்கிலிருந்து வரும் காற்றை வரவொட்டாமல் தடுத்துக் குளிர்காலத்திலே கும்மட்டி அடுப்பைப் பற்றவைத்து எப்பொழுதும் அறையைக் 'கண கண' வென்று இருக்குமாறு வைத்துக் கொள்ளுகிறான். அப்புறம் அவனுடைய அறையை அண்டுவதற்குக் குளிருக்கு என்ன, பைத்தியமா பிடித்திருக்கிறது? வெட்டிவேர், விளாமிச்சை வேர் முதலியவற்றினால் தட்டிகள் செய்து

ளில் ஏறிப்போகக் கையில் காசு இல்லையே! பாபுவுக்கு அழுகைதான் வந்தது. அம்மாவை நினைத்துக் கொண்டே இன்னும் கொஞ்சம் விம்மினான். அம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதினால் என்ன என்று எண்ணினான். ஆனால் அவனுக்கு யார் சிரத்தையுடன் கடிதம் வாங்கிக் கொடுத்து, பென்சிலும் கொடுப்பார்கள்? — இப்படி இன்னும் இருதினங்கள் கழிந்தன.

ஒரு நாள் காலை பாபு கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு ஒரு கல்லின்மீது உட்கார்ந்திருந்தான். "பள்ளிக்கூடம் திறக்க இன்னும் இரண்டு நாள்தான் இருக்கிறது. இப்படி வந்து எங்கேயோ மாட்டிக் கொண்டிருக்கிறோமே" என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

மாமா தன்னைக் காணோமென்று எங்கெங்கெல்லாம் தேடுகிறாரோ? தான் இங்கே வந்து இப்படிக் கஷ்டப்படுவது அம்மாவுக்குத் தெரிந்தால் அவள் எவ்வளவு வேதனைப்படுவாள்! பட்டணத்துக்கு வராமல், பேசாமல் ஊரிலேயே இருந்திருந்தால் இந்தக் கஷ்டம் ஏற்பட்டிராது அல்லவா என்று கூட அவன் யோசித்தான். அப்போது பின்னாலிருந்து "பாபு, இங்கே வா!" என்று இனிய குரல் ஒன்று சுத்தத் தமிழில் கேட்டது. ஆச்சரியத்துடன் குரல்வந்த திக்கை நோக்கிப் பார்த்தான் பாபு. (தொடரும்)

கிட்டு ஒட்டைக் காலணாவாக நூறு சேர்த்து வைத்திருந்தான். அப்போது தீபாவளி வந்தது. அவன் தன்னிடமிருந்த நூறு காலணாவையும் எடுத்துக் கொண்டு கடைக்குப் போனான். வெடி விலையை விசாரித்தான். ஒரு எரோப்ளேன் வெடி ஒன்றேகால் அணா. ஒரு குதிரை வெடி காலணா. 20 பொட்டு வேட்டு காலணா. எத்தனை வெடி வாங்கலாம் என்று அவன் யோசித்தான். கடைசியில் 100 காலணாவுக்கு நூறு வெடியை வாங்கி விட்டான். அப்படியானால் ஒவ்வொரு ரகத்திலும் எத்தனை வெடி வாங்கினான்?

சென்றவாரப் புதிருக்கு விடை: தேசப் படம்

யானைக் குட்டி அனுப்பவும்!

கல்கி மாமாக்கு,

நமஸ்காரம். நேக்கு விளையாடறத்துக்கு ஒரு யானைக் குட்டி வேணும். ரொம்ப தூரத்துலே இருக்கிற ஜப்பான் கொழந்தேளுக்கு நேருமாமா ஒரு யானைக் குட்டி அனுப்பினார்னு கல்கிலே போட்டிருந்த பொம்மேலேந்து தெரிஞ்சுண்டேன். நான் கிட்டக்க இந்தியாவிலெதானே இருக்கேன். நேக்கு ஒரு யானைக்குட்டி அனுப்புங்கோன்னு நேரு மாமாக்குக் கடுதாசு போடறேன்னுட்டு அம்மாகிட்டெ சொன்னேன். அம்மா சொல்றா, நேரு மாமாக்குத் தமிழ் தெரியாதாம். நான் ரெண்டாவதுதான் படிக்கறேன். நேக்கு தமிழ்தான் வரும். நான் என்ன பண்றது மாமா? ராஜாஜி தாத்தாக்கு எழுதலாமான்னு பார்த்தேன். ஆனா அவரோட்டெ கருப்புக் கண்ணாடியைப் பாத்தா, நேக்குப் பயமா இருக்கு. மாமா நீங்க எப்படியாவது நேரு மாமா கிட்டேந்து வாங்கி, நேக்கு ஒரு யானைக் குட்டி அனுப்புங்கோ, மாமா! — ஐயோ, மறந்து போய்ட்டேனே, மாமா! என் தம்பி ராஜுக்கும் ஒரு யானைக் குட்டி அனுப்புங்கோ. இல்லாட்டாக்க அந்த ரவுடி என் குட்டியைப் புடிங்கிண்டு ஓடிப் போயிடுவான். நீங்க ரெண்டு யானைக்குட்டி அனுப்பினாக்கெ நான் பெரியவளா ஆனப்புறம் 'கல்கி' பாப்பா மலருக்கு ரெண்டு யானைக்குட்டி கதை எழுதுவேன். ஜெய் ஹிந்த்!

குமாரி இந்திரா கவுரி.



[இத்துடன் இரண்டு யானைக் குட்டி அனுப்பியிருக்கிறேன். பெற்றுக் கொண்டு பதில் எழுதவும். ஆசீர்வாதம்.

—ஆசிரியர்]



இரு. உனக்குச் சாப்பாடு, சட்டை, டிராயர், குல்லாய் எல்லாம் அவர் தருவார். அவற்றைப் போட்டுக் கொண்டு எங்கள் சர்க்கஸ் கொட்டகையின் முன் வாசலில் நின்று கொண்டு, டிக்கட் வாங்கி உள்ளே வருபவர்களைப் பார்த்து 'குட் ஈவினிங், ஸார்!' என்று சலாம் செய். பலர் பட்டணத்திலிருந்து சர்க்கஸ் பார்க்க இங்கே வருவார்கள். அவர்களில் உன் மாமாவும் இங்கே வரலாம். வந்தால் அடையாளம் கண்டு பிடித்துக் கொண்டு கிளம்பி விடு!" என்றான் டிரைவர்.



அந்த ஏற்பாடு பாபுவுக்குப் பிடித்திருந்தது. "சரி" என்றான். திருட்டுப் பட்டம் கட்டி இரண்டு உதை கொடுத்து வெளியே பிடித்துத் தள்ளாமல் இந்தமட்டிலாவது கருணை காட்டுகிறார்களே என்று அவன் மனதுக்கு மிகவும் ஆறுதலாக இருந்தது.

பிறகு பாபுவுக்குக் கதர்க் குல்லாய், சட்டை, ட்ரவுஸர் கிடைத்தன. ஜோராகப் போட்டுக் கொண்டு அழகு பார்த்தான். அது மட்டுமா? சாப்பாடு, டீ, பழம், ரொட்டி எல்லாம் 'டாண் டாண்' என்று பாபுவைத் தேடிக் கொண்டு வந்தன.

அடுத்த நாள் மாலை ஆறு மணிக்குச் சர்க்கஸ் முதல் ஆட்டம் ஆரம்பமாயிற்று. பாபு அரை மணிக்கு முன் முதல் வாசற்படியில் நின்று கொண்டான். டிக்கட் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைபவர்களைக் கவனித்துப் பார்த்து விட்டு "குட்ஈவினிங் ஸார்!" என்று சலாம் போட்ட வண்ணமாக இருந்தான். தன்னை அடையாளம் கண்டு தன் மாமாவோ, அல்லது அந்த கோபுப் பயலோ வந்து தனக்கு வெகு சீக்கிரம் விடுதலை அளிக்கமாட்டார்களா என்று அந்தப் பிஞ்சு நெஞ்சு மிகவும் ஏங்கிற்று.

6. தந்தி வந்தது

பாபுவின் அம்மா ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தாள். அப்போது தந்திச் சேவகன் வந்து ஒரு தந்தியைக் கொடுத்து விட்டுப் போனான்.

அவள் பரபரப்புடன் வாங்கி மடியில் வைத்துக் கொண்டு அடுத்த வீட்டிற்குப் பறந்தாள்.

பக்கத்து வீட்டுச் சீமாதான் பாபு வீட்டிற்கு வரும் தபால்களைப் படித்துச் சொல்வது வழக்கம். சீமா தந்தியை வாங்கிப் படித்துவிட்டு, "அடே!" என்றான்.

"என்னடா? என்ன எழுதி இருக்கிறது? யார் அனுப்பி இருக்கிறார்கள்?" என்று இன்னும் பரபரப்புடன் கேட்டாள் பாபுவின் தாயார்.

"பட்டணத்திலிருந்து உங்கள் தம்பி அனுப்பியிருக்கிறார். மூன்று நாட்களாகப் பாபுவை அங்கே காணோமாம்! ஒரு வேளை இங்கே வந்து விட்டானா என்று கேட்டிருக்கிறார்" என்றான் சீமா.

"என்ன, என்ன? பாபுவைக் காணோமா? இது என்ன?" என்று இரண்டு மூன்று முறை கேட்டாள் அவள். அதற்குமேல் வார்த்தை வெளி வரவில்லை. அவளுக்கு அழுகை வந்தது.

"பாபு! பாபு! நீ எங்கேடா போய் விட்டாய்? எவ்வளவோ புத்திமதிகள்



சொல்லி அனுப்பினேனே!" என்றெல்லாம் கதறி விட்டான்.

தெருவே புரண்டு வந்து விட்டது. "என்ன மாமி? என்ன?" என்று பலர் கேட்டார்கள். விஷயத்தைத் தெரிந்து கொண்டு, "அடாடா! ஒரே அருமைப் பிள்ளை! அவனு காணுமல் போய் விட்டான்?" என்று அநுதாபம் கூறினர் சிலர். "என்ன இருந்தாலும் சின்னப் பையனைத் தனியாகப் பட்டணத்துக்கு அனுப்பலாமா?" என்றார்கள் வேறு சிலர். "யாராவது பட்சணம் வாங்கிக் கொடுத்து மயக்கி அழைத்துக் கொண்டு போயிருக்கலாம்" என்றார் அடுத்த வீட்டு வெங்கடராமையர். "சமுத்திரத்தை நினைத்தால் எனக்கு என்னமோ ஏதோ என்று பயமாக இருக்கிறது" என்றாள் எதிர்த்த வீட்டுக் குப்புப் பாட்டி.



வந்தவர்கள் எல்லாம் இப்படிச் சொல்லி பாபுவின் அம்மாவை மேலும் கலங்க வைத்தார்கள்.

பாபுவின் பள்ளிக்கூடத்து டிரில் வாத்தியார் எல்லோரைக் காட்டிலும் ரொம்ப வருத்தப்பட்டார். பள்ளிக்கூடம் திறந்ததும் பாபுவைக் 'காப்டன்' ஆகப் போட்டு 'புட்பால் மாட்ச்' ஒன்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அவர் நினைத்திருந்தார். ஆனால் "பள்ளிக்கூடம் திறக்க இன்னும் நாலு நாட்கள் தானே இருக்கின்றன; அதற்குள் பாபு அகப்பட வேண்டுமே?" என்று வருத்தப் பட்டார் அவர். இரண்டாவது பாரம் படித்துக் கொண்டிருந்த எதிர்வீட்டு பாலுவின் வருத்தம் வேறுவிதமாக இருந்தது. அவன் வீட்டு மேலக் கோடித் திண்ணைச் சுவரில் 'நேரு யுவர் சங்கம்' ஒன்றைச் சாக்குக் கட்டியின் உதவியினால் 'திறக்க'த் திட்டம் போட்டிருந்தான். பாபு பட்டணத்திலிருந்து திரும்பியவுடன் அவனைக் கொண்டு திறப்புவிழா நடத்தவும், 'பட்டணத்தில் நான் பார்த்தது' என்பது பற்றிப் பேசச் சொல்லவும் எண்ணியிருந்தான். ஆனால் என்ன ஏமாற்றம்!



• • •

"பாபு இங்கே வரவில்லை; நன்ருகத் தேடிப் பார்க்கவும்" என்று பதில் தந்தி அடிக்க ஏற்பாடு செய்தாள் பாபுவின் தாயார். அகப்பட்டு விட்டால் மறுபடியும் தந்தி மூலம் தெரிவித்து விட்டு, கையோடு அவனை ஊருக்கு அழைத்து வந்து விடவும் என்று தன் தம்பிக்குக் கடிதமும் எழுதிப் போட்டாள். இரண்டு நாட்கள் ஆயின.. பதிலோ, தந்தியோ இல்லை. பெற்ற மனம் துடித்தது. என்ன என்னமோ துர்ச் சொப்பனங்கள் கண்டாள் அவள். பாபு அகப்பட்டால் எல்லைப் பிள்ளையாருக்குக் குறுணி அரிசி போட்டுக் கொழுக்கட்டை செய்வதாக அவள் வேண்டிக்கொண்டாள்.

அவனுக்கு மனம் கேட்கவில்லை. வீட்டை இழுத்துப் பூட்டி விட்டு பட்டணத்துக்குப் புறப்பட்டாள். இனி பாபுவின் நிலைமையைப் பார்ப்போம்.

'குட்சவினிங்' போட்டுப் போட்டுப் பாபுவுக்குக் கையும் வலித்தது; வாயும் அலுத்தது. அவனைத் தேடிக் கொண்டு யாரும் வரவில்லை.

ஓடிப் போய் விடலாமா என்று பார்த்தான். எங்கே போவது? அங்கிருந்து பட்டணத்துக்கு எப்படிப் போவது? எவ்வளவு மைல் இருக்கும்? தப்பித்துக் கொண்டு எங்கேயாவது போகலாமென்ருல் பஸ்



பாபு எங்கே

நவீனன்

உள்ளே இரண்டு மூன்று பேர் உட்கார்ந்து தேநீர் குடித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் நடுவில் இருந்தவர் உருண்டு திரண்டு வாட்ட சாட்டமாக இருந்தார். அவருக்கு முறுக்கு மீசை. கையில் சுருட்டு ஒன்று எரிமலையைப் போலப் புகைந்து கொண்டிருந்தது. தலையிலே கனமான முண்டாசு ஒன்று 'ஜம்'மென்று ஏறி இருந்தது. கனமான கறுப்புக் கோட்டு அணிந்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் வேட்டை நாய் ஒன்று கட்டி யிருந்தது. பாபுவைப் பார்த்து விட்டு அது "ளொள்" என்றது.

முண்டாசு கட்டியிருந்தவர் நாய் குலைக்கும் சத்தத்தைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தார். எதிரே டிரைவருடன் நிற்கும் சிறுவனைப் பார்த்தார். அவரது கண்கள் டிரைவரை நோக்கி "என்ன சேதி?" என்று விசாரித்தன.

டிரைவரும் முதலாளியும் பாபுவுக்குப் புரியாதபடி ஏதோ பேசினார்கள். பாபு இருவரது முகங்களையும் மாறி மாறிப் பார்த்து விட்டு அவர்கள் என்ன சொல்லுவார்களோ, என்னவோ என்று தத்தளித்தான்.

பாபுவுக்கு மின்னல் யோசனை ஒன்று உதித்தது. டிரைவர் அயர்ந்து இருக்கும் சமயம் ஒரே தாவாகத் தாவி சர்க்கஸ் முதலாளிக்கு அருகே துள்ளி ஓடினான். அவருக்கு முன்பு மண்டியிட்டான். "ஸார்! நான் திருடன் இல்லை!" என்று சொல்லி விட்டு தான் பட்டணத்துக்கு வந்தது முதல் காரில் ஏறியவரையில் கண்ணில் நீர் ததும்பச் சொல்லி முடித்தான். "என்னை மாம்பலத்தில் கொண்டு போய் விட்டு விடச் சொல்லுங்கள். என்னை மாமா தேடிக் கொண்டிருப்பார். எங்கள் வீட்டிற்கு முன்னால் ஒரு வேப்ப மரம் இருக்கும்" என்று அடையாளமும் சொன்னான்.

பாபு சொன்னது முதலாளிக்கு அரை குறையாகப் புரிந்தது. அவர் தான் மிருகங்களுக்குக்கூட பாஷை சொல்லிக் கொடுப்பவர் ஆயிற்றே! அவர் பாபுவைக் கூர்ந்து கவனித்தார். சிறுவன் பொய் சொல்ல மாட்டான் என்று முடிவிற்கு வந்தார். டிரைவரிடம் என்னவோ சொன்னார். டிரைவர் அதை பாபுவுக்குப் புரியும்படி விளக்கிச் சொன்னான்:

"இதோ பார், பையா! உன் பேர் பாபுவா? உன்னைக் கொண்டு போய் பட்டணத்தில் விட நேரம் இல்லை என்கிறார் முதலாளி. உனக்கு இஷ்டம் இருந்தால் இங்கேயே சில நாட்கள்



பிரதம மந்திரி ஆட்லி

ரா. நா.

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் தொழிற் கட்சி மீண்டும் ஜயித்து விட்டது. மகத்தான வெற்றியில்லா விட்டாலும் பெரும்பான்மை ஸ்தானங்கள் கிடைத்தன. ஆட்லியின் தலைமையில் மந்திரி சபையும் அமைக்கப்பட்டு விட்டது. மீண்டும் பிரிட்டனின் பிரதம மந்திரியாக ஆட்சி புரியப்போகும் ஆட்லி எம்மாதிரி மனிதர், அவர் எப்படி இந்தப் பதவிக்கு வந்தார் என்பதைக் கவனிப்பது இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமாயிருக்கும்.

இன்று ஆட்லியின் மந்திரி சபையிலிருக்கும் பல மந்திரிகள் தங்களுடைய இளம் பிராயத்தில் வறுமையினால் வாடியதன் பயனாக சோஷலிஸத்தில் பற்றுக் கொண்டவர்கள்.

உதவி பிரதம மந்திரி மாரிஸன் ஒரு பலசரக்குக் கடையில் வேலைக்காரப் பையனாய் இருந்திருக்கிறார். அயல் நாட்டு மந்திரி பெவின் ஆறு வயதில் விவசாயத்தில் ஈடுபட்டுக் கஷ்டப்பட்டிருக்கிறார். பின்னர் ஹோட்டலில் சாப்பாட்டுத் தட்டுகள் சுத்தம் செய்திருக்கிறார்.

ஆனால் ஆட்லி இம்மாதிரி சூழ்நிலையில் பிறக்கவில்லை. அவருடைய தந்தை வருவாய் மிகுந்த வக்கீல். லிபரல் கட்சியைச் சேர்ந்தவர். அவருடைய தாய் கன்சர்வேடிவ் கட்சியை ஆதரிப்பவர். ஆட்லி சர்வகலாசாலைப் பட்டம் பெற்று வக்கீல் பரீட்சையிலும் தேறித் தொழில் நடத்தியவர். அந்தக் காலத்தில் அரசியலைப் பற்றிய அவர் கருத்துக்கள் தற்போதைய லட்சியங்களுக்கு முற்றும் மாறாக இருந்தன. அப்போது அவர் எழுதியதாவது:

"நான் ஒரு கன்சர்வேடிவாக இருந்தேன். கனவான்கள்தான் தேசத்தை ஆளத் தகுந்தவர்கள் என எண்ணினேன். நல்ல குணத்தினால்தான் ஒருவன் பணக்காரனாக முடியும் என நம்பினேன்."

இம்மாதிரி கருத்துக்கள் உள்ளவர் சோஷலிஸத்தில் எப்படி நம்பிக்கை பெற்றார் என்பது ரசமான விஷயம். இந்த மாறுதலுக்குக் காரணம் அவருடைய இருபத்து நான்காம் வயதில் நிகழ்ந்த ஒரு சம்பவம்தான்.

அவரும் அவருடைய தமையனும் லண்டனின் கிழக்குப் பகுதியில் நடைபெறும் ஒரு மாணவர் விடுதியைப் பார்வையிடச் சென்றனர். இந்த விடுதி ஆட்லி படித்த பள்ளிக்கூடத்தாரால் நிர்வகிக்கப் பட்டு வந்தது. அது ஒழுங்காக நடக்கிறதா என்று பார்க்கத்தான் ஆட்லியும் அவருடைய சகோதரரும் சென்றனர். ஏழ்மையை அவர் அதற்கு முன் பார்த்ததில்லை. அந்த மாணவர் விடுதியைச் சுற்றி ஏழை மக்கள் கஷ்ட ஜீவனம் நடத்துவதை நேருக்கு நேராகப் பார்த்தார். "இந்த மாணவர் விடுதியின் நிர்வாகத்தைத் தாங்கள் ஒப்புக் கொள்வீர்களா?" என்று கேட்டவுடன் ஆட்லி அதற்குச் சம்மதித்தார். அடுத்த பதினைந்து வருஷத்திற்கு அவர் லண்டனின் கிழக்குப் பகுதியில் ஏழைகளுடன் ஏழையாய் வாசம் செய்தார். இந்தக் காலத்தில் ஏற்பட்ட அனுபவம்தான் அவரை சோஷலிஸத்திற்கு இழுத்ததுமல்லாமல் பார்லிமெண்ட் மெம்பராகவும் ஆக்கியது. சென்ற 20 வருஷங்களாக அவர் பார்லிமெண்டில் அங்கம் வகித்து வருகிறார்.

ஏழைகளின் வாழ்க்கையைப் பார்த்தால் சோஷலிஸத்தில் பற்றுதல் ஏற்படுகிறது உண்மைதான். ஆனால் ஆட்லி சோஷலிஸ்ட் கட்சிக்குத் தலைவராக எப்படி ஆனார்? அகஸ்மாத்தாகத் தலைமைப் பதவி கிடைத்தது என்று சிலர் கூறுகின்றனர். சலியா உழைப்பின் பரிசாகத்தான் அவருக்குத் தலைமைப் பீடம் கிடைத்தது என்று மற்றும் சிலர் கூறுகின்றனர். ஆனால் நடந்த விஷயம் இதுதான்.

1931-ம் வருஷத் தேர்தலில் தொழிற் கட்சிக்குப் படுதோல்வி ஏற்பட்டது. மாரிஸன், டால்டன், கிரீன்வுட் போன்ற பிரபலஸ்தர்கள் தோல்வியுற்றனர். லான்ஸ்பரி, கிரிப்ஸ், ஆட்லி மூவர்தான் வெற்றி பெற்ற பிரபலஸ்தர்கள். பழம் புலி லான்ஸ்பரி தலைவரானார். ஆட்லி உப தலைவரானார்.

1933-ல் லான்ஸ்பரி தலைமைப் பதவியை ராஜிநாமாச் செய்தார். "தனக்கு அளித்த வேலையைத் திறமையாகச் செய்பவர் ஆட்லிதான்" என்று புகழ்ந்து கூறி, ஆட்லியைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கும்படி சிபார்சு செய்தார் லான்ஸ்பரி. தலைமைப் பதவிக்கு ஆட்லி, மாரிஸன், கிரீன்வுட் மூவரும் போட்டி போட்டார்கள். முதல் ஓட்டில் ஆட்லி முதல் ஸ்தானம் பெற்றார். மாரிஸனும்



கிரீன்வுடும் அடுத்தடுத்து வந்தனர். இரண்டாவது தேர்தலில் கிரீன்வுட்டை ஆதரித்தவர்கள் ஆட்லிக்கு ஓட்டுச் செய்தனர். ஆட்லி ஜயித்தார்; மாரிஸன் தோல்வியுற்ருர்.

இந்தத் தேர்தலைப் பற்றிக் கன்சர்வேடிவ் பத்திரிகையான டேய்லி மெயில் எழுதும்போது, "ஆட்லி தொழிற் கட்சித் தலைவராகி விட்டார். ஆனால் அவர் நீண்ட நாள் தலைமைப் பதவி வகிக்கமாட்டார்" என்று எழுதியது. டேய்லி மெயிலின் கூற்றை சரித்திரம் பொய்ப்பித்து விட்டது.

சர்ச்சிலும் ஆட்லியும் முற்றிலும் மாறுபட்ட குணம்படைத்த தலைவர்கள். ஆனால் இவ்விருவருக்கும் இளம் வயதில் தாதியாக இருந்தவள் மிஸ் ஹட்ஸன் எனும் பெண்மணி. "சர்ச்சில் மிகவும் பிடிவாதக்காரப் பையன்" என்று இந்தப் பெண்மணி கூறியிருக்கிருள். ஆட்லி மிகவும் சங்கோச சுபாவமுள்ளவர் என்பது உலகப் பிரசித்தம்.

அதிகாரம் என்ருல் சர்ச்சிலுக்கு மிகுந்த ஆசை; அதை ஆடம்பரத்துடன் வகிப்பதில் அவருக்கு அளவிலா ஆனந்தம். அவர் பொது அரங்கத்தில் தோன்றிஞல் ராஜபார்ட்காரன் நாடக மேடையில் தோன்றுவது போலிருக்கும்.

ஆட்லி அப்படிப் பட்டவரல்ல. மிகப் பெரிய பதவியையும்கூடத் தம் கடமையை நிறைவேற்றி வைக்கும் கருவியாகக் கருதுகிருர். அவர் இருக்குமிடத்தில் நாடகமேடை அம்சங்கள் தலைகாட்டுவதில்லை. முப்பது வருஷமாகப் பொது வாழ்விலிருந்தும் அவருடைய சங்கோச சுபாவம் அவரை விட்டு நீங்கவில்லை.

முதல் மகாயுத்தத்தில் போர் வீரராகச் சேவை செய்து மேஜர் பதவி யடைந்தவர் ஆட்லி. நெருங்கிய நண்பர்கள் இருக்கும் பொழுது தமது யுத்தகால நினைவுகளைப் பற்றி அவர் பேசுவாராம். அவர் பேசுவதைக் கேட்க ரசமா யிருக்கும் என அவருடைய ஆப்த நண்பர்கள் கூறுவார்கள். கூட்டம் பெருகிவிட்டால் அவருடைய சங்கோசம் அவரை ஆட்கொண்டுவிடும். ஆனால் உத்தியோக தோரணையில் அவர் மிகவும் கண்டிப்பா யிருப்பாராம். மேஜையில் அடித்துப் பேசுவாராம். ஒழுங்காக நடந்து கொள்ளாத சகாக்களை தவிரக்கமில்லாமல் வெளியே அனுப்பி விடுவார்.


வர்ஜீனியா கௌல்ஸ் என்பவர் ஆட்லியைப் பற்றிப் பின்வருமாறு மதிப்பிட்டு எழுதுகிருர்:

"இந்த நூற்ருண்டின் சரித்திரத்தை எழுதுவதா யிருந்தால், இந்த தேசத்தின் போக்கை யுத்த வெற்றியினுல் சர்ச்சில் எப்படி மாற்றி யிருக்கிருரோ, அவ்வளவு நிச்சயமாக ஆட்லியும் மாற்றி யிருக்கிருர். ஒரு காலத்தில் தொழிற் கட்சியில் பல வகைப்பட்ட கருத்துக்கள் நிலவி வந்தன. சமுதாய ஜனநாயகத்தைப் பற்றி ஆட்லியின் கருத்தைத் தொழிற் கட்சியில் பெருவாரியானவர்கள் இன்று ஏற்றுக் கொண்டு விட்டார்கள். அவர் சிறந்த ஜனநாயக வாதி. தொழிற்கட்சியிலுள்ள தீவிரவாதிகளுடன் அவர் சமரசம் செய்து கொள்வதில்லை. அவருடைய உப மந்திரிகளைப் பெரும்பாலும் நிதானத்தில் நம்பிக்கை யுள்ளவர்களாகப் பார்த்து நியமித்து வருகிருர்."

மாரிஸன், பெவின் முதலியவர்களின் கைப் பொம்மைதான் ஆட்லி என்று சிலர் கூறுவதுண்டு. 1945-ல் ஒரு கன்சர்வேடிவ் பிரமுகர் விஷமத்தனமாகக் கூறிஞர்: "ஆட்லியைப் பிரதம மந்திரி என்று கூறுகிருர்கள். ஆனால் மாரிஸன் தானே பிரதம மந்திரி என்று நினைத்துக் கொண்டிருக்கிருர். உண்மையில் பெவின் தான் பிரதம மந்திரி."

இந்தக் கூற்று முற்றிலும் பொய் என்பதை இம்மாதம் நடந்த பொதுத் தேர்தலில் பார்த்தோம். தேர்தல் வெற்றிக்கு திட்ட மிட்டு யார் யார் எக்கெந்தக் காரியத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்று ஏற்பாடு செய்தவர் ஆட்லி. அவருடைய திட்டம் வெற்றி பெற்றது.

கல்கத்தா படும் பாடு!



தன. அடாடா! எத்தனை அன்பு! எவ்வளவு அபிமானம்! அந்த அம்மாள் கையினால் பாகம் செய்த புளியோதரை, திருக்கண்ணமுது முதலியவைகளை எவ்வளவு ஆசையோடு அந்த நாளில் சாப்பிட்டிருக்கிறேன்!

“எனக்குப் புளியோதரை பிடிக்கும் என்பது வாஸ்தவந்தான். ஆனால் இன்றைக்கு வேண்டாம். வீட்டுக்குப் போக வேண்டும்” என்று சொல்லிக் கொண்டு கிளம்பினேன்.

“அப்படியானால் இன்னொரு நாள் சாப்பிடுவதற்குக் கட்டாயம் வர வேண்டும்” என்றாள் தேவகி.

“ஆம், அப்பா! பழைய சிநேகத்தை மறந்து விடாதே! அடிக்கடி வந்து கொண்டிரு!” என்றான் சுந்தரம்.

அவனுடைய அழைப்பை ஹெட்மாஸ்டரும் ஆமோதித்தார். “கிருஷ்ணசாமி! இன்னொரு நாள் வந்தால் உனக்கு யோகாசனத்தைப் பற்றி எல்லாம் சொல்கிறேன்!” என்றார்.

“அவர் சொல்வது ஒன்றையும் நீ நம்பாதே! யோகாசனத்தின் மகிமையைப் பற்றி அவர் பிரமாதமாகப் பிரசங்கம் செய்வார். அவருடைய அலமாரியில் பார்த்தால் ஐந்தாறு வித லேகியம் வைத்திருப்பார். நீ ஒரு நாள் என்னுடைய டிஸ்பென்ஸரிக்கு வா! ஆறு மாதம் சியவனப்பிராஸ லேகியத்தைச் சாப்பிட்டுப் பார்!” என்றான் சுந்தரம்.

“அவர் கிடக்கிறார்! நீங்கள் மருந்துக் கடைக்குப் போக வேண்டாம். இங்கே வாருங்கள்!” என்றாள் தேவகி.

குழந்தைகள், “சித்தியா! நாளைக்கு வந்து எங்களைக் காரில் ஏற்றிக் கொண்டு பீச்சுக்கு அழைத்துப் போங்கள்!” என்றன.

“ஆகட்டும்! இன்னொரு நாள் அவசியம் வருகிறேன்!” என்று சொல்லி விட்டுப் புறப்பட்டேன்.

காரில் ஏறி உட்கார்ந்ததும், “இந்தச் சிந்தாதிரிப்பேட்டைப் பக்கமே இனிமேல் தலைகாட்டுவதில்லை!” என்று எண்ணிக் கொண்டேன்.

எல்லாருமாகச் சேர்ந்து எனக்கு அசட்டுப் பட்டம் கட்டிப் பைத்தியமாக அடித்து விட்டார்களே?

போனால் போகட்டும்! எப்படியாவது அவர்கள் சௌக்யமாக இருந்தால் சரி. தேவகியும் அவளுடைய கணவனும் சந்தோஷமாக இருக்கிறார்கள். அதுதான் வேண்டியது. ஹெட்மாஸ்டரும் உற்சாகமாக இருக்கிறார். வேறு என்ன வேண்டும்?

வெள்ளிய நிலவு பிரகாசித்துக் கொண்டிருந்தது. பனியினால் உலகமே குளிர்ந்திருந்தது.

பழைய நினைவுகள் குமுறிக் கொண்டு வந்தன. கடைசியாக, இந்தச் சுந்தரமா தேவகியைக் கலியாணம் செய்து கொண்டான்? என்னையும் வைத்திநாதனையும் அடிக்கடி சண்டை மூட்டி விட்டு இவன் பரம சாதுவைப் போல் நடித்தவன் அல்லவா? அந்த நடிப்புத் திறமைதான் இன்றைக்கும் அவனிடம் பிரகாசிக்கிறது! பொல்லாத அழுக்கன்!

ஏதோ போகட்டும்! தேவகி தன் மனதுக் கொத்த புருஷனை மணந்து திருப்தியாக இருக்கிறாள் அல்லவா? அதுதான் வேண்டியது.

அன்று வரை நான் அறியாத மன நிம்மதியை அன்று கண்டேன்.

அந்த நிம்மதியைக் குலைத்துக் கொள்ள நான் விரும்பவில்லை. ஆகையினாலேயே சிந்தாதிரிப் பேட்டைக்கு அப்புறம் நான் போகவில்லை. இந்த வருஷத்துப் பொருட்காட்சிக்குக் கூடப் போகவில்லை.

தேவகியின் வாழ்க்கை இப்படியே நீடித்துச் சந்தோஷமாயிருக்கும்படி பெருமாள் அருள் புரியட்டும்.

அசந்தர்ப்ப நாடகத்தை இனிமேல் நீங்கள் போடவே வேண்டாம். எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. நீங்கள் பைத்தியமாக நடித்தபோது உண்மையிலேயே உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று எனக்குப் பயமாய்ப் போய்விட்டது. அப்புறம் யாரோ ஒரு தடியன் புடவையைக் கட்டிக் கொண்டு வந்து உங்களைப் 'பிராண நாதா!' என்று அழைத்த போது எனக்குச் சகிக்கவே யில்லை. இந்தமாதிரி நாடகம் "போடவில்லையென்று யார் அழுதார்கள்?" என்றாள்.

அப்போது சுந்தரம் தேவகியின் தகப்பனாரைப் பார்த்து, "பாருங்கள், மாமா! இந்த அழகான கதையைக் கற்பனை செய்து கொடுத்ததே இவள்! இப்போது என் பேரில் குற்றம் சொல்கிறாள்! இதற்கு நான் என்ன செய்கிறது?" என்றான்.

இந்தச் சமயத்தில் நான், "ஆமாம்; உன் மனைவிக்கு அந்த நாளிலிருந்தே இது வழக்கந்தானே? தான் செய்த காரியத்துக்குப் பழியைப் பிறர் தலையில் போடுவது?" என்றேன்.

சுந்தரம் என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தான். "ஓகோ! அந்த போர்ஜரி கடிதத்தைப் பற்றிச் சொல்கிறாயோ? அது தேவகி மட்டும் செய்ததில்லை; அவளும் நானும் சேர்ந்து யோசனை செய்து பண்ணிய காரியந்தான். அதை இன்னும் நீ மறக்கவில்லையா?" என்றான்.

"விஷயமே எனக்கு இப்போது தானே தெரிந்தது? இனிமேல் மறந்து விடவேண்டியதுதான்" என்றேன்.

ஹெட்மாஸ்டர் அப்போது, "சுந்தரம்! நியாயமாக நீயும் தேவகியும் கிருஷ்ணசாமியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். நீங்கள் என்னை ஏமாற்றியதாவது போகட்டும். தேவகிக்கு இஷ்டமில்லாத இடத்தில் கலியாணம் நிச்சயம் செய்தது என்னுடைய பிசகு. அதனால் நான் அடைந்த தொந்தரவுக்கு உங்களைக் குற்றம் சொல்லிப் பயனில்லை. ஆனால் கிருஷ்ணசாமியின் பேரில் பழியைப் போட்டீர்களே? அது ரொம்ப அநியாயம்! எத்தனை வருஷமாகியும் அது இன்னும் அவன் மனதில் உறுத்திக் கொண்டிருக்கிறது! நீங்கள் அவனிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளாவிட்டால் உங்களுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டியது தான்!" என்றார்.

"இதெல்லாம் ஒன்றும் வேண்டியதில்லை, ஸார்! யார் யாரை மன்னிக்கிறது?" என்றேன் நான். ஹெட்மாஸ்டரின் வார்த்தைகள் என்னை உருக்கி விட்டன.

"ஆமாம், அப்பா! அவர் அப்படியெல்லாம் மனதில் ஒன்றை வைத்துக் கொள்கிறவர் அல்ல. அவருடைய நல்ல சுபாவம் அப்போதே நமக்குத் தெரியுமே!" என்றாள் தேவகி.

"மனதில் கோபம் வைத்துக் கொள்கிறவனாயிருந்தால் இன்றைக்கு இந்தச் சந்து வீட்டைத் தேடி வந்திருப்பானா? நான் அவ்வளவு அவனைப் பயமுறுத்தியிருந்துங்கூட!" என்றான் சுந்தரம்.

"சுந்தரம்! மற்ற எதைப்பற்றியும் எனக்குக் கோபம் இல்லை. ஆனால் தேவகியின் தொல்லையைப் பொறுக்காமல் அவளுடைய புருஷன் தூக்குப் போட்டுக் கொண்டான் என்று சொன்னாயே, அதை மட்டும் நான் மறக்க முடியாது!" என்றேன்.

"ஆம், அப்பா, கிருஷ்ணசாமி! உன்னிடம் சொன்னதை நிறைவேற்றலாம் என்றுதான் பார்த்தேன். தூக்குப் போட்டுக் கொள்ள முயன்றபோது விட்டம் முறிந்து என் தலையில் விழுந்தால் அதற்கு நான் என்னத்தைச் செய்கிறது? என் பேரில் வஞ்சனை இல்லை!" என்றான் சுந்தரம்.

"போதும் இந்தப் பேச்சு! முகத்தில் இன்னும் கொஞ்சம் பைத்தியக் களை இருக்கிறது! குழாயடிக்குச் சென்று முகத்தை நன்றாய் சோப்புப் போட்டுத் தேய்த்து அலம்பி விட்டு வாருங்கள்! அதற்குள் நான் இலையைப் போடுகிறேன்" என்றாள் தேவகி.

"இன்றைக்கு இந்த வீட்டில் சாப்பாடுகூட உண்டா? தளிகை யார் செய்தார்கள்!" என்றான் சுந்தரம்.

"நாடகத்திற்குப் புறப்படுவதற்கு முன்பே தளிகை செய்து வைத்து விட்டுத்தான் கிளம்பினேன். புளியோதரை செய்திருக்கிறேன். கிருஷ்ணசாமி! உங்களுக்குக்கூடப் புளியோதரை பிடிக்குமோ? அம்மா செய்து போட்டால் ஆசையோடு சாப்பிடுவீர்களே!" என்றாள் தேவகி.

அப்போது தேவகியின் தாயார் ரங்கநாயகி அம்மாளைப்பற்றிய ஞாபகங்கள் என் மனதில் பொங்கி எழுந்



"அப்பா! இவரிடம் மூந்தாநாள் நீங்கள் உண்மையைச் சொல்லவில்லையா?" என்று தேவகி கேட்டாள்.

"சொல்லாமல் என்ன? முக்காலே மூன்று வீசம் உண்மையைத்தான் சொன்னேன். உன் புருஷன் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இருப்பதாகச் சொன்னேன். இந்த வீடு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில்லையென்று யார் சொல்லுவார்கள்? இல்லாவிட்டால் இப்படிப்பட்ட அழகான நாடகத்தைப் போட உன்னுடைய புருஷனுக்குத் தோன்றியிருக்குமா!" என்றார் பத்மநாப ஐயங்கார்.

அவர் சொன்னபடி இந்த வீடு பைத்தியக்கார ஆஸ்பத்திரியோ, என்னமோ! ஆனால் இங்கு வந்தபின் பலன் என்னை இவர்கள் பைத்தியமாக அடித்து விட்டார்கள் என்பது நிச்சயம்! என்னுடைய இந்த அபிப்பிராயத்தை உறுதிப் படுத்துவதற்கு அப்போது இன்னொரு சம்பவம் நேர்ந்தது. வாசலில் சைக்கிள் மணிச் சத்தம் கேட்டது.

"அப்பா வந்து விட்டார்!" என்று குழந்தைகள் குதித்தார்கள்.

ஆம்; அடுத்த நிமிஷம் அவர்களுடைய அப்பா வீட்டுக்குள் பிரவேசித்தார். அந்த அப்பா யார் என்று நினைக்கிறீர்கள்? பிரபல ஆயுர்வேத வைத்தியரான டாக்டர் சுந்தரம் எல். ஐ. எம். அவர்கள்தான்!

அன்று காலையில் டாக்டர் சுந்தரத்தின் மருத்துவ சாலையில் அவனை விட்டுப் பிரிந்த போது ஏதோ ஒன்றை ஞாபகப்படுத்திக் கொள்ள முயன்றும் ஞாபகத்திற்கு வரவில்லையென்று சொன்னேன் அல்லவா? அது என்னவென்று இப்போது பளீர் என்று நினைவு வந்தது. அந்த வீட்டு ரேழியில் மூந்தா நாள் என் காலில் தடுக்கிக் காயம்படுத்திய அதே சைக்கிள்தான் டாக்டர் சுந்தரத்தின் மருத்துவ சாலையிலும் இருந்தது. அசோக சக்கரக் கொடி இரண்டிலும் இருந்தது என்பது இப்போது நினைவுக்கு வந்தது.

டாக்டர் சுந்தரம் என்னைப் பார்த்ததும், "ஹலோ! கிருஷ்ணசாமி! இந்த வீட்டுப் பக்கமே வராதே என்று சொன்னேனே, அதை உண்மையாக எடுத்துக் கொண்டு விடுவாயோ என்று பயந்து போனேன். நீ வந்தது பற்றி ரொம்ப சந்தோஷம். நாடகம் எப்படி இருந்தது? உனக்குப் பிடித்திருந்ததா?" என்று கேட்டான்.

நான் பதில் சொல்வதற்குள் குழந்தைகள் "ரொம்ப நன்றாயிருந்தது, அப்பா!" என்று கூச்சலிட்டார்கள்.

தேவகி சுந்தரத்தைப் பார்த்து, "போதும், போதும்! இந்த மாதிரி



சிலாகித்துப் பேசிக் கொண்டே அவர்கள் என்னைப் பின் தொடர்ந்து வந்து காரிலும் ஏறிக் கொண்டார்கள். என்னிடம் அவர்கள் அபிப்பிராயம் கேட்டபோது நானும் "நாடகம் நன்றாயிருந்தது!" என்று சொல்லி வைத்தேன். வீட்டுக்குப் போனதும் எல்லாச் சந்தேகங்களையும் அவர்களிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு விடுவது என்று தீர்மானித்திருந்தேன்.

ஆனால் வீடுவந்து சேர்ந்து அவர்கள் எல்லாருடனும் நானும் உள்ளே போனதும் ஒன்றுமே கேட்க எனக்கு மனம் வரவில்லை. என்னத்தைக் கேட்பது? எப்படிக் கேட்பது? எது கேட்டாலும் அசட்டுப்பட்டம் எனக்கு வந்து சேரும் என்று தோன்றியது.

ஆகவே விடைபெற்றுக் கொண்டு போக எண்ணி, "நான் போய் வரட்டுமா?" என்றேன்.

"நன்றாயிருக்கிறது. அதற்குள்ளே போகிறதாவது? இவர்களுடைய அப்பா இன்னும் சிறிது நேரத்தில் வந்துவிடுவார். அவரையும் பார்த்துவிட்டுச் சாப்பிட்டு விட்டுப் போகலாம்!" என்றாள் தேவகி.

"இவர்களுடைய அப்பாவா? அது யார்?" என்று கேட்டேன்.

"இன்னும் உங்களுக்குத் தெரியவில்லையா, என்ன? தெரிந்துகொண்டு விட்டீர்கள் என்றல்லவா இருந்தேன்? இன்று நாடகத்தில் 'ஹீரோ'வாக நடித்தவர்தான்!" என்றாள் தேவகி.

"அப்படியா? முந்தாநாள் நான் கேட்டபோது ஏதோ ஹைதராபாத்தில் நடந்ததாகச் சொன்னாயே?"

"ஆமாம்; அதுவுந்தான் நாடகத்தில் வந்ததே! நான் சொன்னபடியே அவரைக் கறுப்பு முகமூடி அணிந்த ரஸாக்கர்கள் வந்து அழைத்துப் போனார்களே?" என்றாள் தேவகி.

"அப்படியானால் முந்தாநாள் இந்த வீட்டு மச்சுமேல் இருந்தவர்?..."

"அவரேதான்! முந்தாநாள் நீங்கள் வந்திருந்தபோது மச்சுமேல் கடைசி ஒத்திகை நடந்து கொண்டிருந்தது. வேஷம் கூடப் போட்டுப் பார்த்துக் கொண்டார்கள். அதனாலேதான் உங்களை இவரால் பார்த்துப் பேச முடியவில்லை. 'யாருக்கும் சொல்லக் கூடாது' என்று கண்டிப்பாக உத்தரவு போட்டிருந்தார்! நான் சொன்னதையெல்லாம் நீங்கள் நிஜம் என்றே நினைத்துக் கொண்டீர்களா, என்ன?"

எனக்கு அளவில்லாத கோபம் வந்தது. பொய்யும் சொல்லிவிட்டு அதை நம்பியதற்காக என் பேரில் குற்றமும் அல்லவா சொல்கிறாள்? அழகாயிருக்கிறது காரியம்!

இந்தச் சமயத்தில், உள்ளே உடுப்பைக் கழற்றி வைப்பதற்காகப் போயிருந்த ஹெட்மாஸ்டர் வந்தார்.

வாக நடந்தான். அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் போனார்கள்.

14

எனக்கு நாடகம், ஸினிமா என்றாலே அவ்வளவாகப் பிடிப்பதில்லை. அதிலும் அன்றைக்கு என் மனோநிலைமை நாடகம் பார்த்து ரஸிப்பதற்கு அனுகூலமாக இல்லை. உண்மையாகவே காரியமும் கொஞ்சம் இருந்தது. அதை முடித்து விட்டு இரவு ஏழரை மணிக்குத் திரும்பவும் பொருட் காட்சி மைதானத்துக்குப் போனேன். நாடகம் இன்னும் நடந்து கொண்டிருந்தது. அதைப் பார்க்க ஏராளமான கூட்டம். அத்தனை ஆயிரம் பேரும் நாடகப் பைத்தியம் பிடித்தவர்கள் என்ற எண்ணமே எனக்கு வியப்பு அளித்தது. அந்தப் பெருங் கூட்டத்தின் ஒரு ஓரத்தில் நின்று நாடக மேடையைக் கவனித்தேன்.

அச்சமயத்தில் நாடக மேடையிலும் ஒரு பைத்தியம் நின்று கொண்டிருந்தது! கோரமான முகத்துடனும் கோரணிகளுடனும் அந்தப் பைத்தியம் ஏதேதோ பயங்கரமாகக் கத்திக் கொண்டிருந்தது. அந்தக் கத்தலின் கோரமானது ஒலிபெருக்கியின் மூலம் வந்தபோது இன்னும் அதிக கோரமாய் ஒலித்தது. முதலில் சற்று நேரம் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்புறம் சற்றுப் புரிந்தது. நாடக மேடையில் ஒரு பாழடைந்த வீட்டில் நின்று அந்தப் பைத்தியக்காரன் சத்தமிட்டான். அந்த வீட்டில் ஒரு காலத்தில் வசித்திருந்த அவனுடைய மனைவி மக்களை எண்ணிப் புலம்புவதாகத் தோன்றியது.

தேவகியும் அவள் தகப்பனாரும் குழந்தைகளும் கூட்டத்தில் எங்கே இருக்கிறார்கள் என்று பார்த்தேன். நாடக மேடைக்கு வெகு சமீபத்தில் அவர்கள் காணப்பட்டார்கள். கடவுளே! இவர்களுடைய புத்தியை என்னவென்று சொல்வது? வீட்டிலேயே ஒரு பைத்தியத்தை வைத்துக் கொண்டு இங்கே நாடகத்திலும் பைத்தியத்தைப் பார்க்க இவர்கள் வந்தார்களே? இந்த இலட்சணத்தில் எனக்குக்கூட "ரொம்ப நல்ல நாடகம்; பார்க்கத் தவற வேண்டாம்!" என்று எச்சரித்தார்களே! இவர்களுடைய கல் நெஞ்சையும் ராட்சத குணத்தையும் என்னவென்று சொல்லுவது?

பிறகு நாடக மேடையில் நடந்த துரிதமான சம்பவங்கள் எனக்கு மேலும் மேலும் வியப்பை அளித்தன. அந்தப் பைத்தியக்காரன் அந்தப் பாழும் வீட்டின் விட்டத்தில் ஒரு கயிற்றை மாட்டி அதில் தூக்கிட்டுக் கொள்ள முயன்றான். அப்போது விட்டம் திடீரென்று முறிந்து அவன் தலையில் விழுந்தது! அச்சமயம் யாரோ ஒரு ஸ்திரீ தலை தெறிக்க ஓடிவந்து கீழே கிடந்த பைத்தியக்காரனைக் கட்டிக்கொண்டு அழுதாள். இத்துடன் அக் காட்சி முடிவடைந்தது.

அடுத்த காட்சியில் அந்தப் பைத்தியக்காரன் ஒரு ஆஸ்பத்திரிப் படுக்கையில் கிடந்தான். அவனுக்குச் சுயப் பிரக்ஞை வரப் போகிறது என்று டாக்டர் சொன்னார். பிரக்ஞை வந்ததும் அவன் முன்போல் பைத்தியம் போல் கூச்சலிடாமல் சாவதானமாகப் பேசினான். அவன் அருகில் இருந்த ஸ்திரீ "இப்போது ஹைதராபாத்தில் ரஸாக்கியர் ஆட்சி இல்லை. நைஜாம் ராஜ்யம் சுதந்திர இந்தியாவோடு சேர்ந்துவிட்டது!" என்று சொன்னாள். உடனே அவன் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து உற்சாகமாகப் பேசினான். அவனும் அந்த ஸ்திரீயும் சிறிது நேரம் கொஞ்சிக் குலாவினார்கள்.

பிறகு நாடக மேடையில், இருபது முப்பது பேர் கூட்டமாய் நின்று,

"கல்லார்க்கும் கற்றவர்க்கும்
களிப்பருளும் களிப்பே!"

என்று பாடினார்கள். பிறகு திரை விழுந்தது. நாடகமும் முடிந்தது.

இதெல்லாம் என் மனதில் எவ்வளவு குழப்பத்தை உண்டாக்கியிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லையல்லவா? தேவகி முதலியவர்கள் என்னிடம் சொன்னதற்கும் இந்த நாடக நிகழ்ச்சிகளுக்கும் இருந்த பொருத்தம் எப்படி ஏற்பட்டது? தற்செயலாக ஏற்பட்டதா? அல்லது...அல்லது...

யோசிக்க யோசிக்கக் குழப்பம் அதிகமேயாயிற்று. அந்தக் குழப்பத்துக்கிடையே தேவகியும் அவளுடைய குழந்தைகளும் நின்ற இடத்தைக் கண்டு பிடித்து அங்கே போய்ச் சேர்ந்தேன். நாடகம் பிரமாதம் என்பதாகச்

அப்பா கோபித்துக் கொண்டபோது உங்கள் பேரில் பழியைப் போட்டு வைத்தேன். அந்தச் சமயத்துக்கு அப்படிச் சொல்லவேண்டியிருந்தது. அப்புறம் அப்பாவின் கோபம் தணிந்த பிறகு உண்மையை ஒப்புக் கொண்டேன். அதற்குள் நீங்கள் போயே போய் விட்டீர்கள். அதற்கு நான் என்ன செய்கிறது!'' என்றாள் தேவகி.

என் மனம் அப்போது ஒரு பக்கம் கோபத்தினாலும் ஒரு பக்கம் பச்சாத்தாபத்தினாலும் குழப்பம் அடைந்தது. அந்தக் கலியாணம் பிடிக்கவில்லையென்றால், வேறு யாரிடமாவது இவளுடைய மனம் சென்றிருந்ததா? அது ஒருவேளை நானாகவே இருக்குமா? அவசரப்பட்டு மனம் வெறுத்து ஊரை விட்டுப் போனதினால் என் வாழ்வையே பாழாக்கிக் கொண்டேனா?

அப்படி எண்ணியபோது தேவகியை மணம் செய்து கொள்ளாதது என் அதிர்ஷ்டந்தான் என்று டாக்டர் சுந்தரம் கூறியது நினைவு வந்தது. இவள் யாரோ ஒருவனைக் கலியாணம் செய்துகொண்டுதானே இருக்க வேண்டும்? அவன் யார்? அவனுடைய கதி என்ன? டாக்டர் சுந்தரம் சொன்னது போல் அவன் தூக்குப் போட்டுக் கொண்டு இறந்தானா? அல்லது அந்த வீட்டு மாடி ஜன்னல் வழியாகப் பார்த்த பைத்தியந்தான் இவளுடைய புருஷனா? புருஷனுடைய நிலைமை அப்படியிருக்கும்போது இவள் பொருட்காட்சிக்கு நாடகம் பார்க்கப் புறப்படுகிறாளே? இதை என்னவென்று சொல்வது? இவள்தான் இப்படி என்றால், இவள் தகப்பனாரும் அல்லவா ஒத்துக்கு மத்தளம் போடுகிறார்!

அவளுடைய புருஷனைப் பற்றியும் அந்த வீட்டு மாடிமேல் உள்ள ஆளைப் பற்றியும் தேவகியைக் கேட்பதற்கு மனதைத் திடப்படுத்திக் கொண்டேன். ஆனால் அந்தச் சமயத்தில் ஹெட்மாஸ்டர் கோட்டு, தலைப்பாகை முதலியவை அணிந்து கொண்டு புறப்படத் தயாராக வந்து விட்டார். எனவே ஒன்றும் கேட்க முடியவில்லை.

வாசலில் காரில் ஏறி உட்கார்ந்த பிறகு என் கண்கள் மட்டும் மேலே மச்சு ஜன்னலை உற்று நோக்கின. அங்கே இப்போது அந்தப் பயங்கர முகத்தைக் காணவில்லை.

பாவம்! அந்தப் பைத்தியத்தை உள் அறையில் போட்டுப் பூட்டிவிட்டார்களோ, என்னமோ! அல்லது அதனால் தொந்தரவாயிருக்கிறதென்று பைத்திய ஆஸ்பத்திரிக்கு அப்புறம் அனுப்பி விட்டார்களோ, என்னமோ! இருந்தாலும் இந்தத் தேவகியைப் போல் இருதயமற்ற ஸ்திரீயை உலகத்திலேயே காண முடியாது! இவளுடைய வலையில் நான் விழாமல் தப்பியது நான் செய்த புண்ணியந்தான். ச்சீ! இது என்ன கேவலமான எண்ணம்! துர்ப்பாக்கியசாலியான தேவகியை நானும் சேர்ந்து நிந்திக்கவேண்டுமா? இவளுக்கு நேர்ந்த கஷ்டங்களுக்கெல்லாம் ஒருவேளை நானே காரணமாயிருந்திருக்கலாம். அப்படி அவசரப்பட்டுக் கொண்டு தண்டாங்கோரையை விட்டு நான் புறப்படாதிருந்தால், இவளுடைய வாழ்க்கையே வேறுவிதமாயிருந்திருக்கலாம். என்னுடைய வாழ்க்கையுங் கூடத்தான்!......

இத்தகைய எண்ணங்கள் என் மனத்தை அலைத்துக்கொண்டேயிருக்கையில் பொருட் காட்சியும் வந்துவிட்டது. தேவகி முதலியவர்கள் காரிலிருந்து அவசர அவசரமாக இறங்கினார்கள். நாடக மேடை மைதானத்துக்குப் போவதில் அவர்களுக்கிருந்த பரபரப்பைச் சொல்லி முடியாது.

நான் வண்டியிலிருந்து இறங்காமலிருப்பதைக் கண்ட தேவகி "நாடகம் பார்க்க நீங்கள் வரவில்லையா?" என்று கேட்டாள்.

"நீங்கள் போய் இடம் பிடித்துக் கொண்டு உட்காருங்கள். எனக்குக் கொஞ்சம் காரியம் இருக்கிறது. பார்த்து விட்டுப் பிறகு வந்து விடுகிறேன்!'' என்றேன்.

"திரும்பி வீட்டுக்குப் போவதற்கு எங்களைத் திண்டாட விட்டு விடாதீர்கள்!'' என்றாள் தேவகி.

"அப்படியெல்லாம் செய்வேனா? கட்டாயம் வந்து உங்களை அழைத்துப் போகிறேன்!'' என்றேன்.

"அவசியம் நீங்கள் வந்து நாடகத்தையும் பார்க்க வேண்டும். இன்று நாடகம் ரொம்ப நன்றாயிருக்குமாம்!'' என்று சொல்லிக்கொண்டே தேவகி விரை

வளவோ நான் ஆயிற்று. உங்கள் பேரில் அப்பாவுக்கு ரொம்ப அபிமானம். அப்பா அம்மா இரண்டு பேரும் கொஞ்ச நாள் வரையில் உங்களைப் பற்றி அடிக்கடி பேசிக்கொண்டிருப்பார்கள். அடாடா! நீங்கள் எல்லாரும் அந்த நாளில் உபாத்தியாயர்களிடம் எவ்வளவு பக்தி விசுவாசத்துடன் இருந்தீர்கள்? என்னிடத்திலே கூடத்தான் எவ்வளவு மரியாதையாக இருந்தீர்கள்? இந்தக் காலத்துப் பிள்ளைகளும் இருக்கிறார்களே? கொஞ்சமும் மட்டு மரியாதை இல்லாதவர்கள்! கொஞ்ச நாளைக்கு முன்பு குவீன் மேரிஸ் காலேஜில் நடந்த கார்னிவல் கொண்டாட்டத்தில் ஆண் பிள்ளை மாணாக்கர்கள் எவ்வளவு கேவலமாக நடந்து கொண்டார்கள் என்பதைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பீர்களே! இவர்களுக்குத்தான் விழுந்து விழுந்து இங்கிலீஷ் படிக்கிறார்கள்! இங்கிலீஷ் கதைகளில் 'ஷிவல்ரி'யைப் பற்றி எவ்வளவெல்லாம் இருக்கிறது? அதையெல்லாம் இவர்கள் படித்து என்ன பயன்? ஏட்டுச் சுரைக்காய்தான்! நம்முடைய மனுதர்ம சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடியாவது இவர்கள் ஸ்திரீகளிடம் பக்தி விசுவாசத்துடன் நடந்துகொள்கிறார்களா? அதுவும் இல்லை. இந்தக் காலத்து மாணாக்கர்களுக்கு இங்கிலீஷ் நாகரிகமும் வரவில்லை; நம்முடைய பழைய தர்மமும் பயன்படவில்லை. இரண்டிலும் உள்ள தீமைகள் மட்டும் இவர்களுக்கு வந்திருக்கின்றன. இதைப் பற்றி அப்பா அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பார். தண்டாங்கோரை ஹைஸ்கூலில் நீங்கள் எல்லாரும் அந்த நாளில் என்னிடம் எவ்வளவு மரியாதையாக நடந்து கொண்டீர்கள் என்று அடிக்கடி பாராட்டிப் பேசுவார்!......"

இப்படியாக தேவகி கடல் மடை திறந்தது போல் பிரசங்கம் செய்து கொண்டே போனான். மூச்சு விடாமல் பேசும் அவனுடைய சுபாவம் இன்னமும் அப்படியேதான் இருந்தது என்று தெரிந்து கொண்டேன். ஆனால் அவன் கூறியதெல்லாம் உண்மையென்று என் மனம் ஒப்பவில்லை. ஏன்? நான் படித்த காலத்திலேகூடப் பெண்களிடம் மரியாதையுடன் நடந்துகொள்ளத் தெரியாத காலிப் பசங்கள் இருக்கத்தான் செய்தார்கள். வைத்தியநாதனும் சுந்தரமும் இருக்கவில்லையா! அதையெல்லாம் மறந்து விட்டு இவன் பிரமாதமாய்ப் பேசிக் கொண்டே போகிறானே! போனால் போகட்டும்! எனக்கு என்ன வந்தது? அந்தக் கடிதத்தைப் பற்றிய உண்மையை மட்டும் எப்படியாவது தெரிந்து கொள்ள விரும்பினேன். ஆகையால் தேவகியின் பேச்சில் பலவந்தமாகக் குறுக்கிட்டு, "அதெல்லாம் இருக்கட்டும், தேவகி! அந்தக் கடிதத்தைப் பற்றிய உண்மை அப்புறம் தெரிந்ததா?" என்றேன்.

"எந்தக் கடிதம்?" என்று தேவகி தலையைக் கோணலாக வைத்துக் கொண்டு கேட்டான்.

"எந்தக் கடிதமாவது? உனக்கு நிச்சயம் செய்திருந்த முதல் கலியாணத்தைத் தடைசெய்த கடிதந்தான்!..."

"அதுவா?" என்று கேட்டுவிட்டுத் தேவகி கலீரென்று சிரித்தான். எனக்கோ கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. அந்தக் கடிதத்தினால் நான் அடைந்த துன்பம்தான் எத்தனை? இப்போது நினைத்தாலும் மனம் வெட்கி வேதனை அடைகிறது! ஆனால் இவன் அதைக் குறித்துச் சிரிக்கிறான்!


சிரிப்பைச் சட்டென்று நடுவில் நிறுத்திவிட்டு "ஆமாம்; அப்படியானால் அந்தக் கடிதத்தை நீங்கள் எழுதவில்லையா?" என்று கேட்டான்.

"சத்தியமாய் எழுதவில்லை!" என்று நான் ஆத்திரமாய்க் கூறினேன்.

"அடே அப்பா! அதைப்பற்றி இப்போது என்னத்துக்கு இவ்வளவு ஆத்திரம்? போனது போய் விட்டது. நீங்கள் அதை எழுதவில்லையென்பது எனக்குத் தெரியும். உங்களுக்கு அவ்வளவு தைரியம் இல்லையென்பதும் எனக்குத் தெரியும். ஆகையால் நானே எழுதிவிட்டேன்!" என்று தேவகி ஒரு அணுகுண்டைப் போட்டான்.

"நீ எழுதினாயா! நீயா எழுதினாய்? அப்படியானால் என்பேரில் பழி சொன்னாயே, ஏன்?" என்று மேலும் ஆத்திரத்துடன் கேட்டேன்.

"அது ஒரு காரியத்துக்காக எழுதினேன். ஒரு காரியம் என்ன? உண்மையைச் சொல்லி விடுகிறேனே! எனக்கு அப்பா நிச்சயம் செய்திருந்த கலியாணம் பிடிக்காததால் எழுதினேன்.



13

அன்று மாலை நான் சிந்தாதிரிப்பேட்டையில் தேவகியின் வீடு சென்ற போது குழந்தைகள் மூன்று பேரும் அழகாக 'டிரஸ்' பண்ணிக் கொண்டு பொருட் காட்சிக்குப் புறப்படச் சித்தமாயிருந்தார்கள். வாசலில் என் மோட்டார் போய் நின்றதும் அவர்கள் "அம்மா! சித்தியா வந்து விட்டார்!" "தாத்தா! கார் வந்து விட்டது!" என்று கோஷமிட்டது என் காதில் விழுந்தது. என்னைப் பார்த்ததும் ஹெட்மாஸ்டர், "வந்து விட்டாயா, கிருஷ்ணசாமி! இவர்களுடைய பேச்சை நான் நம்பவில்லை. நீ வருவாய் என்றே எதிர்பார்க்கவில்லை. வண்டியுடன் வந்தவரையில் விசேஷந்தான்!" என்ருர்.

தேவகி சிரித்த முகத்துடன் வந்து என்னை வரவேற்ருள். தேவகியின் இனிமையான தோற்றத்தையும் டாக்டர் சுந்தரம் அவளைப் பற்றிக் கூறியதையும் என் மனதிற்குள் ஒப்பிட்டுப் பார்த்தேன். அவன் கூறியது போல் இவள் பொல்லாத நீலியாக இருக்க முடியுமா, இவளுடைய தொல்லையைப் பொறுக்காமல் இவள் கணவன் தூக்குப் போட்டுக் கொண்டிருக்க முடியுமா என்று வியந்தேன். அவளுடைய கழுத்தில் என் கவனம் சென்றது. இரண்டு மெல்லிய சங்கிலிகள் அவள் கழுத்தை அலங்கரித்தன. ஆனல் அவற்றில் மாங்கலியம் இருக்கிறதா, இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

தேவகி என்னை வரவேற்ற பின்னர் அவளுடைய தந்தையைப் பார்த்து, "அப்பா! நான் சொன்னேனே, பார்த்தீர்களா? இவர் ஒரு நாளும் வரமாட்டார் என்று நீங்கள் சொன்னீர்களே? யாருடைய வாக்குப் பலித்தது? போகட்டும்; நீங்கள் இன்று நாடகத்துக்கு வரப்போகிறீர்களா, இல்லையா? ஐந்து நிமிஷத்துக்குள் வராவிட்டால் உங்களை விட்டு விட்டு நாங்கள் புறப்பட்டுப் போய் விடுவோம்!" என்ருள்.

"இதோ வந்து விட்டேன், தேவகி! நான் இன்றைக்கு நாடகத்துக்கு வராவிட்டால் அப்புறம் இந்த வீட்டில் இருக்க முடியுமா? எல்லாரும் சேர்ந்து என் பிராணனை வாங்கிவிட மாட்டீர்களா? கொஞ்சம் பொறுங்கள்! இதோ டிரஸ் பண்ணிக் கொண்டு வந்து விடுகிறேன்!" என்று சொல்லிவிட்டுத் தம்முடைய அறைக் கதவைப் படார் என்று சாத்திக் கொண்டார்.


நான் தேவகியைப் பார்த்து "உன்னுடைய அப்பாவுக்கு என் பேரில் உள்ள கோபம் எல்லாம் போய்விட்டதா?" என்று கேட்டேன்.

"என்ன கோபம்?" என்று தேவகி வியப்புடன் கேட்டாள்.

"தண்டாங்கோரை பள்ளிக்கூடத்தில் படித்த போது என் பேரில் அப்பா ஒரு நாள் ரொம்பக் கோபித்துக் கொண்டாரே, ஞாபகம் இல்லையா?"

"அழகாய்த்தானிருக்கிறது. அதையெல்லாம் அப்பா மறந்து போய் எவ்







அருள் பெறுகிறேன். கதாநாயகி குணசுந்தரியாக நடிக்கும் ஸ்ரீரஞ்சனி உணர்ச்சியுடன் நடித்துப் படம் பார்ப்பவர்களின் மனதைக் கவர்ந்து விடுகிறார். [illegible] பிச்சைக்காரராக வந்து பிறகு அழகான [illegible] ஆடிப்பாடிக் [illegible] நடிகரான ஸ்ரீ [illegible] தெலுங்கு நாட்டில் [illegible] பாத்திரங்களுக்கு ஏற்ப [illegible] இருவரும் தங்களுடைய பாத்திரங்களுக்கு [illegible] நடித்திருக்கிறார்கள். படத்தின் ஒளிப் பதிவு, ஒலிப் பதிவு, காட்சி ஜோடனை எல்லாம் உயர்தரம். இந்தப் படம் வாஹினிக்கும் டைரக்டர் கே. வி. ரெட்டிக்கும் புகழ் தேடிக் கொடுக்கும் என்று எதிர் பார்க்கலாம்.





வாஹினியின்

குணசுந்தரி

கதை



"வந்தே மாதரம்" "போதனு" முதலிய அருமையான தெலுங்குப் படங்களை வெளியிட்டுத் தென்னிந்திய சினிமாக் கலைக்குப் புகழ் தேடித் தந்த வாஹினியார் தமது சொந்த ஸ்டுடியோவில் முதல் முதலாக "குணசுந்தரி" என்னும் தெலுங்குப் படத்தைத் தயாரித்து வெளியிட்டிருக்கின்றனர். பெண்களுக்குக் கணவனே தெய்வம் என்னும் இந்தியப் பண்பாட்டை ஊட்டும் கதை அமைந்திருக்கிறது. அரண்மனையில் பிறந்து அரசபோகத்தில் வளர்ந்த குணசுந்தரி அவலட்சணமான பிச்சைக்காரன் ஒருவனை மணந்து [illegible] குடிசை வீட்டுக் [illegible] புது வாழ்க்கையை ஆரம்பித்துப் பதி சேவை செய்து பரமன்







யோசித்து
பதில்
அளியுங்கள்

உங்கள் மோட்டாரில் எண்ணெய் சமீபமாக எப்பொழுது மாற்றப்பட்டது?

பழைய என்ணெயை வடித்து கழுவிய பின்பே ஷெல் X — 100 என்ணெயை நிரப்புங்கள்.



BSY 246 TH.

நம்பிக்கையூட்டுவது பர்மா - ஷெல்

தான் உயர்ந்திருக்கிறது. இதைச் சென்னை சர்க்கார் அவ்வப்போது வெளியிடும் புள்ளி விவரங்கள் நிரூபிக்கின்றன.

இதன் உண்மையை நாடகக் கொட்டகையில் விதிக்கப்படும் கட்டண விகிதங்களிலிருந்தும் அறியலாம். பத்து வருஷத்துக்கு முன்னால் நாடகக் கொட்டகைகளின் விகிதம் தரை ஆறு அணா என்றும் நாற்காலி இரண்டு ரூபாய் என்றும் இருந்தது. இருபது வருஷத்துக்கு முன்னாலும் முப்பது வருஷத்துக்கு முன்னால் கன்னையா கம்பெனியார் நாடகம் நடத்திய போதும் கூட இதே விகிதங்கள் தான் அமுலில் இருந்தன!

இன்றைக்கும் அதே கட்டணங்கள் தான் நாடகத்துக்கு என்னும்போது, நாடக சபைகளின் பொருளாதார நிலை எப்படியிருக்கும் என்று ஊகித்துக் கொள்ளலாம்.

இருநூறு ஆட்களுக்கு மேல் சாப்பாடு போட்டுச் சம்பளம் கொடுத்து நாடக சபை நடத்தி வரும் நவாப் ராஜமாணிக்கம் போன்றவர்களின் பொருளாதார நிலைமை சீர் கெட்டிருப்பதில் வியப்பென்ன?

கட்டண விகிதமும் வருமானமும் முன் போலவே இருக்கின்றன.

ஆனால் உணவுச் செலவு முதலியவை ஒன்றுக்கு நாலு மடங்கு ஆகியிருக்கின்றன! நாடக சபைகள் கடன் பட்டுத் திண்டாடுவதில் ஆச்சரியம் என்ன?

இந்த நிலைமையில், நாடகக் கலையை வளர்க்க வேண்டும் என்று நமது சர்க்கார் நினைத்தால், நாடக சபைகளுக்கு நன்கொடைகள் அளித்து வளர்க்க வேண்டும்.

நன்கொடை கொடுக்காமற் போனாலும் போகட்டும். நாடக சபைகளுக்குத் தமாஷா வரி போட்டுக் கழுத்தைப் பிடித்து நெரிக்காமலாவது இருக்கலாமல்லவா?

* * *

சங்கீத சபைகளுக்கும் நாடக சபைகளுக்கும் தமாஷா வரியை ரத்து செய்து விடும்படி நிதிமந்திரி கோபால ரெட்டியாரையும் அவர் மூலமாகக் காங்கிரஸ் சர்க்காரையும் கேட்டுக் கொள்கிறோம்.


இதைச் செய்வதால் சர்க்காருடைய வருமான நஷ்டம் சில ஆயிரத்துக்குமேலிராது.

ஆனால் சங்கீதக் கலைக்கும் நாடகக் கலைக்கும் பேருதவி செய்ததாகும்.

யானைக்கு அளிக்கும் உணவில் ஒரு கவளம் வாய் தவறி விட்டால் யானை அதை பெரிதாகக் கருதாது. ஆனால் அந்த ஒரு கவள உணவை ஒரு லட்சம் எறும்புகள் தின்று உயிர் வாழ முடியும்.

சங்கீதத்துக்கும் நாடகத்துக்கும் போடும் தமாஷா வரி சர்க்கார் யானைக்கு ஒரு சிறு கவளத்திலும் சிறு பகுதிதான். ஆனால் அதை ரத்து செய்வதால் சங்கீதக் கலையும் நாடகக் கலையும் புத்துயிர் பெறக்கூடும்.

ஒரு தமாஷ்!



சென்ற வாரத்தில் சென்னையில் ஒரு பிரசித்திபெற்ற நாடக சபையின் மூடுவிழா நடந்தது. பல பிரமுகர்களும் ரஸிகர்களும் பத்திராதிபர்களும் எழுத்தாளர்களும் மேற்படி மூடு விழாவுக்கு வந்திருந்தார்கள்.

ஸ்ரீ டி. கே. சகோதரர்களின் நாடக சபை மூடப்பட்ட அபூர்வ நிகழ்ச்சியைப் பற்றித்தான் சொல்கிறோம்.

ஸ்ரீ டி. கே. சகோதரர்கள் எந்தக் காரியத்தையும் சிறப்பாகவும் நிறைவாகவும் செய்வது வழக்கம். அந்த மரபை யொட்டி மூடு விழாவையும் நன்றாக நடத்தினார்கள். விழாவுக்கு நூற்றுக் கணக்கான நண்பர்களையும் ரஸிகர்களையும் அழைத்துச் சிற்றுண்டி விருந்து அளித்து "நாடகத்தை நிறுத்துகிறோம்" என்று அறிவித்து இறுதித் திரையை விட்டார்கள்.

ஸ்ரீ டி. கே. சகோதரர்கள் நாடகம் ஆட ஆரம்பித்து முப்பது ஆண்டுகள் ஆகின்றன. இந்த முப்பது ஆண்டில் ஆறாயிரம் இரவுகள் அவர்கள் நாடகம் நடத்தி யிருக்கிறார்கள்!

இந்த அரிய சாதனையை நினைத்தாலே நமக்குப் பிரமிப்பா யிருக்கிறது.

நாடகக் கலைக்கு அவர்கள் செய்துள்ள சேவை அற்ப சொற்பமானதல்ல. எத்தனையோ பழைய நாடகங்களைச் சிறப்பாக நடத்தி யிருக்கிறார்கள்; எத்தனையோ புது நாடகங்களை அரங்கேற்றி யிருக்கிறார்கள். நாடக சபையை மூடும் சமயத்திலேகூட வீர கட்டப் பொம்மன் கதையை "முதல் முழக்கம்" என்ற பெயருடன் அற்புத நாடகமாக அரங்கேற்றினார்கள். "ஔவையார்" நாடகம் அவர்களுக்கு என்றும் அழியாத புகழை அளித்துக் கொண்டிருக்கும். வேறு தேசங்களிலே இத்தகைய கலைத் தொண்டு செய்த நடிகருக்கும் நாடக சபைக்கும் அரசாங்கத்தார் எவ்வளவோ சிறப்புக்கள் செய்திருக்கக்கூடும். ஆனால் நமது நாட்டில் நடந்தது என்ன? "ஔவையார்" நாடகத்துக்குக்கூட நம் சுதந்திர காங்கிரஸ் சர்க்கார் தமாஷா வரியைத் தள்ளிக் கொடுக்க மறுத்து விட்டனர். ஸ்ரீ டி. கே. சகோதரர்கள் மனமுடைந்து போனதற்கு இது ஒரு முக்கிய காரணம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

ஸ்ரீ நவாப் ராஜமாணிக்கத்தின் மதுரை தேவி பால விநோத சபையார் மற்றொரு விதத்தில் நாடகக் கலைக்கு அரும் பெரும் தொண்டு செய்து வருகின்றனர்.

நாஸ்திகமும் நாச வேலையும் இளைஞர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு வரும் இக்காலத்தில் நமது பழைய காலத்துத் தெய்வீகக் கதைகளை அவற்றின் தெய்வீகம் கெடாமல் புதுமுறை நாடகங்களாக நடித்துச் சமூகத்துக்கு ஒப்பற்ற சேவை செய்து வருகிறவர் நவாப் ராஜமாணிக்கம்.

இவருடைய நாடகம் ஏதாவது ஒன்றைப் பார்த்து ரஸிக்காத தேசீயத் தலைவர் யாரும் இல்லை யென்று சொல்லலாம்.

நம்முடைய காங்கிரஸ் மந்திரிகளும், முக்கியமாக, கனம் கோபால ரெட்டியும் கொஞ்சம் மனதை விசாலப்படுத்திக் கொண்டு உடனே உதவி செய்ய முன் வரா விட்டால் நவாப் ராஜமாணிக்கமும் தமது கடையைக் கட்டும்படி நேரலாம் என்று எச்சரிக்கிறோம்.

அப்படி நேர்ந்தால் அது நம்முடைய காங்கிரஸ் சர்க்கார் கலைத் தேவிக்குச் செய்த இன்னொரு பெரிய சேவையாக இருக்கும். கட்டாய உண்ணாவிரதத்தினால் உடல் மெலிந்து குற்றுயிரா யிருக்கும் நாடகக் கலைத்தேவியின் தலையில் ஒரு பெரிய கல்லைத் தூக்கிப் போட்டுக் கொன்ற பெருமை நமது கலா ரஸிக மந்திரியான கனம் கோபால ரெட்டிக்குச் சேரும். அந்தப் பெருமை அவரைவிட்டு என்றும் அகலாது.

* * *

நாடக சபைகளுக்கு நேர்ந்திருக்கும் நெருக்கடிக்குத் தமாஷா வரி ஒன்றுதான் காரணம் என்று நாம் சொல்லவில்லை. வேறு பல காரணங்களும் இருக்கின்றன.

பேசும் படங்களின் பலமான போட்டி காரணமாக நாடகங்களின் கட்டண விகிதத்தை உயர்த்த முடிவதில்லை.

சென்ற எட்டு வருஷ காலத்தில் வாழ்க்கையின் எல்லாவிதச் செலவுகளும் உயர்ந்திருப்பதை எல்லாரும் அறிவார்கள். உணவுப் பண்டங்களின் விலை ஒன்றுக்கு நாலு மடங்கு ஆகியிருக்கின்றது. துணி விலையும் வீட்டு வாடகையும் மூன்று மடங்கு ஆகியிருக்கின்றன. சலவைக்கூலி, க்ஷவரக்கூலி எல்லாம் உயர்ந்து போயிருக்கின்றன.

மொத்தத்தில் சராசரியில் வாழ்க்கைச் செலவு ஒன்றுக்கு மூன்றரை மடங்கு ஆகியிருக்கிறது என்று சர்க்கார் வெளியிடும் புள்ளி விவரங்கள் சொல்லுகின்றன.

ஆனால் ஜனங்கள் அநுபவிக்கும் வேடிக்கை விநோதங்கள் தமாஷாக்களின் செலவு விகிதத்தில் எவ்வளவு உயர்ந்திருக்கிறது, தெரியுமா? சராசரியில் நாலு அணாவிலிருந்து நாலேமுக்காலணா ஆகியிருக்கிறது! அதாவது கால்பங்கு கூட உயரவில்லை. நூற்றுக்கு இருபது வீதம்

மல் லக்ஷ்யமான பெருமையுடன் விளங்குகிறது" என்று பூரித்து சொன்னார்.

இதையெல்லாம் கனம் கோபால ரெட்டிக்கு நாம் சொல்ல வேண்டியதே இல்லை. அவருக்கே தெரிந்த விஷயந்தான். ஆனால் அவருக்கு நாம் சொல்ல விரும்புவது, அப்படிப்பட்ட கர்நாடக சங்கீதத்தைக் காப்பாற்றச் சென்னை சர்க்காரின் சார்பில் கொஞ்சம் உதவி செய்யுங்கள் என்பதுதான்.

அவரிடம் நாம் கோரும் உதவி பிரமாதமானது அல்ல. சர்க்காருக்கு அதனால் பெரிய 'நஷ்டமோ கஷ்டமோ' ஏற்பட்டு விடாது. ஆனால் கர்நாடக சங்கீதத்துக்குப் பெரு நன்மை செய்ததாகும்.

சென்ற ஐம்பது அறுபது வருஷமாகக் கர்நாடக சங்கீதம் வளர்வதற்குச் சங்கீத சபைகள் பெரிதும் துணை புரிந்து வந்திருக்கின்றன. சர்க்கார் செய்ய வேண்டிய காரியத்தைச் சங்கீத சபைகள் செய்து வந்திருக்கின்றன என்று சொல்வது மிகையாகாது. சங்கீத சபைகளின் மூலமாகவே பல புதிய வித்வான்கள் பிரசித்தியடைந்திருக்கிறார்கள். ஒரு வித்வான் தம்முடைய முழு சாமர்த்தியத்தையும் காட்டிப் பாட விரும்புவது சங்கீத சபைகளில் நடக்கும் கச்சேரிகளில்தான். பெரிய மனிதர்கள் வீடுகளில் கல்யாணம் முதலிய வைபவங்களில் சங்கீதக் கச்சேரிகள் வைக்கிறார்கள். வித்வானுடைய புகழுக்குத் தகுந்தாற் போல் பணமும் கொடுக்கிறார்கள். ஆனால் கச்சேரி நன்றாகக் களை கட்டிச் சோபிப்பது சங்கீத சபைகளில் தானேயன்றி, கல்யாணங்களில் அல்ல. கல்யாணக் கச்சேரிகளில் விருந்தாளிகளை வரவேற்று உபசரிப்பதுதான் முக்கியம். சங்கீதம் ஒரு பக்கத்தில் நடந்து கொண்டிருக்கும். வரவேற்பும் உல்லாசப் பேச்சும் தமாஷும் சிரிப்பும் மற்றொரு பக்கத்தில் நடந்து கொண்டிருக்கும். எப்பேர்ப்பட்ட மகா வித்வான் கச்சேரி செய்தாலும் சபையில் நிம்மதி குறைவுதான். பாட்டின் தரமும் சுமாராகவே இருக்கும்.

ஆனால் சங்கீத சபைகளுக்கு வருகிறவர்கள் பணங்கொடுத்து டிக்கட் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். பாட்டைக் கேட்டு அனுபவிக்கும் நோக்கத்தோடு மட்டுமே வருகிறார்கள். சங்கீத வித்வானும் சபையோரைத் திருப்தி செய்வதற்காகத் தமது பூரண ஆற்றலையும் காட்டிப் பாடுகிறார். பாடுகிறவரும் கேட்கிறவர்களும் சங்கீதத்தில் ஐக்கியமடைகிறார்கள். சங்கீதக் கலை சிறப்படைகிறது. பாடகரின் வித்வத்தும் கேட்பவர்களின் ரஸிக தன்மையும் வளருகின்றன.

சில வருஷத்துக்கு முன்பு தென்னாட்டில் சங்கீத சபைகள் ஏராளமாகத் தோன்றி வந்தன. அப்படித் தோன்றிய சங்கீத சபைகளில் பல சமீப காலத்தில் மங்கி மறைந்து வருகின்றன. தடபுடலாகத் திறப்பு விழாக்கள் நடந்த பல சங்கீத சபைகளுக்கு ஓசைப் படாமல் இப்போது மூடுவிழா நடத்தி வருகிறார்கள்.

சில சங்கீத சபைகள் கர்நாடக சங்கீதத்தை மட்டும் நம்பியிராமல் அவ்வப்போது மார்வாரி நடனம், பஞ்சாபி நடனம், மெக்ஸிகோ ஜிப்ஸி நடனம் முதலியவற்றை ஏற்படுத்திக் காலட்சேபம் நடத்துகின்றன!

கர்நாடக சங்கீதத்துக்கு இந்தக் கதி ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் சங்கீதக் கச்சேரிகளை நமது சர்க்கார் 'தமாஷா' வாகக் கருதி 'தமாஷா வரி' வசூலிக்கும் விநோத ஏற்பாடுதான்!

சங்கீத சபைகளுக்குச் சர்க்கார் விதித்து வசூலிக்கும் தமாஷா வரியினால் கிடைக்கும் வருமானம் வெகு சொற்பம். மொத்தத்தில் சில ஆயிரம் ரூபாய் இருக்கலாம்.

ஆனால் இந்தச் சில ஆயிரம் ரூபாய் வருமானத்துக்காகக் கர்நாடக சங்கீதத்தின் வளர்ச்சியை சர்க்கார் தடை செய்து வருகிறார்கள். கலைத்தேவியின் தொண்டையைப் பிடித்து அமுக்கிக் கொன்று வருகிறார்கள். கலை ரஸிகரான கனம் கோபால ரெட்டியின் கையிலும் கலைத் தேவிக்கு இந்தக் கைங்கரியம் நடந்து வருகிறது!

• • •

தமாஷா வரியினால் குரல் வளையைப் பிடித்து அமுக்கப்பட்டு உயிர் போகும் தறுவாயில் உள்ள மற்றொரு அரிய கலை நாடகக் கலையாகும்.

ஒரு தேசத்தின் முன்னேற்றத்துக்கு நாடகக் கலை வளர்ச்சி எவ்வளவு முக்கியமானது என்பதைக் கனம் கோபால ரெட்டிக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை.

நாடகக் கலையின் தற்கால நிலைமையைப் பற்றி விசாரித்து அறிக்கை செய்யச் சென்னை சர்க்கார் ஒரு கமிட்டியை நியமித்திருக்கிறார்கள்.

ஆனால் விசாரணைக்கு அவசியமேயில்லாத ஒரு நிஸ்ஸந்தேகமான விஷயம் நாடகக் கலை சம்பந்தமாக இருக்கிறது. அது, தமாஷா வரியினால் நம்முடைய நாடகக்கலை நாசமடைந்து வருகிறது என்பதுதான்.

ஆடல் பாடல்

கர்நாடகம்

கோபால ரெட்டிக்கு ஒரு கோரிக்கை

நமது சென்னை சர்க்காரின் நிதி மந்திரி கனம் கோபால ரெட்டியார் விஷயமாகப் பலருக்குப் பல புகார்கள் இருப்பது இயற்கைதான். "நாம் இருக்கவேண்டிய இடத்தில் அவர் உட்கார்ந்திருக்கிறாரே!" என்று சிலருக்குக் கோபம். "நம்முடைய சட்டைப் பையில் ஓயாமல் அவர் கையைப் போடுகிறாரே?" என்று பலருக்குக் கோபம். காரசாரமாகவும் நிதானமில்லாமலும் அவர் சட்டசபையில் பேசுவதுபற்றி இன்னும் சிலருக்கு மனக் குறை. இப்படிப் பல காரணங்கள் அவர்மீது கோபப்படுவதற்கும் தாபப்படுவதற்கும் இருக்கின்றன.

ஆயினும் ஒரு விஷயத்தை எல்லாருமே ஒப்புக் கொள்வார்கள். இந்தச் சென்னை மாகாணத்தில் உள்ள சிறந்த கலா ரஸிகர்களில் கனம் கோபால ரெட்டி ஒருவர். டாக்டர் ரவீந்திரநாத தாகூரின் சாந்தினிகேதனத்தில் கல்விப் பயிற்சி பெற்றவர். இலக்கியம், கவிதை, சங்கீதம், நாடகம், நாட்டியம் முதலிய கலைகளில் அவருக்குச் சிறந்த பற்று உண்டு. அந்தந்தக் கலைகளின் நுட்பத்தை அறிந்து அநுபவிக்கும் ஆற்றலும் உண்டு. நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும் அவருடைய ரஸிகத்தன்மை வெளியாகும். கலைகளைப் பற்றி அவருடைய பேச்சுக்கள் எப்போதும் ரஸமாக இருக்கும்.

இப்படிப்பட்ட ரஸிகராகிய ஸ்ரீ கோபால ரெட்டிக்கு ஒரு கோரிக்கையைச் செய்து கொள்ள விரும்புகிறோம். கலை வளர்ச்சி சம்பந்தமான கோரிக்கைதான்.

ஆந்திர மாகாணம் உத்தேசித்திருந்தபடி ஜனவரி 26-ந் தேதிக்குள் பிரிந்திருந்தால் கனம் கோபால ரெட்டியும் நம்மைப் பிரிந்து போயிருப்பார். அதிர்ஷ்ட வசத்தினாலோ அல்லது துரதிர்ஷ்ட வசத்தினால்தானோ, ஆந்திர மாகாணம் இன்னும் பிரிந்தபாடில்லை. ஆகையால் கனம் கோபால ரெட்டி இன்னமும் நம்முடைய நிதி மந்திரியாக விளங்கி வருகிறார். ஆகையினாலேயே அவருக்கு நமது கோரிக்கையைச் செய்யவேண்டியிருக்கிறது. ஒருவேளை அவர் நம்மைப் பிரிவதற்கு முன்னால் ஒரு நல்ல காரியத்தைச் செய்து விட்டுப் போகவேண்டும் என்பது கலைத் தேவியின் திருவுள்ளமாயிருக்கலாம்.

• • •

பாரத புண்ணிய பூமி பூரண சுதந்திரம் பெற்று விட்டது. பிரிட்டிஷ் சர்க்காரோடு தொடர்பில்லாத குடியரசும் ஸ்தாபனமாகி விட்டது. சுதந்திர இந்தியாவில் எத்தனையோ முன்னேற்றங்கள் ஏற்பட வேண்டும். அந்த முன்னேற்றங்களில் கலை முன்னேற்றமும் முக்கியமானது. இந்திய சுதந்திரக் குடியரசு ஆனதின் அடையாளமாக இந்தியாவின் சொந்தக் கலைகள் வளர வேண்டும். இதை இந்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இந்திய சர்க்கார் ஹிந்துஸ்தானி சங்கீதத்துக் கென்றும் கர்நாடக சங்கீதத்துக் கென்றும் இரண்டு கலாசாலைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். இந்தக் கலாசாலைகளுக்காகப் பணச்செலவும் செய்கிறார்கள். "நாட்டிலே சாப்பாட்டுக்கு அரிசி இல்லை. சங்கீதத்துக்கு என்ன அவசரம்?" என்று அவர்கள் கேட்கவில்லை. "செவிக்குணவில்லாதபோழ்து சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்" என்று அருளிய மகா ரஸிகரின் வாக்கை இந்திய சர்க்கார் அப்படியே பின்பற்றாவிட்டாலும் செவிக்குணவும் அவசியந்தான் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். சங்கீதம் முதலிய கலைகளை வளர்ப்பதில் சிரத்தை காட்டுகிறார்கள்.

நமது புராதன கலைச் செல்வங்களில் கர்நாடக சங்கீதம் தலை சிறந்தது. இதை ஹிந்துஸ்தானி சங்கீத வித்வான்கள் உள்படக் கலா ரஸிகர்கள் அனைவரும் ஒப்புக் கொள்வார்கள். நம்முடைய மேன்மை தங்கிய கவர்னரின் மனைவியார் பவநகர் மகாராணி, "வடநாட்டுச் சங்கீதத்தில் பல கலப்புக்கள் ஏற்பட்டு விட்டன; ஆனால் தென்னாட்டுக் கர்நாடக சங்கீதம் தூய்மை கெடா

நெருக்கடியான சமயங்களில் பதறாமல் அடக்கமாக நடந்து கொள்வதே ஒரு தேசத்தின் சக்திக்கு எடுத்துக்காட்டாகும். அத்தகைய சந்தர்ப்பங்களில் தேசமக்கள் யாவரும் ஐக்கிய பாவத்துடனும் கட்டுக்கோப்பாகவும் நடந்து கொள்ள வேண்டும். நாகரிகத்தைக் கைவிட்டு விட்டுக் காட்டு பிராண்டிகளைப்போல் நிரபராதிகள்மீது பாய்வது தேசத்துக்குப் பலத்தைக் கொடுக்காது, பெருமையையும் கொடுக்காது" என்று ஜவாஹர்லால்ஜி கூறுகிறார்.

* * *

மிகா தைரியசாலியான பண்டித ஜவாஹர்லால் நேருவையும் ஒரு விஷயம் திகைக்க வைத்திருக்கிறது. அது தான் பாகிஸ்தான் வானொலி, பாகிஸ்தான் பத்திரிகைகள் இவற்றின் பொய்ப் பிரசாரம் ஆகும்.

"பாகிஸ்தான் பத்திரிகைகளின் ஆர்ப்பாட்டக் கூக்குரல்களையும் புளுகு மூட்டைகளையும் எப்படிச் சமாளிப்பதென்பது எனக்குத் தெரியவில்லை" என்கிறார் பண்டித நேரு.

சமீபத்தில் கல்கத்தாவிலே நடந்த கலகத்தில் இருபது முஸ்லிம்கள் மாண்டனர். ஆனால், பதினாயிரம் முஸ்லிம்கள் மாண்டதாகப் பாகிஸ்தான் வானொலியும் பத்திரிகைகளும் கூசாமல் புளுகின. படுபாதகமான மேற்படி பொய்யைப் பண்டித ஜவாஹர்லால் எடுத்துக் காட்டவே, அந்தச் செய்தி பொய் என்பதைப் பிறகு பாகிஸ்தான் பிரதமரே ஒப்புக் கொண்டார்.

பாகிஸ்தானிலுள்ள பாமர முஸ்லிம்களின் மத வெறி உச்ச நிலையை அடைந்திருப்பதற்கு அத்தகைய பொய்க் கூற்றுகளும் பித்தலாட்டப் பிரசாரமுமே காரணம் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

மற்றொரு விபரீதத்தையும் பாருங்கள்:

இந்தியாவில் நிகழாத சம்பவங்களை ஜோடித்து பொய்ப் பிரசாரம் செய்யும் பாகிஸ்தானிகள், பாகிஸ்தானில் நடக்கும் உண்மையான சம்பவங்கள் பொதுவாக வெளி உலகத்துக்கும் குறிப்பாக இந்தியாவுக்கும் தெரியாத வண்ணம் இரும்புத் திரை போட்டிருக்கிறார்கள். அந்த இரும்புத் திரைக்குள் இடும்பர்களின் வெறியால் நிகழும் பாதகங்கள் வெளியுலகத்துக்கு விவரமாகத் தெரியவில்லை. உண்மைச் செய்திகளை அனுப்ப முடியாமல் பத்திரிகை நிருபர்கள் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். சில பத்திரிகைப் பிரதிநிதிகள் விசாரணையின்றிப் பல வாரங்களாகச் சிறைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் வெளிநாட்டு நிருபர்களுக்கு, குறிப்பாக பாகிஸ்தான் பத்திரிகை நிருபர்களுக்கு எவ்விதத் தடையும் இல்லை. அவர்கள் எங்கு வேண்டுமாயினும் செல்லலாம். ஆனால், பொய்யை ஜோடிக்காமல் உண்மைச் செய்திகளை மாத்திரம் அவர்கள் அனுப்ப வேண்டும் என்பதுதான் இந்திய சர்க்காரின் கோரிக்கை.

கிழக்கு வங்காளப் பிரச்னை தீர வேண்டுமாயின், ஜவாஹர்லால்ஜி குறிப்பிட்டிருப்பது போல் இந்தியாவிலுள்ள ஜனங்கள் பதறாமல் அடக்கமாகவும் பொறுமையுடனும் இருக்க வேண்டும். இங்குள்ள முஸ்லிம்களுக்கு இம்மியளவும் தீங்கு இழைக்கக் கூடாது. இந்திய சர்க்காருடன் ஒத்துழைத்து அவர்கள் எடுத்துக் கொள்ளும் எந்த முறைகளையும் தேசமக்கள் யாவரும் ஒற்றுமையுடனும் கட்டுக்கோப்பாகவும் ஆதரிக்க வேண்டும்.

பிரிட்டிஷாரைப் பணியவைத்த காந்திய முறைகளின் சக்தி, பாகிஸ்தானையும் நிச்சயமாகப் பணிய வைத்தே தீரும் என்ற உறுதியான நம்பிக்கையுடன் இருக்கவேண்டும்.

களாயின், தணிந்த மதவெறித் தீ முற்றிலும் அவிந்து போயிருக்கும்.

ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள்? தணிந்த தீயைத் தங்களுடைய துஷ்பிரசாரத்தினால் மீண்டும் தூண்டிவிட்டார்கள்.

"இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் உள்ள பிரச்னைகளையெல்லாம் யுத்தம் என்ற பேச்சே இல்லாமல் சமரசமான முறைகளைக் கொண்டு தீர்க்க முற்படுவோம்" என்று பண்டித ஜவாஹர்லால் நேரு உறுதி கூறினார். பாகிஸ்தான் பிரதம மந்திரியும் அவ்வாறு உறுதி கூறவேண்டும் என்று கோரினார்.

அந்தக் கோரிக்கைக்கு பாகிஸ்தான் பிரதமர் இணங்கவில்லை. அதற்கு மாறாக பாகிஸ்தான் பிரசாரகர்களும் பத்திரிகைகளும் யுத்த வெறி பிடித்துக் கூக்குரலிடத் தொடங்கின.

கிழக்கு வங்காளத்திலுள்ள பாகிஸ்தான் அதிகாரிகள், ஹிந்துக்கள் அனைவரும் இஸ்லாம் மதத்தின் துரோகிகள் என்றும், எனவே அவர்கள் யாவரையும் ஒழித்துவிட வேண்டும் என்றும் பகிரங்கமாக ஆர்ப்பாட்டம் செய்து வருகிறார்கள்.

இன்று மீண்டும் மதவெறி ஜ்வாலை விட்டுக்கொண்டு கிழக்கு வங்காளத்திலுள்ள ஒன்றரைக் கோடி ஹிந்துக்களையும் சுபளீகரம் செய்யத் தொடங்கியிருக்கிறது.

பாகிஸ்தானிகளுடைய அதர்ம ஆட்சியின் விளைவாக இன்று வங்காள மக்கள் நரகவேதனைக்கு ஆளாகியிருக்கிறார்கள். புனித கங்கை பாய்ந்தோடும் வங்கத்தில் ஹிந்துக்களின் உதிர வெள்ளம் ஓடி வருகிறது. மானிட வர்க்கத்துக்கே உயர்வைக் கொடுத்து அமர வாழ்வு பெற்ற கவியரசர் தாகூரும், தேசபந்து சித்த ரஞ்சன தாஸும், நேதாஜி சுபாஷ் சந்திர போஸும் பிறந்த வங்கத்தில் மனித வர்க்கத்தையே இழிவு படுத்தும் மத வெறி தலைவிரிகோலமாகத் தாண்டவமாடி வருகிறது.

மதவெறிக்கு இலக்காகி மடிந்தவர்கள் போக மீதியுள்ள ஹிந்துக்கள், சிசுக்களும் பெண்களும் வயோதிகர்களுமாகப் பதினாயிரக் கணக்கில் கிழக்கு வங்காளத்திலிருந்து மேற்கு வங்காளத்துக்கு வந்த வண்ணமாக இருந்து வருகிறார்கள்.

இத்தகைய கோரமான நிலைமைக்குப் பரிகாரம் என்ன? பாகிஸ்தானில் ஹிந்துக்களின் பூண்டே இல்லாமல் ஒழித்துவிடக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் பாகிஸ்தான் தலைவர்களின் அநியாய எண்ணம் பூர்த்தி பெறுவதை இந்தியா பார்த்துக் கொண்டிருப்பதா? பாகிஸ்தானிலுள்ள ஹிந்துக்களுக்கு மேற்கொண்டு சகிக்கமுடியாத இன்னல்கள் நேராமல் தடுப்பது எப்படி? யுத்தத்தைத் தவிர மற்ற முறைகளால் அதைத் தடுப்பது சாத்தியமா?

தற்போது இந்தியாவிலுள்ள சகலருடைய மனதும் அத்தகைய கேள்விகளால் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை.

கிழக்கு வங்காளத்தில் ஏற்பட்டுள்ள நிலைமையின் நெருக்கடியையும் அவசரத்தையும் இந்திய சர்க்கார் நன்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பதை, பண்டித ஜவாஹர்லால் நேரு அகில இந்தியா வானொலி மூலம் தேசத்துக்கு விடுத்துள்ள செய்தி காட்டுகிறது.

அந்தச் செய்தியில் ஜவாஹர்லால்ஜி கிழக்கு வங்காளப் பிரச்னையையொட்டி இந்தியாவின் கடமையையும் மகா ஜனங்களின் பொறுப்பையும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்.

"அந்தப் பிரச்னையைத் தீர்ப்பதில் இனிச் சிறிதும் தாமதம் கூடாது. இப்போதுள்ள நிலைமை இப்படியே நீடிக்கவும் இடம் கொடுக்கக் கூடாது" என்று வலியுறுத்தியிருக்கிறார்.

அதற்காக அவர் கல்கத்தாவுக்கு விஜயம் செய்து மேற்கு வங்காளத் தலைவர்களுடன் தீவிரமாக ஆலோசனை நடத்தி வந்திருக்கிறார்.

பிரிட்டிஷாரை எதிர்த்து நடத்திய தேசியப் போராட்டத்தில் மகாத்மா காந்தி கைக்கொண்ட சாத்வீக முறைகளைக் கண்டித்து ஏளனம் செய்தவர்கள் இருக்கத்தான் செய்தார்கள். எனவே, பாகிஸ்தான் விஷயமாக இந்திய சர்க்கார் கைக் கொண்டு வரும் காந்திய முறைகளைக் கண்டித்து ஏளனம் செய்யும் அவசரவாதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அவர்களுக்குக் குடியாக இந்தியாவின் பிரதம மந்திரி அளித்துள்ள பதில் இதுதான்:

"நாம் மந்திரவாதிகள் அல்ல; வானத்தை வில்லாக வளைப்பது, மணலைக் கயிறாகத் திரிப்பது போன்ற காரியங்களைச் செய்துவிட முடியாது. எனினும் மகத்தான பிரச்னையைத் தைரியத்துடனும் நல்லெண்ணத்துடனும் உறுதியுடனும் சமாளிக்கும் ஆற்றல் நமக்கு உண்டு என்ற நம்பிக்கையுடன் நாம் முயற்சி செய்ய முடியும்.

இரும்புத் திரைக்குள் இரும்பர்களின் வெறி

முன் காலத்தில் அரக்கர்கள் என்று ஒரு பிரிவினர் இருந்ததாகவும் அவர்கள் மானிட வர்க்கத்துக்கு எத்தனை எத்தனை கொடுமைகளையோ இழைத்ததாகவும் கேள்விப்பட்டிருக்கிறோம். அவ்வளவு பயங்கரமான அக்கிரமங்கள் நடந்திருக்க முடியுமா என்று சந்தேகப்படுகிறோம். அவ்வளவு மிருகத்தனமான அட்டூழியங்களைச் செய்த கொடியர்கள் சாதாரண மனித ரூபமாக இருந்திருக்க முடியுமா என்று கேட்கத் தோன்றுகிறது.

அதன் காரணமாகத்தானோ என்னவோ அத்தகைய அரக்கர்கள் மரங்களைப் போலவும் மலைகளைப் போலவும் வானமளாவ வளர்ந்தோங்கி நின்றதாக வர்ணிக்கப் படுகின்றது.

அவர்களுடைய குரூரத்தனத்தை ஜனங்கள் கற்பனை செய்து கொள்ளவும் முடியாது என்பதற்காகத்தானோ என்னவோ அந்த அரக்கர்கள் வேங்கை, ஓநாய், கழுதைப் புலி, காண்டா மிருகம், காட்டெருமை முதலிய கொடிய மிருகங்களின் முகங்களை உடையவர்களாக இருந்தார்கள் என்றும் பௌராணிகர்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

எக்காலத்திலும் எந்த உலகத்திலும் நடந்திருக்க முடியாத கட்டுக் கதைகளை இந்தப் பௌராணிகர்கள் எழுதி வைத்து ஏன் மானிட வர்க்கத்தைப் பயமுறுத்துகிறார்கள் என்று கருதியவர்கள் தங்களுடைய அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டிய நிலைமை இப்போது ஏற்பட்டிருக்கிறது.

ஏனெனில் அவற்றைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு அதிக கோரமான சம்பவங்கள் நமது கண் எதிரே நிகழ்ந்து வருகின்றன.

சென்ற பல யுகங்களில் அரக்க வர்க்கம் புரிந்ததாகக் கூறப்படும் அட்டூழியங்களைக் காட்டிலும் பயங்கரமான படுபாதகங்களை மனித ரூபத்திலுள்ள அரக்கர்கள் ஒரு சில நாட்களில் புரிந்து விட்டார்கள்!

காட்டு மிருகங்களின் பசிக்கு எல்லை உண்டு. அவைகள் கூட்டம் கூட்டமாக ஜனங்களைக் கொல்லுவதில்லை; அவர்களின் சொத்துக்களைக் கொள்ளையிடுவதில்லை; வீடுகளைத் தீயில் எரித்து வதைப்பதில்லை; பெண்களைக் கற்பழிப்பதில்லை.

ஆனால், மத வெறி பிடித்த இந்த நாதமர்களோ வெனில், ஆறறிவு படைத்த மனிதர் கண்டு நடுக்கும் காரியங்களைக் கூசாமல் செய்கிறார்கள். காட்டு மிருகங்களும் செய்யாத கொடிய அட்டூழியங்களைச் செய்து கோர நடனம் புரிகிறார்கள். உள்ள வெறியும் உதிர வெறியும் பிடித்த இவர்களின் பசிக்கு எல்லையே இல்லை!

* * *

இந்தியா பிளக்கப்பட்டு பாகிஸ்தான் ஏற்பட்ட பின் மத வெறியினால் மூண்ட பிரளயத்தை எத்தனை ஆண்டுகளாயினும் உலகம் மறக்க முடியாது.

ஹிம்சையில் திளைத்த உலகமே பாகிஸ்தானில் நிகழ்ந்த பாதகச் செயல்களைக் கண்டு திடுக்கிட்டதென்றால், அஹிம்சா மூர்த்தியான காந்தி மகானின் மனம் அவற்றைக் கண்டு என்ன பாடு பட்டிருக்கும்?

எனவே, அரக்கர்களுக் கெல்லாம் அரக்கர்களாக மாறிய மனிதர்களின் மனதை மாற்றுவதற்காக மகாத்மா காந்தி தவம் கிடந்தார். முள்ளிலும் கல்லிலும் காட்டிலும் கால் கடுக்க நடந்தார். மிருகங்களாக மாறிய மனிதர்களை மீண்டும் மனிதர்களாய்ச் செய்வதற்காக அரும்பாடு பட்டார். ஏட்டிலும் எழுத்திலும் அடங்காத, கற்பனையும் செய்ய முடியாத கொடுமைகளை அடக்கி நிரபராதிகளான மக்களைக் காப்பாற்றுவதற்காக இறுதியில் தமது உயிரையே அர்ப்பணம் செய்தார்.

காந்தி மகானின் தியாகமும், நமது தலைவர்களின் நிதானமும், பாரத மக்களின் பொறுமையும் பாகிஸ்தானில் மூண்ட பிரளய அக்னியைத் தணித்தன.

நமது தலைவர்களைப்போல் பாகிஸ்தானின் தலைவர்களும் தங்களுடைய பொறுப்பையும் தங்களுடைய நாட்டின் எதிர்கால க்ஷேமத்தையும் உன்னி நிதானமாக நடந்து கொண்டிருப்பார்

சேர்ந்துள்ள இந்தச் சமயத்தில் நிதி மந்திரி மேற்கொண்டு புதிய வரிகளை விதிக்காதது பாராட்டுதற்குரியது. இதைத் தவிர, மிச்சம் ஏற்படும் தொகையில் பெரும் பகுதியைக் கொண்டு பல வேறு வரிகளைக் குறைத்திருப்பது பற்றியும் மகிழ்ச்சி அடைகிறோம். ஆனால், நிதிமந்திரி அறிவித்துள்ள வரிக்குறைப்பு முறைகளால் கம்பெனிகளும் பெரிய வர்த்தகர்களும்தான் பலன் அடைவார்களே யன்றி, நடுத்தர வகுப்பார் அல்லது ஏழைகளின் பளுவைக் குறைக்கக்கூடிய அம்சம் ஒன்றுகூட அவரது திட்டத்தில் இராதது பெருங் குறையாகும். நகரங்களிலிருப்போர் அந்தந்த நகர எல்லைக்குட்பட்ட இடத்துக்கு எழுதும் கார்டுகளின் கட்டணம் முக்காலணாவிலிருந்து அரை அணாவாகவும் கவர்களின் கட்டணம் இரண்டு அணாவிலிருந்து ஒரு அணாவாகவும் குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் கிராமங்களிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்கு எவ்வித பலனும் ஏற்படாது. மற்ற வரிகளைக் குறைத்தாலும் குறைக்காவிட்டாலும் இந்தியா முழுதும் கார்டு விலையை அரையணாவாகவும் கவர் விலையை ஒரு அணாவாகவும் குறைத்திருந்தாலே அது ஜனங்களிடையே மிகுந்த உணர்ச்சியை உண்டுபண்ணியிருக்கும். குடியரசைப் பெற்ற முதல் வருஷத்திலேயே இந்திய சர்க்கார் பரம ஏழைகள் முதல் பெரிய செல்வந்தர்கள் வரையில் சகல ஜனங்களுக்கும் பலனளிக்கக்கூடிய வகையில் ஒரு காரியத்தைச் செய்தார்கள் என்ற நல்ல பெயர் ஏற்பட்டிருக்கும். வர்த்தகர்களின் வரிப் பளுவைக் குறைப்பது தேசத்தின் பொருளாதார நலனுக்கும் உற்பத்திப் பெருக்கத்துக்கும் அவசியமானதுதான். எனினும் பெரும்பாலான ஏழைகளுக்குப் பரிகாரம் அளிக்கக்கூடிய ஓர் அம்சமாவது வரவு செலவுத் திட்டத்தில் அடங்கியிருக்க வேண்டியது அதைவிட அத்தியாவசியம்.

ஆகாச வெடி

நேருஜியின் புகழைக் கண்டு வயிற்றெரிச்சலுடன் பேசிய இலங்கைச் சட்டசபை அங்கத்தினர் ஸ்ரீ நாகநாதன் என்பவர் 'நேருவின் பெயர் இன்னும் சில தினங்களில் ஒரு மூலைக்குப் போய் விடும்' என்றார்.

—இலங்கைச் செய்தி.

இன்னும் சில தினங்களில் என்ன? நேருவின் பெயர் இப்போதே ஒரு மூலை முடுக்கு பாக்கியில்லாமல் போய்க் கிடக்கிறதே!

★

"பிரஞ்சு தேசிய அஸெம்பிளியில் பிரதிநிதிகளுக் கிடையே சண்டை மூண்டு ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டார்கள். இதற்குள் நேரமாகி விட்டதால் சபை ஒத்தி வைக்கப்பட்டது."

—பாரிஸ் செய்தி.

"மறுபடியும் சபை கூடும்போது அங்கத்தினர்கள் தங்கள் கடமைகளை விட்ட இடத்தில் தொடங்குவார்களா?" என்று கேட்கப்படுகிறது!

"ரேஷன் கடையிலிருந்த ஸ்டோர் கீப்பர் ஒருவர் சர்க்கரையைச் சரியானபடி விநியோகம் செய்யாமல் சர்க்கரை மோசடி செய்ததற்காகத் தண்டனைக்குள்ளானார்." —ஒரு செய்தி.

இதைச் சர்க்கரை மோசடி என்றும் கூறலாம்!

★

"நாம் சாப்பிடும் ரேஷன் அரிசி ரப்பர் போலுள்ளது."

—சென்னை சட்டசபை அங்கத்தினர்.

சரிதான், சரிதான்; சபை அங்கத்தினர்கள் சிலருடைய பேச்சு அசாதாரணமாக நீண்டு கொண்டு போவதின் மர்மம் இப்போதல்லவா விளங்குகிறது!

★

"பாகிஸ்தான் நாணய மதிப்பை இதர நாடுகள் யாவும் அங்கீகரித்திருக்கும்போது இந்தியா மட்டும் ஒப்புக்கொள்ள வில்லை." —கீழ் வங்கப் பிரதமர்.

இதற்கு பாகிஸ்தானுடைய நாணயத்தைப் பற்றி இதர நாடுகள் அறிந்து கொள்ளாமலிருப்பதே காரணமாகும்.

தயவு செய்து மன்னிக்கவும்

சென்ற இதழில் அறிவித்தபடி "ராமகிருஷ்ண உபநிஷதம்" இந்த இதழில் தொடங்காதது பற்றி நேயர்கள் மன்னிக்கவும். ராஜாஜி அவர்கள் மேற்படி தலைப்பில் எழுதும் தொடர் கட்டுரைகள் அடுத்த கல்கி இதழில் ஆரம்பமாகின்றன.

மலர் 9

கல்கி

தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற - எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

இதழ் 32

என்ன சேதி?

அந்தப் பாதகர்கள் யார்?

சென்னையிலிருந்து ஐம்பது மைல் தூரத்திலுள்ள கும்மிடிப்பூண்டிக்கு அருகில் நேர்ந்த கல்கத்தா மெயில் விபத்து தேச மக்கள் யாவரையும் திடுக்கிடச் செய்திருக்கிறது. அதில் மாண்டவர்களின் தொகை தெய்வச் செயலாக அதிகம் இல்லை என்றாலும், அந்த விபத்து மகா கோரமானது என்பதில் சந்தேகமில்லை. சதிகாரர்களின் நாச வேலையே விபத்துக்குக் காரணம் என்று, நேரில் சென்று பார்வையிட்ட உயர்தர அதிகாரிகள் நிச்சயமாகக் கூறுகிறார்கள். அப்படியானால் அத்தகைய பாதகர்களான சதிகாரர்கள் யார்? எந்த நோக்கம் கொண்டு அவர்கள் ரயிலைக் கவிழ்த்து நிரபராதிகளின் உயிர்களைக் கொள்ளை கொண்டார்கள்? அதன் சம்பந்தமான விவரங்கள் எல்லாம் கும்மிடிப்பூண்டியில் நடைபெற்று வரும் விசாரணையிலிருந்து வெளியாகலாம்.

விபத்தில் மாண்டவர்களின் குடும்பங்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் அனுதாபந் தெரிவித்த சென்னை கவுன்ஸிலில் நிறைவேறிய தீர்மானத்தை யொட்டி மந்திரி டாக்டர் ராஜன் பேசியபோது, இனி அத்தகைய விபத்து ஏற்படாமல் தடுக்கச் சர்க்கார் தீவிர முயற்சி செய்வார்கள் என்றும் தகுந்த முறைகளை எடுத்துக் கொள்வார்கள் என்றும் கூறினார். இவ்விஷயமாக சென்னைச் சர்க்காரும் இந்திய சர்க்காரும் கைக்கொள்ளும் சகல முறைகளையும் பொது மக்கள் பூரணமாக ஆதரிப்பார்கள் என்பது நிச்சயம்.

சுகம் தானா?

சுகம் என்றால் என்ன? துக்கம் என்றால் என்ன?


இந்தக் கேள்விக்குத் தத்துவ ஞானிகள் மாதக் கணக்கிலும் வருஷக் கணக்கிலும் கூட அர்த்தம் சொல்லுவார்கள். அதைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. யாதொரு வேலையும் செய்யாமல் எப்போதும் வீண் காலம் கழிப்பதே சுகம் என்று நினைப்பவர்கள் எத்தனையோ பேர் இருக்கின்றனர். சோம்பித் திரியாமல் எப்போதும் பணி செய்வதே சுகம் என்று நினைப்போர் இருக்கின்றனர். இதெல்லாம் அவரவர் அபிப்பிராயத்தைப் பொறுத்த விஷயம். ஆனால், எது சுகம் என்பதையும் எது துக்கம் என்பதையும் பொருளாதார நிபுணர்கள் புள்ளி விவரங்களுடன் நிர்ணயித்திருக்கிறார்கள். வரவு ஒரு ரூபாய், செலவு பதினைந்து அணா = சுகம்; வரவு ஒரு ரூபாய், செலவு ஒரு ரூபாய் இரண்டணா = துக்கம் என்பதுதான் நிதி நிபுணர்களின் முடிவாகும்!

குடியரசு இந்தியாவின் முதலாவது வரவு செலவுத் திட்டத்தைப் பார்லிமெண்டில் சமர்ப்பித்துள்ள இந்திய சர்க்கார் நிதி மந்திரி டாக்டர் ஜான் மத்தாய் இந்தியாவுக்குச் சுகம்தான் என்று காட்டியுள்ளார். அந்தத் திட்டத்தின்படி 1950—51ம் வருஷத்தில் இந்தியாவின் வருமானம் 347 கோடியே 50 லட்சம் என்றும், செலவு 337 கோடியே 88 லட்சம் என்றும், மிச்சம் 9 கோடியே 62 லட்சம் என்றும் மதிப்பிட்டிருக்கிறார். காஷ்மீர் யுத்தச் செலவு, அகதிகள் பாதுகாப்புச் செலவு போன்ற எதிர்பாராத பல பெரும் செலவுகள் ஏற்பட்டும் கூட அடுத்த வருஷத்தில் ஒன்பதரைக் கோடி ரூபாய்க்கு மேல் மிச்சம் ஏற்படும் என்று நிதி மந்திரி அறிவித்திருப்பது இந்தியாவின் நிதி நிலைமை திருப்திகரமாக இருக்கிறது என்பதையே காட்டுகிறது.


பெரிய குறை

பல பிரச்னைகளையும் செலவினங்களையும் இந்திய சர்க்கார் சமாளிக்கும்படி

முதலைக் கண்ணீர்!



பாகிஸ்தானில் கோர தாண்டவமாடும் மதவெறிக்கு இரையாகாமல் இந்தியாவுக்கு ஓடிவரும் ஹிந்துக்களுக்கு எவ்வித பாதுகாப்பும் அளிக்காததுடன் இந்தியாவுக்கு வரமுடியாமலும் பாகிஸ்தான் சர்க்கார் தடுத்து வருகிறார்கள்.




அட்வகேட் அவசரமாகக் கோர்ட்டுக்கு பெட்டியுடன் கிளம்பினார்.



பஸ்ஸில் அவர் பெட்டிக்கருகில் ஒரு ஸெலூன்காரர் பெட்டியும் இருந்தது.



மறந்து விட்ட பெட்டியை கண்டக்டர் கூப்பிட்டுக் கொடுத்தார்.



'யுவர் ஆனர்' பஸ்ஸில் என் பெட்டி மாறிவிட்டது. கேஸை ஒத்திப் போட வேண்டும் என்றார் அட்வகேட்.

கல்கி

பொருளடக்கம்

மலர் 9 இதழ் 32 — மார்ச் 12 — விரோதி௵ மாசி 29௳

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.



தினசரி காலை 9 மணி முதல் 12 மணிவரை மாலை 2-30, 6 & இரவு 9-30 மணி காட்சிகளுக்கு ரூ. 2-8-0, 1-14-0 வகுப்புகளுக்கு அட்வான்ஸ் புக்கிங் உண்டு

ஜகப் பிரசித்திபெற்ற இந்த
டிரேட் மார்க்கை கவனியுங்கள்.

இன்று
மிகவும் நேர்த்தியான
சைகிள்களில்



உலகிலேயே ஏராளமாக
உற்பத்தி செய்யப்படுவது

தி ஹெர்குலஸ் சைக்கிள் அன்
மோட்டார் கம்பெனி லிமிடெட்,
பர்மிங்ஹாம், இங்கிலாந்து



'ஹெர்குலஸ்' மூன்று வேக
ஹப்பை எல்லாவித மாடல்களி
லும் பொருத்தலாம். அல்லது
தனியாகவும் கிடைக்கும்.


ஹெர்குலஸ்
சைகிள்கள்

எல்லா பிரபல வியாபாரிகளாலும் விற்கப்படுவது

HCK/13/9


“க்ருஷன்”
எனது கீல் வாதத்தைச் சீக்கிரம் நிறுத்தியது
KRUSCHEN SALTS
கீல் வாதத்தின் கொடிய வலியினுல் தாக்கப்படும்வரை எப்பொழுதும் உற்சாகமாகவே தன் வேலையை நன்கு செய்து வந்தான்.
“என்னுல் வேலையே செய்ய முடியாதபடி அவ்வளவு மோசமானதாக இருந்தது. வேலைக்கே போக முடியாமலிருந்தது; வேலையை இழந்து விடுவேனோ என்றும் பயந்தேன். ஒரு சிநேகிதர் “க்ருஷன்” ஸால்ட்டைச் சாப்பிட்டுப் பார்க்கும்படி சொன்னார். ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்து உடனே குணம் தெரிந்தது. நான் இப்போது கீல்வாதத்தினுல் சிரமப்படாமலிருப்பதுமன்றி எனது வேலையை முன்னை விட நன்கு செய்யவே செய்ய முடிகிறது. இவ்வுணர்ச்சியை நிரந்தரமாகச் செய்யத் தினந்தோறும் தவறாமல் ஒரு சிறு அளவு க்ருஷன் சாப்பிடுகிறேன்.”
கீல் வாதத்தின் உபத்திரவத்திலிருந்து சீக்கிரமே குணமடைய விரும்பினுல் இப்பொழுதே க்ருஷன் சாப்பிட ஆரம்பியுங்கள். க்ருஷனில் உள்ள முக்கியமான ஆறு உப்புகள் உங்கள் ரத்தத்தைச் சுத்தம் செய்து, மூத்திரக் காய்களை இயற்கைப் பிரகாரமே வேலை செய்யத் தூண்டுகின்றன. ரத்தத்தில் சேர்ந்துள்ள விஷப் பொருள்களை வெளியேற்றவும் இவை உதவுகின்றன. அதனுல் உங்களது வலிகள், பிடிப்புகள், அகலுவதோடுகூடத் தவறாமல் தினந்தோறும் ஒரு சிறு அளவு “க்ருஷனை”த் தொடர்ந்து சாப்பிட்டுவந்தால் அவ்வலிகள் அநேகமாய் உங்களை மறுபடியும் பாதிக்காது.
இன்றே “க்ருஷன்” வாங்குங்கள். மஞ்சள் பெட்டியில் ரூ. 1-10-0க்கு எல்லாக் கெமிஸ்டுகளிடமும் மற்றுமுள்ள எல்லாக் கடைகளிலும் விற்பனையாகின்றன.
நீங்களும் அந்த க்ருஷன்
உணர்ச்சியைப் பெறலாம்

நீங்கள் க்ஷவரம் செய்து கொள்ளும்போது என்னஏற்படுகிறது ?



கேரளா நுரையால் மிருதுவாக்கப் பட்டு சௌகர்யமாக்கப் பட்டதும் மயிர் எளிதில் வெட்டப்படுகிறது.

மயிர்கத்தியின் விளிம்பிலிருந்து இயற்கையாகவே தெறித்துப் போகிறது. ஆகையால் உங்களுக்குத் தாடிவெட்டுவதற்கு நேராக நிற்பதற்குத் தடித்த நுரை அவசியம். கேரளா ஷேவிங் சோப் நீண்டகாலம் இருக்கக் கூடியதும், மயிரை த்தடுக்கக் கூடிய நுரையை உண்டு பண்ணுவதும், ரஸாயனப் பொருள்களின் சேர்க்கையால் அது ஒவ்வொரு மயிரையும் எளிதில் வெட்டுவதற்கு மயிரை மிருதுவாகச் செய்கிறது. அது கத்தியை மெருகுபடுத்தி முகத்தையும் மிருதுவாக்குகிறது.

உங்கள் முகத்தினிடம் தயவைக் காட்டுங்கள்



ஷேவிங் ஸ்டிக்கை உபயோகியுங்கள்



பிளாஸ்டிக் டியூப்களில் அணா 11½.

ஸ்டிக் மட்டும் அணா 9.

கேரளா ஸோப் இன்ஸ்டிட்யூட், கள்ளிக்கோட்டை

டிபார்ட்மெண்ட் ஆப் இன்டஸ்ட்ரீஸ் அண்டு காமெர்ஸ்

கவர்மெண்ட் ஆப் மெட்ராஸ்

RUSTA'S-KS 63-TAMIL



ஒவ்வொரு வேளை உணவுடனும் ஆரோக்யம் தரும் பானம்

குடும்பத்தின் ஒவ்வொரு நபரும் விரும்பக்கூடிய நறுமணம் உள்ளது "ஓவல்டின்". விஷயமறிந்த தாய்மார்கள், காலையிலும் இரவிலும் மட்டுமின்றி ஒவ்வொரு வேளை உணவின் போதும் இந்த உணவு பானத்தைக் கொடுப்பதன் பயனை நன்குணர்வர்.

'ஓவல்டின்' மதிப்புவாய்ந்த அதிகப்படி உணவாக இருந்து விசேஷ வலுவும் ஜீவ சக்தியுமளிக்கும். சாதாரண உணவில் இது எப்பொழுதும் கிடைக்காது. குழந்தைகள் வேகமாகவுடன் வளரவும். இரவில் நன்றாகத் தூங்கவும் உதவுகின்றது.

"ஓவல்டினில்" பழுத்த பார்லி மால்டின் புஷ்டியும், ஜீவ சக்தியும் அளிக்கும் குணங்களும், சுத்தமான கட்டுப்பாலும், விசேஷமாகத் தயாரித்த கோக்கோவும், மதிப்பு வாய்ந்த இயற்கை பாஸ்படேட்களும், விடமின்களும் நிறைந்த அனைவின் அடங்கியுள்ளன.

இளையோர், நடுத்தர வயதினர், முதியோர் யாவருக்கும் வேண்டியது இது ஒன்றுதான்.

'OVALTINE'

ஓ வல் டி ன்



உலகில் மிகப் பிரசித்தி பெற்ற உணவு பானம்

விநியோகஸ்தர்கள்: ஜெதமாப்ஸ் டிரேடிங் கம்பெனி (இந்தியா) லிமிடெட்.

'ஓவ. 302.




நல்லாடை அணிந்த ஆண்கள் பளபளப்பான பாதரக்ஷைகளை அணிகிருர்கள்

[illegible]

[illegible]

கீவி

பாலிஷ் செய்யும்போதே
போஷாக்களிக்கிறது



[illegible]


மார்ச்
18ல்
முதல்
விஜய
குமாரி
விழியாலே மொழிபேசும் நடிப்பு,
உள்ளத்தை உருவகப்படுத்தும் நடனங்கள்,
சொல்லமைப்பால் சுவைபயக்கும்,
பாடல்கள், அனைத்தும் ஒன்றிய கற்பனை
திரைச் சித்திரம்......
டைரக்ஷன்-ஏ.எஸ்.ஏ.சாமி
ஜூபிடர் தயாரிப்பு
ஸ்டுடியோ-சென்ட்ரல்